2993

T.N.L.A. Debates

Official Report

Vol 45 NO2

13th November 1987


211,31 N87
N87.45.2
136538

வெளியீடு 8-6-1988 Issued 8-6-1988

2493

18 ஆகஸ்ட் 1988

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

529/Ac/88

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, நவம்பர் 13, 1987—தொகுதி 45—எண் 2
Friday, the 13th November 1987—Volume 45—No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

D 1
V211,31 N87
N87.45.2

136538
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

13—11—1987


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் — உடுக்குறியிட்ட வினாக்கள் . . . | 194—235 |
| 2. ஒழுங்குப் பிரச்சினை— மாநிலங்களவையில் தெரிவித்த கருத்து பற்றி முதலமைச்சரின் அறிக்கை. | 235—238 |
| 3. அரசினர் தீர்மானம்— விதி 55(6)-ஐத் தளர்த்தல் | 238 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) சென்னை வேளச்சேரி பகுதியிலுள்ள சாவடி இடத்தை கிராம நிர்வாக அலுவலர் சட்டத்திற்குப் புறம்பாக விற்றது குறித்து. | 238—243 |
| (ஆ) குமரி மாவட்ட ரப்பர் கழகத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம். | 243—245 |
| (இ) திருவில்லிப்புத்தூரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரியாதது குறித்து. | 245—247 |
| (ஈ) தென்காசி வட்டத்தில் கால்நடைகள் கருச்சிதைவு நோயினால் பாதிப்பு. | 247—250 |
| (உ) மருங்காபுரி தொகுதி, பொன்னியாறு அணை மண் மேடிட்டுள்ளதால் விவசாயிகள் பாதிப்பு. | 250—251 |
| அறிவிப்புகள்— | |
| (அ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. 1987 (ஆ.இ.) | 251 |
| (ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை அவைக்கு அளிக்கும் நாள். | 328 |

பக்கங்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1987. — 252

(ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987. — 252—253

(இ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1987—

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் — 254
திரு. அ. ரகுமான்கான் — 254—261
டாக்டர் கே. சமரசம் — 261—264
திரு. கு. ரமணி — 264—271
டாக்டர் அ. பொன்னுசாமி — 271—277
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 277—279
திரு. கே. சுப்பராயன் — 279—282
திரு. எஸ். வேணுகோபால் — 282—285

(ஈ) தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி — 296—297, 314—323
திரு. பொன் முத்துராமலிங்கம் — 297—301
திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 301—306
* திரு. கே. சுப்பராயன் — 306—309
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 309—310
திரு. மா. சுந்தரதாஸ் — 311—313

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். — 229—330

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் 13, வெள்ளிக்கிழமை

ஐப்பசி 27, பிரபவ— திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செய்ன்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

திருவொற்றியூர், மூலக்கடை, மாதவரம், கத்திவாக்கம் போன்ற பகுதிகளை சென்னை நகர காவல் துறையின்கீழ் கொண்டு வருதல்.

85— (*வினா எண் 4077) திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், மூலக்கடை, மாதவரம், கத்திவாக்கம் போன்ற பகுதிகளை சென்னை நகர காவல் துறையின்கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) : திருவொற்றியூர், மூலக்கடை, மாதவரம் ஆகிய பகுதிகளை சென்னைப் பெருநகர் காவல் நிலையத்தின்கீழ் கொண்டு வருவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. கத்திவாக்கம் பகுதி எண்ணூர் காவல் நிலைய எல்லைக்குள் உள்ளது. எண்ணூர் காவல் நிலையத்தை சென்னை பெருநகர் காவல் சரகத்தில் சேர்க்கும் திட்டம் எதுவும் இல்லை.

[1987 நவம்பர் 13

திரு. ஜி. கே. ஜெ பாரதி : மாண்புமிகு பேரவைத் தலை நாயகர் அவர்களே, சென்னைப் புற நகர்ப் பகுதிகளில் பல்வேறு தவறுகள் இழைக்கப்படுகின்றன. இப்பகுதிகளைச் சென்னை நகர்க் காவல் துறையிடம் சேர்க்கின்ற கருவுரு இருக்கின்றதா ? மேலும், கடந்த மூன்றாண்டுகளாக திருவொற்றியூர் பகுதியில் மட்டும் கிட்டத்தட்ட 48 கொலைகள் நிகழ்ந்து இருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு வேண்டிய சூழ்நிலைகளை அரசு உருவாக்குவதற்கு அந்தக் காவல் நிலயங்களை உடனடியாகச் சென்னை காவல் துறையோடு சேர்க்கின்ற கருவுருவை எப்பொழுது செயல்படுத்தப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1982-வது ஆண்டு அக்டோபர் திங்களிலே செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்திலுள்ள 12 காவல் நிலையங்களைச் சென்னை நகர்ப் பகுதிக்குக் கொண்டு வரலாம் என்ற அளவிற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி வில்லிவாக்கம், மதுரவாயல், ராஜமங்கலம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, மாதவரம், பரங்கிமலை, மீனம்பாக்கம், திருவொற்றியூர், ஆதம்பாக்கம், கே. கே. நகர் ஆகிய இந்தப் பகுதிகளைக் கொண்டுவந்தாலும் இவை உயர்நீதிமன்றத்தினுடைய எல்லைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். உயர்நீதி மன்ற எல்லைக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றால் முதலில் மாநகராட்சி எல்லைக்குள் வந்தால் தான் உயர்நீதிமன்ற எல்லைக்குள் வரும். உயர்நீதிமன்ற எல்லைக்குள் வந்தால்தான் அதற்குப் பிறகு காவல் நிலையத்தை இங்கே எடுக்க முடியும் என்று சட்டதிட்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினாலே இப்பொழுது அந்தக் காவல் சட்டத்தையே இதற்குப் பொருந்துமாறு திருத்தலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது. ஏனென்றால் மாநகராட்சி மன்றத்தை இந்தப் பகுதியை உள்ளடக்கிய வகையிலே திருத்தி அதற்குப் பிறகு உயர்நீதி மன்றத்தினுடைய அதிகார வரம்பை நீட்டிக்கின்ற நிலைமையை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமேயானால், தானாகவே இந்தக் காவல் நிலையங்களெல்லாம் சென்னை மாநகரத்திற்கு வந்துவிடும். ஆகவே. மாநகராட்சி மன்றத்தினுடைய முடிவுக்குப் போகின்ற அளவிற்கு, சிக்கல்கள் இல்லாத அளவிற்கு இந்தக் காவல் துறை சட்டத்திலேயே எந்தெந்தப் பகுதிகள் சென்னை மாநகரத்தினுடைய சென்னை கமிஷனருடைய பார்வையின் கீழே இருக்கலாம் என்ற அளவிற்குக் காவல்துறை சட்டத்தையே திருத்தலாம் என்ற அந்தச் செயற்குறிப்பு இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுபற்றி முடிவு எடுத்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1987 நவம்பர் 13]

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவையின் தலைநாயகர் அவர்களே, எண்ணூர், கத்திவாக்கம், மாதவரம், மணலி போன்ற காவல் நிலையங்களிலே காவலர்கள் ஆறு, ஏழு பேர்கள்தான் இருக்கிறார்கள். சென்னையிலே 50 காவலர்கள் இருக்கிறார்கள். காவல் நிலையங்களில் வேறுபாடு ஏன் ? மேலும் அந்தப் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் M. R. L. எண்ணெய் களவாடுதல், மேலும் கொலைக் குற்றவாளிகள் சென்னை மாநகரிலேயிருந்து அங்கே தஞ்சம் அடைகின்ற அளவிற்குக் கொலைகாரர்களுடைய சரணாலயமாக மாறிவிடுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே காவலர்களை அதிகப்படுத்துவீர்களா ? அதிகப்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் பரிந்துரையாவது செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல் நிலையங்களுக்குக் காவலர்கள் எந்த அடிப்படையிலே வைக்கப்படுகிறார்கள் என்ற குறிப்புகள் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்தப் பகுதிகளிலே எந்தத் தன்மையின் அடிப்படையிலே காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றும், மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்தப் பகுதியினுடைய பந்தோபஸ்து மற்றவற்றைக் கவனிக்கக் கூடுதல் செய்ய இயலுமா என்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்ல இயலும்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய செங்கல்பட்டு மாவட்டத் திலிருந்து திருவான்மியூர், வேளச்சேரி, விருகம்பாக்கம், திருமங்கலம், வில்லிவாக்கம், கே. கே. நகர் போன்ற பகுதிகள் சென்னையோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இது வரையில் அந்தக் காவல் நிலையத்தினுடைய ஜூரிஸ்டிக்ஷன் சென்னை நகருக்கு மாற்றப்படவில்லை. வழக்கு மன்றங் களுடைய ஜூரிஸ்டிக்ஷனும் சென்னை நகருக்கு மாற்றப்பட வில்லை. சிட்டி போலீஸ் ஆக்ட்டை அமெண்ட் செய்து மாற்றம் செய்வதற்குத் தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. பல ஆண்டு காலமாகியும் இன்னும் முடிவெடுக்கவில்லை. இன்றைக்கு நகரத் திலே இருக்கிற காவல் நிலையங்கள், பல கிராமங்களுக்கும் பொருத்தமற்றதாக இருக்கின்றன. ஆகவே, சென்னை நகரத் தில் இருக்கிற காவல் நிலையங்களை சென்னை நகரத்திற்கு மட்டும் என்று வைத்து, மற்ற பகுதிகளுக்கு வேறு காவல் நிலை யங்கள் வைக்கின்ற குறிப்பும் வழக்குமன்றத்தினுடைய ஜூரிஸ் டிக்ஷனை மாற்றுகின்ற செயற்குறிப்பும் விரைவில் அரசால் அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இந்தக் குறிப்பிட்ட பகுதியிலே, முதலிலே சென்னை நகர்ப்புற முனிசிபல் கார்ப்பரேஷன் அறிக்கை வெளியிட்டு பின்பு அப்பகுதிகளுக்கு உயர்நீதிமன்ற சாதாரண அசல் அதிகார வரம்பினை நீட்டிக்க மிகவும் கால தாமதம் ஆகிறது என்றும், அதனால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும் என்றும் கருதப்படுகிறது. எனவே, மேற் குறிப்பிட்டபடி நடவடிக்கை தொடரப்படவில்லை. அதற்கு மாறாக, சென்னை நகரக் காவல் சட்டம், 1888 பிரிவு 3-ஐச் சற்று திருத்தி அமைத்து, அப்பகுதிகளை, அதாவது, சென்னை உயர்நீதிமன்ற சாதாரண அசல் அதிகார வரம்பிற்குள் வராத, உள்ளூர் எல்லைக்குள் இல்லாத அப்பகுதிகளையும் சென்னைக் காவல் சட்டத்தின் ஒரு இணைப்பாகச் சேர்த்து, அப்பகுதிகளுக்குச் சென்னைக் காவல் சட்டத்தைப் பொருந்துமாறு செய்ய இந்தச் சட்டத்தைத் திருத்தலாமா என்பதைப் பற்றித் தான் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி.

86—(*வினா எண் 13239) திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடிக்குத் தேவையான நிலக்கடலை எண்ணெயில் 75 சதம் வெளி வியாபாரிகளிடம் வாங்கப்படுவது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) சிந்தாமணி சிறப்பங்காடிக்குச் சொந்தமான நிலக் கடலை அரைத்து எண்ணெய் எடுக்கும் எண்ணெய் தொழிற் சாலை சரிவர செயல்படாததால், தனியாரிடம் எண்ணெய் வாங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இதன் மீது எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை



திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணிக்குச் சொந்தமான ஒரு எண்ணெய் தொழிற்சாலையே இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கான இயந்திரம் பல இலட்சக்கணக்கான பணம் கொடுத்து வாங்கப்பட்டு, பல வருடங்களாகச் சும்மா கிடக்கிறது. நானே போய் அந்த இயந்திரத்தைப் பார்த்தேன். ஒரு நாளைக்கு 600 மூட்டை கடலை அரைக்கக்கூடிய இயந்திரம் அது. அப்படியிருந்துங்கூட அந்த ஆலையிலே உற்பத்தி செய்யாமல் வெளியிலே வாங்கி எண்ணெய் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இரண்டு வாரத்திற்கு முன், எண்ணெய் வித்துக் கார்ப்பரேஷன் அங்கே சுத்திகரிக்கப்பட்ட ஒரு எண்ணெயை அறிமுகப் படுத்தியபோது, நானும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அவர்களிடத்திலே சொன்னேன், இந்த ஆலை சும்மா கிடக்கிறது என்று. குறைந்த பட்சம் எண்ணெய் வித்துக் கார்ப்பரேஷனுக்கு அந்த ஆலையை ஒப்படைத்து, கமிஷன் பேசிஸில் வெளியிலேயிருந்து வாங்குவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தாமணிக்குத் தேவையான அளவுக்கு, எண்ணெய் கார்ப்பரேஷன் அந்த ஆலையை நடத்து கின்ற அளவுக்கு நிதி வசதிகள், மற்றவை குறைவாக இருந்த காரணத்தாலும், சில சமயங்களிலே நிலக்கடலை கிடைக்காத காரணத்தாலும், சில சமயங்களிலே வெளிச் சந்தையிலே இருந்து எண்ணெய் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று தனி அலுவலரால் கூறப்பட்டிருக்கிறது. 1985—86-ல் 6,000 டன்கள் வாங்கியதிலே 1,800 டன்கள் தனியார்களிடம் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்குக் காரணம் என்ன என்று கவனிக்கும் போது, சில சமயங்களிலே அதற்கு நிதிப் பற்றாக்குறை ஏற் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இந்த ஆலை சரிவர வேலை செய்யப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை உணர்ந்து, சிந்தாமணி எண்ணெய் ஆலையில் நிதி நிலை பற்றாக் குறையினையும், பருவ காலங்களில் நிலக் கடலையைக் கொள்முதல் செய்ய இயலாது இருக்கிற நிலைமையும் மாற்ற, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு 24—2—1987 முதல் நிலக்கடலை வாங்கப்பட்டு இருக்கிறது. நிதி நிலையைப் பெருக்க விவசாய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து ரூ. 54 இலட்சம் பங்குத் தொகை உதவியாக மாநில அரசு மூலம் 1987 மார்ச் திங்களில் பெறப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்த அடிப்படையிலேயும், சமீபத்தில் பெறப்பட்டுள்ள இந்த அரசு நிதி உதவி அடிப்படையிலும் சிந்தாமணி எண்ணெய் ஆலையைச் சரியாக இயங்க வைக்க முடியும் என்று கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை தனி அலுவலர் அவர்கள் தெரி

வித்து இருக்கிறார்கள். ஆகவே, அதை முழுவதும் இயங்க வைக்க
வேண்டுமென்பதுதான் நோக்கம். நிதிப் பற்றாக்குறையின் காரண
மாகத்தான் இடையிலே தட்டுப்பாடு ஏற்பட்டு, வெளியிலே வாங்க
வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த நிலைக்கு ஆளாகக்
கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

(முற்பகல் 10–10)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்பு
மிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்தின்படி
அந்த ஆலை நடத்தப்பட்டால் அது மிகவும் உபயோகமானதாக
இருக்கும். ஒரு நாளைக்கு 600 மூட்டை கடலை அரைக்கக் கூடிய
சக்தி அதற்கு இருக்கிறது. நிலக்கடலையை பருவ காலத்தில்
வாங்கி சேமித்து வைத்தால் சிந்தாமணி நிறுவனத்திற்குப்போக
ஏராளமான எண்ணெயை வெளியே நாம் கட்டுப்படியான விலைக்கு
விநியோகிக்க முடியும். அந்த முறையில் திட்ட வட்டமாக சிந்
தாமணியில் வெளியே இருந்து கமிஷன் கொடுத்து வாங்குவதை
நிறுத்தி, இந்த ஆலையை முழுமையாக ஓட்டி எண்ணெய் சப்ளை
பண்ணுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்
போன்று அந்தக் கருத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்
பதுதான் அரசாங்கத்தினுடைய முக்கியமான நோக்கமாகும்.
ஆகவே அரசின் சார்பாக பெரும் அளவில் பணத்தைச் செலவழித்து
சிந்தாமணி ஆலையில் இயந்திரங்கள் எல்லாம் பொருத்தப்பட்டு,
ஆட்கள் மற்றவர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு
அதனுடைய முழு சக்தியோடு அதனைப் பயன்படுத்தாவிட்டால்
அரசுக்கும் நஷ்டம், அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் நஷ்டம்,
அதுமட்டுமல்லாமல் வெளியே வாங்குவதன் மூலமாக எந்தவித
மான இலாபமும் ஏற்படப் போவதில்லை. நஷ்டத்தின் அளவு
தான் அதிகமாகும். அதை உணர்ந்துதான் இந்த உதவிகளை
எல்லாம் செய்ய வேண்டுமென்றும், மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொல்வதைப் போன்று 600 மெட்ரிக் டன் மணிலா
பயிர் தேவைப்படுகிற அளவிற்கு இருக்கிற தன்மையை மாற்றி,
கூட்டுறவு மொத்த விற்பனை சங்கத்தின் மூலமாக தேவைப்படு
கிற நிலக்கடலையை சப்ளை பண்ணுவதற்கும் அதனைக்கொண்டு
வரவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்
டிய நிதி வசதியை மத்திய கூட்டுறவு நிறுவனத்திலிருந்து பெற்
றிருப்பதன் காரணமாக அதிலே ஏதாவது பற்றாக்குறை ஏற்
படுமானால் அதைத் தவணை முறையில் கட்டுவதற்கும், இலாபத்
தைச் சம்பாதிக்கிற சூழ்நிலையையும் ஏற்படுத்தி விடுவோ





மானால் கட்டிவிட்டு பெற்று விட முடியும். இதைச் சக்தியற்றதாக
ஆக்கக்கூடாது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்
போன்று அரசாங்கத்தினுடைய நோக்கம். அதற்கான முயற்சி
களை அரசு தீவிரமாக மேற்கொள்ளும்.

காட்பாடி ஒன்றியத்திற்கென நிலவள வங்கி.

87— (*வினா எண் 15469) திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு
நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்பாடி தொகுதியில் காட்பாடி ஒன்றியத்திற்கென தனி
யாக ஒரு நிலவள வங்கி ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, காட்பாடி தொகுதியில் காட்பாடி ஒன்றியத்திற்கென
தனியாக ஒரு நிலவள வங்கி துவக்கக் கோரி கோரிக்கை எதுவும்
இதுவரை வரப்பெறவில்லை. எனவே, இப்பகுதியில் புதிய நில
வள வங்கி துவக்கப்படும் பிரச்சினை எழவில்லை.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,
காட்பாடி வட்டாரத்தில் வேலூர் நிலவள வங்கி ஒரு பெரிய
வங்கியாகும். அணைக்கட்டு, வேலூர் ஒன்றியம், மேலும் வேலூர்
நகரம், காட்பாடி ஒன்றியம் ஆகியவை சேர்ந்த ஒரு பெரிய
நிலவள வங்கியாக இருக்கிறது. அந்த வேலூர் நிலவள வங்கி
யில் காட்பாடி வட்டாரம் இணைக்கப்பட்டு செயல்பட்டு வரு
கிறது. ஆனால், கே. வி. குப்பம் நிலவள வங்கி என்பது அதற்
கான நார்ம்ஸ் அடிப்படையில் தகுதி பெறாத சூழ்நிலையில்
காட்பாடி தொகுதியில் இருக்கிறது. வேலூர் நிலவள வங்கி
யைப் பிரித்து காட்பாடியில் இணைத்து ஒரு வங்கி ஆரம்பிக்க
வேண்டுமென்று அந்தத் துறையின் மூலமாக அரசாங்கத்திற்குக்
கோப்புகள் வந்திருப்பதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.
ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கண்காணித்து
காட்பாடி— கே. வி. குப்பம் ஒன்றியத்தை இணைத்து ஒரு நில
வள வங்கியை ஏற்படுத்தி, காட்பாடியைத் தலைமையகமாக
அமைக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, வேலூர் நிலவள வங்கியின் விவகார எல்லையில்
வேலூர் வட்டத்தைச் சார்ந்த வேலூர், அணைக்கட்டு, கணி
யம்பாடி வட்டாரங்களும், மற்றும் காட்பாடி வட்டாரமும் அத
னுள் அடங்கியிருக்கின்றன. ஆகவே, காட்பாடியைப் பொறுத்த
வரையில் வேலூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் அது
அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் காட்பாடி வட்டாரத்தை
பொறுத்தவரையில் அதை ஒரு பெருநகரமாகச் சொல்லக்கூடிய
அளவில் எதுவும் இல்லை. பெரும்பாலும் வேலூர் நகரில்
வியாபாரம் அதிகமாக நடப்பதால் கடன் வாங்குகிற வசதியும்,

விற்பனை செய்கிற வசதியும், மற்ற வசதிகளும் வேலூர் நகரத்தை பொறுத்தே அமைந்திருக்கிறது. ஆகவே, வேலூர் நிலவள வங்கியின் மூலமாகப் பெறுகிற கணக்கைப் பார்த்தாலும்கூட, பெரும் பகுதி காட்பாடி வட்டாரம் வாங்குகிற சூழ்நிலையில்தான் இருக்கிறது. 1984–85ஆம் ஆண்டில் 144 பேர் 6 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றிருக்கிறார்கள் என்றால் அதிலே 77 பேர், கிட்டத்தட்ட பாதி பேர்கள் 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாயைக் காட்பாடி பகுதியில் இருப்பவர்கள் பெற்றிருக்கிறார்கள். 1985–86ஆம் ஆண்டில் 102 பேர்களில் நால்வாசிப் பேர் பெற்றிருக்கிறார்கள். 1986–87ஆம் ஆண்டில் 60 பேர்களில் கிட்டத்தட்ட 28 பேர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, மேலும், இந்த வேலூர் நிலவள வங்கியினுடைய 30–6–1987 கணக்குப்படி எடுத்துப் பார்த்தாலும், மொத்தக் கடன் நிலுவை 74 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. நபார்ட் குறிப்பிட்டிருக்கிற ஒரு கணக்கின்படி 70 இலட்ச ரூபாய் அளவிற்கு இருந்தால்தான் அது தன்னிறைவு பெற்ற ஒன்றாகக் கருத முடியும். இல்லாவிட்டால், இந்த நிலவள வங்கியைச் சேர்த்துக்கொள்ள இயலாது என்று நபார்ட் கூறும். ஆகவே, காட்பாடியைப் பிரித்துவிடுவோமேயானால், வேலூர் நிலவள வங்கி அந்தத் தகுதியை இழந்து நபார்டிலேயிருந்து பெறக்கூடிய பல்வேறு வசதி வாய்ப்புகளை இழக்கும். இது ஒன்று, மற்றொன்று, காட்பாடியிலே தனியாக நிலவள வங்கி வைத்து அதை வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் — மூன்றாவது கிலோ மீட்டரிலே வைப்பதன் மூலம் — நடத்த முடியாது என்ற காரணத்தாலும்தான் இப்போது இருக்கிற நிலையே எல்லோருக்கும் வசதியாகவும், வாய்ப்பாகவும் அமைந்திருக்கிற காரணத்தாலும், இது நிலை பெற்ற ஒன்றாக அமைய முடியும் என்ற காரணத்தாலும், இந்த நிலையே நீடிக்கலாம் என்ற கருத்து மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

### கும்பகோணம் பேருந்து நிலையம்

88—(*வினா எண் 7015) திரு. வி. தங்கவேலு, திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் பேருந்து நிலைய்த்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) ஆம்.



(ஆ) கும்பகோணம் நகரில் புதிய பேருந்து நிலையம் ஒன்று மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான முதற்கட்டப் பணி, ரூ. 23.00 இலட்சம் மதிப்பீட்டில், பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. சன்னல் கதவுகள் பொருத்துதல், மின் வேலைகள், பெயிண்ட் அடித்தல் மற்றும் சாலை வேலைகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டப் பணியில், கடைகள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த புதிய பேருந்து நிலையத்தை முழுமையாக முடிக்க ரூ. 65.4 இலட்சங்கள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கிற பணிகளில் பயணிகள் வந்து தங்குவதற்கு வசதியாக தனி அறைகள் கட்டுவதற்கு அந்த மதிப்பீட்டிலே நிதி நிலைமை ஒதுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த முதல் கட்டப் பணியில், 13 பேருந்துகள் நிற்கும் இடங்கள், 2 பொருள் வைப்பறைகள், ஆடவர்-பெண்டிர் பொதுவாக தங்குகின்ற, காத்துக்கொண்டிருக்கிற அறை, பயணச் சீட்டு வழங்கும் இடம், அந்தப் பேருந்து நிலையத்திற்கு உள்ளே உள்ள சாலைகள், இவைதான் நடைபெற்று வருகின்றன.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய பஸ் ஸ்டாண்டில் எல்லா பஸ் ஸ்டாண்டுகளிலும் உள்ளதைப் போன்று கட்டணக் கழிப்பிடங்களும், இலவசக் கழிப்பிடங்களும் இல்லை. இது தவிர, சுற்றுப்புறச் சுவர் இல்லை. இதனால் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. அதற்கு இணைப்புச் சாலை இல்லாமல் இருக்கிறது. தற்போது 60 அடி சாலை புதிதாக எடுக்க வேண்டும் என்று அங்குள்ள நகராட்சி மன்றம் தீர்மானம் போட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் விட, பழைய டவுன் பஸ் ஸ்டாண்டிலே 400 சிறு வியாபாரிகள் கடைகளை வைத்துக்கொண்டு, தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள். புதிய பஸ் ஸ்டாண்டிலே கடைகள் கட்டுவதற்கான புரவிசன் எதுவும் இல்லை, இடமும் ஒதுக்கப்படவில்லை. கடைகளும் கட்டப்படாமல் புதிய பஸ் ஸ்டாண்டு கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டால் மக்களுக்கும் கஷ்டம், அந்தப் பழைய வியாபாரிகளுக்கும் கஷ்டம். ஆகவே, அரசு தயவு செய்து, இதையெல்லாம் கருத்தில் கொண்டு புதிய பஸ் ஸ்டாண்டை சுற்றி புதிய கடைகளை அமைக்கவும், பழைய வியாபாரிகளுடைய வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்கவும், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் முன்வருமா ?

[1987 நவம்பர் 13

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டப் பணியில் 23 இலட்சம் ரூபாய் செலவில் 34 கடைகளும், சிற்றுண்டிச்சாலையும் கட்டப்பட உள்ளன. அதேபோல் மூன்றாவது கட்டப் பணியில் 26 பேருந்து கள் நிற்கும் இடங்களும், கட்டணக் கழிப்பறை ஒன்றும், நான்கா வது கட்டப் பணியில் 17 பேருந்துகள் நிற்கும் இடங்களும், நகரப் பேருந்துகளுக்கான மேடையும் அமைக்கப்பட உள்ளன. ஆகவே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற குறைகள் அநேகமாக தீர்க்கப்பட்டு விடும்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்படுகிற இந்தப் பேருந்து நிலையம் எப்போது துவக்கபபட்டது ? இதை விரைவில் முடிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது துவக்கப்பட்டது என்பது பிரச்சினை அல்ல. அது முடிவுற்றுக்கொண்டிருக்கிறது. விரைவில் முடிந்துவிடும் என்று முதல் பதிலிலேயே நான் தெரிவித்து இருக்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வீடுகட்டும் திட்டம்.

89—(* வினா எண் 9144) திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு என ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு அரசு நிர்ணயம் செய்துள்ள குறியீடு எவ்வளவு ?

(ஆ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் குறியீடு கணக்கிடப்படுகிறதா அல்லது மாவட்ட அளவில் கணக்கிடப் படுகிறதா ?

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆதி திராவிடர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 1986–87 ஆம் ஆண்டிற்கு, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் குறியீடு 25,504 வீடுகள், 1987–88ஆம் ஆண்டிற்குக் குறியீடு



1987 நவம்பர் 13]

25,000 வீடுகள் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் குறியீடு 1986–87ஆம் ஆண்டிற்கு 25,313 வீடுகள், 1987–88ஆம் ஆண்டிற்குக் குறியீடு 22,618 வீடுகள்.

(ஆ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் குறியீடு நிர்ணயிக்கப்படுவதில்லை. மாவட்ட அளவில் மட்டும் கணக்கிடப்படுகிறது. ஆனால், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும், குறியீடு கணக்கிடப்படுகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக ஆதி திராவிட மக்களுக்குக் கட்டித் தரப்படுகின்ற அந்த வீடுகள் 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மட்டுமே இதுவரையில் கட்டித்தரப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு ஆண்டில் 7, 8 மாதங்கள் தண்ணீர் சூழ்ந்த பகுதிகளாக உள்ளன. காவேரி, வெண்ணாறு பகுதிகளில் இருக்கிற தாழ்வான பகுதிகளில் 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகிற வீடுகள் சில நேரங்களில் தண்ணீரால் மூழ்குகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதற்குரிய திட்ட மதிப்பீட்டை, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மட்டுமாவது கொஞ்சம் உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசும், மாநில அரசும் இரண்டும் சேர்ந்து நிறைவேற்றுகிற திட்டம். ஒரு திட்டம் மத்திய அரசு தன்னுடைய பொறுப்பிலே செலவிட்டு நிறைவேற்றுகிற திட்டம். ஆகவே, இதற்கான முடிவுகளை எடுக்கிற போது மத்திய அரசோடு சேர்ந்து விவாதித்துதான் முடிவு எடுக்க முடியும். இதைப்பற்றி நேரம் வருகிறபோது மாநிலம் முழுமைக் கும்தான் இப்படிப்பட்ட திட்டங்களுக்கான முடிவுகள் எடுக்கப்பட முடியுமே தவிர தனியாக ஒரு மாவட்டத்திற்கு என்று எடுப்பது சிரமமாக இருக்கும். ஏன் என்றால் இப்போதே மலைப் பகுதிகளில் அதிகமாக செலவு ஆகும் இடங்களில் 30 சதவீதம் இதிலே யிருந்து அதிகச் செலவு செய்யலாம் என்று ஒதுக்கிக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை, தக்கசமயத்தில்—பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுகின்ற நேரத்தில்—சேர்த்து பரிசீலிக்கப்படும்.

## மிதி வண்டிகளுக்குக் கட்டணம்.

90—(*வினா எண்—12622) திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நகராட்சி, ஊராட்சிகளில் மிதி வண்டிகளுக்குக் கட்டணம் வாங்குவது நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—4—1973 முதல் தமிழகத்திலுள்ள எல்லா நகராட்சிகள் மற்றும் நகராட்சி, நகரியங்களின் எல்லைகளுக்குள் மிதி வண்டிகளுக்கு வரி விதிப்பது நிரந்தரமாக ரத்து செய்ய அனைத்து நகர் மன்றங்கள் மற்றும் நகராட்சி நகரியக் குழுக்களுக்கு அரசாணை எண் 527, ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் : 23—3—1973-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் மிதி வண்டிகள் மீதான வரியைக் கைவிடுவது பற்றிய கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் ஊரக வளர்ச்சித் துறையில் இல்லை.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் உபயோகிக்கின்ற மிதி வண்டிகளுக்கு நகராட்சிகளில் கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவிட்டு ஊராட்சிகளில் கட்டணம் வசூலிப்பது என்பது உண்மையிலேயே பொருந்தாத நிலை. ஆகவே, கிராமப்புறங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அந்த நிலையிலே ஊராட்சி ஒன்றியங்களிலும் மிதி வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிப்பது நிறுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன். அதோடு இன்றைய சூழ்நிலையில் ஒரு சில ஊராட்சிகளில் அதை வசூல் செய்கிறார்கள், ஒரு சில ஊராட்சிகளில் அதை வசூல் செய்யாமல் இருக்கிறார்கள். அந்த நிலையையும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் பொறுத்தவரையில் இவற்றை எல்லாம் ரத்து செய்து 1973 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்தபோது ஏன் ஊராட்சிப் பகுதிகளை விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இப்போது இந்த ஊராட்சிப் பகுதிகளில் இதை ரத்து செய்யலாமா என்று அரசு கேட்ட நேரத்தில் இதிலே பெரிய அளவுக்கு வருமானம் இருக்கிறது ; வேறு வருமானம் இந்தச் சிறிய ஊராட்சிப் பகுதிகளுக்கு இல்லை என்று அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்தந்த ஊராட்சிகள் விரும்பினால், அவர்களுடைய நிதி நிலைமை சரியாக இருந்தால், அவர்கள் அரசிடத்திலே கடனோ, மானியமோ கேட்கக்கூடாத ஒரு சூழ்நிலையில் இருந்





தால் ரத்து செய்யலாம் என்று விதி இருக்கிறது. அப்படி வசதி இருக்கின்ற ஊராட்சிகள் தாங்களாகவே ரத்து செய்து கொள்வதிலே அரசுக்கு ஆட்சேபணை இல்லை. இருந்தாலும் நகர்ப்புற பகுதிகளிலே இந்த வரிகளை எல்லாம் ரத்து செய்து இருக்கிற போது சாதாரண ஏழை மக்கள் வாழ்கிற கிராமப்புறப் பகுதிகளிலும் இதை ரத்து செய்து இருக்க வேண்டும். உடனடியாக அரசு இதிலே கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிப் பகுதிகளில் மிதி வண்டிகளுக்குக் கட்டணம் வாங்குவதை நிறுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமென்று அமைச்சரவர்களும் சொன்னார்கள். உண்மையிலேயே மகிழ்ச்சி. அதே நேரத்தில் கிராமப்புறங்களில் மாடுகள் பூட்டிய வண்டிகளுக்கும் இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது, அதையும் நிறுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு எது எது உதவியாக இருக்குமோ, அந்த அடிப்படையில் இதைப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. ஆர். வெங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிதி வண்டிகளுக்கு ஊராட்சிகளில் எவ்வளவு வரி வசூலிக்கப்படுகிறது? இப்போது மத்திய அரசாங்கத்தில் மோட்டார் வெஹிகிள்ஸ் டேக்சேஷன் ஆக்டைத் திருத்தி, 'மோட்டார் டேக்சஸ் ஒன் டைம் பேமெண்டாக, வாங்குவது போல, குறைந்த பட்சம் ஊராட்சிகளின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, 5 ஆண்டுகளுக்கு வாகனம் வாங்கும்போதே மொத்தமாக வரியை வசூலிப்பது பற்றிப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சி சட்டத்தின் 105-ஆவது விதியின் கீழ் அரை ஆண்டுக்கு ரூ. 4-க்கு மேற்படாமல் வரியாக விதிக்கப்படலாம் என்று இருந்திருக்கிறது. அதைத்தான் ரத்து செய்திருக்கிறார்கள். அதையொட்டி இன்றைக்கு ஊராட்சிகளுக்கும் ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதை அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் வரி விதிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இதே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் வரி விதிக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் வரி விதிப்பது என்பதே கஷ்டமான காரியம். அது ஒரு ரூபாயாக இருந்தாலும் சரி,

அல்லது இரண்டு ரூபாயாக இருந்தாலும் சரி. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரிவாங்குவதை வாகனம் வாங்கும்போது வசூலிப்பதா அல்லது வரி வாங்கும்போது வசூலிப்பதா என்பது பிரச்சினை. இது நடைமுறைகளுக்கு உகந்த காரியமல்ல. கொஞ்சம் கொஞ்சமாக, சிறுகச் சிறுக வரி வாங்குவது, வரி விதிப்பிற்கே ஒரு இலக்கணமாகும்.

### ஆலந்தூர் சாலை தரைப்பாலம்.

91—(* வினா எண் 13403)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் சாலை தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றி அமைக்க பணிகள் கால தாமதம் ஆகக் காரணம் என்ன?

(ஆ) பணி எப்போது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை மாநகராட்சியின் 300-வது ஆண்டு விழாவை ஒட்டி ஆலந்தூர் சாலை தரைப் பாலத்திற்கு மாறாக உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கான திட்டம் தோராயமாக ரூ. 200 இலட்சத்துக்கு மதிப்பிடப்பட்டு நிதி ஒதுக்கீட்டுக்கு சென்னை மாநகராட்சி அரசுக்கு எழுதியுள்ளது. இது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசு நிதி ஒதுக்கீடு செய்த பின்பு இப்பணி தொடங்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பரிசீலனையை விரைந்து முடித்து, 300-வது ஆண்டில் அந்தத் திட்டப் பணிகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும், அந்தச் சாலை மிக முக்கியமான கிண்டி தொழிற் பேட்டையை இணைக்கின்ற சாலையாக இருப்பதால், அந்தப் பகுதியில் ஒரு நாளைக்கு 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஜாபர்கான் பேட்டை தரைப் பாலத்தையும், ஆலந்தூர் சாலையையும் இணைக்கின்ற இரண்டு தரைப் பாலங்களும் மழைக் காலங்களில் செல்லமுடியாத நிலையிருக்கிறது. எனவே அதைக் கருத்திற்கொண்டு, 300-வது ஆண்டில் பரிசீலனை என்ற அளவில் இல்லாமல் கொள்கை முடிவாக எடுத்து, நடவடிக்கை எடுப்பார்களா?



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டுகின்ற திட்டம் ஒன்று மாத்திரம் அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்படவில்லை. 300-ஆவது ஆண்டையொட்டி சென்னை மாநகராட்சி பல திட்டங்களை நிறைவேற்றும்பொருட்டு அனுப்பியிருக்கிறது. அதற்காக குறைந்தபட்சம் ரூ. 300 கோடி தேவைப்படுகிறது. அதிலே ஒன்றுதான் இந்தப் பாலத் திட்டமும். பொதுவாக எல்லாத் திட்டங்களையும் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பும், சூழ்நிலையும் அரசுக்கு இருக்கிறது. அதிலே ஒரு திட்டமாக இது இருக்கின்ற காரணத்தால், எல்லாத் திட்டங்களையும் பரிசீலித்து, அதிலே உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய திட்டம் எது என்று முன்னுரிமை கொடுக்கின்ற சூழ்நிலைகளில் அரசு இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

### இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்ட பண உதவி.

92—(*வினா எண் 13528)—திரு. வை. பாலசந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கள்ளியங்காட்டில் உள்ள சிலோன் காலனியில் வசிக்கும் இலங்கை அகதிகள் அரசு வழங்கிய கடனில்கட்டிய வீடுகள் அரைகுறையாக இருப்பவைகளை முழுமையாகக் கட்டி முடிக்க அவர்களுக்குப் பண உதவி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கல்குளம் தாலுக்காவைச் சேர்ந்த ஆரூர் கிராமத்தில் உள்ள பனவிளை (கள்ளியங்காடு) என்னும் இடத்தில் 27 இலங்கை அகதி குடும்பங்களுக்கு ஏற்கெனவே வீட்டுக் கடன் வழங்கப்பட்டு விட்டது. இவர்களுக்குக் கூடுதல் கடன் எதுவும் வழங்க பிரேரணைகள் எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[1987 நவம்பர் 13

என். ஆர். இ. பி. திட்டத்திற்கு மத்திய அரசு அளித்த தொகை.

93—(*வினா எண் 14937)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

என். ஆர். இ. பி. திட்டத்திற்கு மத்திய அரசு 1981–82 முதல் 1986–87 ஆம் ஆண்டு வரை தமிழகத்திற்கு அளித்த தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு, 1981–82 முதல் 1986–87 ஆம் ஆண்டு வரை மைய அரசு தமிழகத்திற்கு அளித்த தொகை பின்வருமாறு :

| ஆண்டு. | மைய அரசு அளித்த தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1981–82 .. .. .. | 1480.00 |
| 1982–83 .. .. .. | 1960.00 |
| 1983–84 .. .. .. | 1800.00 |
| 1984–85 .. .. .. | 2555.59 |
| 1985–86 .. .. .. | 1934.95 |
| 1986–87 .. .. .. | 1811.00 |

(முற்பகல் 10–30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசு அளிக்கின்ற இந்தப் பணங்கள் எந்த இனங்களுக்கெல்லாம் செலவழிக்கப்படுகின்றன? சமீப காலத்தில் கிராமப்புறச் சாலைகள் எல்லாம் மோசமாக இருக்கின்ற சூழ்நிலையிலே, இந்தக் கிராமப்புறச் சாலைகளை என். ஆர்.ஈ.பி. யிலே போடவேண்டும் என்று சொன்னால் அதைப்போடுவதற்கு விதிகள் இல்லை என்று சொல்கிறார்களே? ஏதாவது விதிகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் இந்தச் சாலைகளைப் போடுவதையும் இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்திலே எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?



1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இரண்டு மூன்று திட்டங்கள் மத்திய அரசாலும், மாநில அரசினுடைய பங்குத்தொகைகளைப் பெற்றுக்கொண்டும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதிலே ஒவ்வொரு திட்டத்திற்கு ஒவ்வொரு அடிப்படைகள் நிர்ணயித்து செயல்பட்டு வரப்படுகிறது. இதிலே இந்தச் சாலைகள் போடுகின்ற திட்டம் இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்திலே சேர்க்கப்படாமல் வேறு திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தை பொறுத்த வரை நிலையான சொத்துக்கள் கிராமப்பகுதிகளுக்கு ஒரு சொத்தாக அமைந்து, அந்த கிராமப்பொருளாதாரத்தை உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதுவும் ஆண்டுக்கு ஒரு முறை இது மறுபரிசீலனை செய்யப்பட்டு அவ்வப்போது எந்தெந்த திட்டங்களுக்குச் செலவிடப்படலாம் என்கின்ற இந்த குறிக்கோளும் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த திட்டத்திலே, இந்தச் சாலைகளை போடுவதற்கான அந்தச் செலவை செய்ய முடியுமா என்பது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்தின் கீழ் 1981 லிருந்து 1987 வரை எத்தனை நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது ? அதோடு இந்தத் திட்டத்தின் கீழ் சமுதாயக் கூடங்களும், சத்துணவுக் கூடங்களும் கட்டப்பட்டிருக்கின்றனவா ? அப்படிக் கட்டப்பட்டிருக்கின்றனவென்றால் எத்தனை சமுதாயக் கூடங்களும், எத்தனை சத்துணவுக் கூடங்களும் கட்டப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதைத் தனியாக அவர்கள் கேள்வியாகப் போட்டால் விரிவான பதிலைச் சேகரித்துத் தரமுடியும்.

திரு. க. ரா. சின்னராசு : தலைவர் அவர்களே, என். ஆர். ஈ. பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து வருகின்ற இந்த நிதி பணமாக வருகிறதா, அரிசியாக வருகிறதா, கோதுமையாக வருகிறதா என்பதை அறிவதோடு இந்த மானியத்தில் மாநில அரசினுடைய பங்குத் தொகை உண்டா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளுக்கு ஆகும் செலவை(Cash Funds)மைய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. இந்த நிதி ஒதுக்கீடு தவிர, மைய அரசு கோதுமையும், அரிசியும் இலவசமாக வழங்குகிறது.

[1987 நவம்பர் 13

## கொசுக்களை அழிக்கும் மூலிகைகள்

94—(*வினா எண் 3022)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொசுக்களை அழிக்கும் மூலிகைகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். கொசுக்களை அழிப்பதற்கு பைரத்ரம் என்னும் மூலிகையிலிருந்து பைரத்ரம் என்னும் பூச்சி கொல்லி மருந்து தயாரிக்கப்படுகிறது.

## ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர்.

95—(*வினா எண் 3803)—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு வருட காலமாக பெண் மருத்துவர் இல்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பெண் மருத்துவர் 17–6–1987 முதல் பணிபுரிந்து வருகிறார்.

## கண் கொடையளிப்போர்

96—(*வினா எண் 4548)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண் கொடையளிப்போர் எத்தனை பேர் தயாராக உள்ளனர் ?

(ஆ) அவைகள் சேமிக்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னையிலுள்ள அரசு கண் மருத்துவமனையில் 2,107 நபர்களும், மதுரையிலுள்ள இராஜாஜி மருத்துவ



1987 நவம்பர் 13]

மனையில் 1,693 நபர்களும் கண் தானம் செய்வதற்கு பதிவு செய்துள்ளனர். இவற்றினைத் தவிர அரிமா சங்கத்தினரால் சென்னை அரசு கண் மருத்துவ மனையில் நடத்தப்பெறும் கண் வங்கி மூலம் 2,818 பேர் கண் தானம் செய்யப் பதிவு செய்து உள்ளனர்.

(ஆ) (1) அரசு கண் மருத்துவமனை, சென்னை-8.

(2) அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை.

(3) சங்கர நேத்ராலயா, சென்னை.

(4) சோர்டியா மருத்துவமனை, சென்னை.

(5) அகர்வால் கண் ஆராய்ச்சி நிலையம், சென்னை.

(6) அரவிந்தர் கண் மருத்துவமனை, மதுரை.

## தனியார் மருத்துவமனை தொடங்க நிபந்தனைகள்.

97—(*வினா எண்.6121)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்ரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தனியார்கள் மருத்துவமனை தொடங்கும்போது அரசு விதிக்கும் நிபந்தனைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தற்போது தனியார் மருத்துவமனைகள் அமைப்பதை கண்காணிப்பதுபற்றி எந்த ஒரு சட்டதிட்டமோ கட்டுப்பாடோ இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனை என்பது, பெரிய அளவிலே இன்று தமிழ்நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் இருக்கிறது. அங்கே முறையாக செவிலியர் பயிற்சிக்குப் படிக்காதவர்களை எல்லாம் நர்சுகள் என்று வைத்துக் கொள்கிறார்கள். அதேபோல் மருந்தாளர்— பார்மசிஸ்ட் பயிற்சிக்குப் படிக்காதவர்களை எல்லாம் மருந்தாளர்களாக வைத்துக் கொள்கிறார்கள். சாதாரணமாக ஒரு ஆயிரம் ரூபாய் மூலதனத்திலே கடை வைப்பது என்றால்கூட, லைசென்சு வாங்குகிற முறை இருக்கிறது. அதுபோல, படுக்கை வசதிகள் கூட, ஒரே அறையில் 10 நோயாளிகளைப் போடுகிற வழக்கத்தைக்கூட பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் இன்றைக்கு வைத்திருக்கிறார்கள். எனவே, அவற்

றில் எல்லாம் படித்தவர்களைத்தான் மருந்தாளர்களாகப் போட வேண்டும், முறையாகப் பயிற்சி பெற்றவர்களைத்தான் செவிலியர்களாகப் போட வேண்டும் என்று கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு தனியார் மருத்துவ மனைகளை முறைப்படுத்துவதற்குச் சட்டம் கொண்டு வர மாநில அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவ மனைகளில் இது போன்ற குறைகளும், இன்னும் வேறு பல குறைபாடுகளும் நிறைய இருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் சட்டம் கொண்டு வருவதாக இருக்கிறோம். அப்போது இதைப் பற்றி விரிவாகப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போலவே, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை அளித்தாலும்கூட, பெரும்பான்மையான மக்கள் பணம் கொடுத்துக்கூட சிகிச்சை பெறுவதற்குத் தயாராகச் செல்கிறார்களே, அப்படிப் போகிறபோது, தனியார் மருத்துவமனைகளில் மிகக் கூடுதலாக—முனிசிபல் நகரங்களில் இருக்கிற மருத்துவமனைகளில் கூட—சாதாரண சிகிச்சைக்குக் கூட ரூபாய் 5,000 ரூபாய் 10,000 என்று போடுகிற சூழ்நிலையிருக்கிறது. எனவே, டாக்டர்கள் வாங்குகிற கட்டணத்தை முறைப்படுத்துவதற்கும் அந்தச் சட்டத்தில் வழிவகை காணப்படுமா ? அதைப் போல, மாநில அரசே, தமிழ்நாடு ஹாஸ்பிடல் கார்ப்பரேஷன் ஒன்று ஆரம்பித்து கட்டணம் வாங்கிக் கொண்டு, சிகிச்சை அளிக்கிற மருத்துவமனைகளை முக்கியமான இடங்களில் உருவாக்க பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் என்னென்ன இருக்கவேண்டும், எப்படி, எப்படி நடத்தவேண்டும் என்றுதான் விதிகள் வகுக்கலாமே தவிர, மருத்துவர்கள் எவ்வளவு பணம் வாங்கலாம் என்று நிர்ணயிக்க முடியாது. நிர்ணயிக்கக்கூடியதும் அல்ல. அதிகமாகப் பணம் வாங்கினால் அதைப்பற்றி வருமான வரி இலாகா கவனித்துக்கொள்ளவேண்டுமே தவிர, நாம் அதில் தலையிடுவதற்கு இல்லை. மாநில அரசாங்கம், மருத்துவத்தைப் பொறுத்தவரையில், மக்களுக்கு இலவசமாக வழங்குவதைத்தான் குறிக்கோளாக வைத்திருக்கிறோம். வசதி படைத்தவர்களிடத்தில் கட்டணம் வாங்குகிறோமே தவிர, வசதியற்ற ஏழைகளிடத்தில் இலவசமாக வைத்தியம் செய்வதுதான் அரசின் குறிக்கோள். அதிலேயிருந்து அரசு வேறு மாற்றத்திற்குப் போவதாக இல்லை.





குடியாத்தம் மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரித்தல்.

98—(*வினா எண். 9307)—திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

குடியாத்தம் மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது உள்ள படுக்கை வசதி (112) போதுமானதாக கருதப்படுவதால் அதை உடனே அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

நாகப்பட்டினம்—வேதாரண்யம் கால்வாயை சீரமைத்தல்.

99—(*வினா எண். 9033)—திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினத்திலிருந்து வேதாரண்யம் வரை செல்லும் வேதாரண்யம் கால்வாயை படகு போக்குவரத்திற்கு உதவிடும் வகையில் சீரமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்வடிவம் பெறும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) ஆம், (ஆ) இத்திட்டத்தை 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்ய மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக, கடலோரப் பகுதியில், அதுவும் தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலங்களுக்குள்ளே ரோடுகள் போவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக்

[1987 நவம்பர் 13

கருதி, அந்தக் கால்வாயிலே சரக்குப் போக்குவரத்தைக் கொண்டு செல்வதற்கு, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அவ்வேலையைத் துவக்குவதற்கான முறையில், மத்திய அரசின் அனுமதியைப் பெற மாநில அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை மத்திய அரசிற்கு, மாநில அரசு அனுப்பி வைத்திருக்கிறது. அதிலே ஏறத்தாழ 396 இலட்சம் ரூபாயில் இதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. 1863-ஆம் ஆண்டு இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறது. பின்னால் அங்கே ரயில் போக்குவரத்து அதிகமாக வந்த காரணத்தால், இப்போது கால்வாய் பயன்படுத்தப்படாமல் சீர்கெட்டு இருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையைப் பொறுத்து அதைப் பயனுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, இந்தத் திட்டத்தைத் தீட்டி மத்திய அரசிற்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசிலிருந்து இதற்காக நிதி ஒதுக்கப்பட்டால் தான் காரியங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்க முடியும். அவர்கள் எடுத்துக் கொள்கிறார்களா, இல்லையா என்பதைப் பொறுத்துத்தான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் வெட்டப்பட்டதற்குப் பிறகு ரயில் போக்குவரத்து அதிகமானதினாலே அது சீர்கெட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது ரயில் போக்குவரத்தே சீர்கெட்டு, திருத்துறைப் பூண்டிக்கும், வேதாரண்யத்திற்கும் இடையில் ரயில் போக்குவரத்து பெரும் பகுதி இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தக் கால்வாயினுடைய அவசியத்தைக் கருதி மாநில அரசு, இந்த 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அதற்கான அனுமதியைப் பெற முயற்சிகளை எடுக்குமா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களை மாநில அரசு பரிந்துரைக்கின்றபோதே அது வரவேண்டுமென்ற ஆவலோடுதான் திட்டங்களை அனுப்புகிறது. இருந்தாலும் மத்திய அரசுக்கு மீண்டும் ஒரு முறை அது குறித்து வலியுறுத்தி கடிதம் எழுதுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். எனவே, நம்மைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் வருவதுதான் சரியாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம்.



1987 நவம்பர் 13]

### திருவொற்றியூர்—பொன்னேரி பஞ்செட்டி நெடுஞ்சாலையில் பாலம் கட்டுதல்.

100—(*வினா எண் 11850) **திரு. கே. பி. கே. சேகர் என்கிற கே. பி. குலசேகரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவொற்றியூர்—பொன்னேரி பஞ்சட்டி நெடுஞ்சாலையில் வைக்காடு என்னும் இடத்தில் பாலம் கட்டும் பணி பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட பாலப் பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகளை சீக்கிரத்தில் முடிக்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### புதுக்கோட்டை சிப்காட் அருகில் ரயில்வே மேம்பாலம்.

101—(*வினா எண் 13103) **திரு. ஜே. முகமது கனி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை - திருச்சி செல்லும் சாலையில் புதுக்கோட்டை சிப்காட் அருகில் ரயில்வே மேம்பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## குசஸ்தலை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம்

102—(*வினா எண் 13214) திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தாலுக்காவிலுள்ள நல்லாரூன் கிராமத்திற்கு செல்ல குசஸ்தலை ஆற்றின் குறுக்காக தரைப்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மூழ்கு பாலம் ஒன்று கட்ட சுமார் ரூ. 50.00 இலட்சம் ஆகும். இப்பணி பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பணி தொகுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலைமை மற்றும் பணி முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிர் வரும் ஆண்டுகளில் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குசஸ்தலை ஆற்றின் குறுக்காக நல்லாற்றூர் கிராமத்திற்கு செல்வதற்கு தரைப்பாலம் கட்டுவதற்கான பணம் ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவருக்கு முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று தெளிவாகத் தெரிவிக்காத காரணத்தால், அதை அடுத்த ஆண்டே எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இதனால் 15 கிராமங்களை இணைக்கின்ற, போக்குவரத்து சென்று வரக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அடுத்த பட்ஜெட்டில் இது இடம் பெறுவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் எங்கெங்கே பாலங்கள் கட்டப்படவேண்டியிருக்கின்றன ; பாதைகள் அமைக்கப்படவேண்டி இருக்கின்றன என்பதற்காக ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலிலே இது சேர்ந்திருக்கிறது. ஆனால் எந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று இப்போது என்னால் சொல்ல



முடியாது. காரணம், நிதிப் பிரச்சினை ஒன்று. அடுத்து, அந்தப் பணியினுடைய முக்கியத்துவம் கருதி எதை முன்னாலே எடுத்துக்கொள்வது, எதைப் பின்னாலே எடுத்துக்கொள்வது என்று கணக்குப் போடுகிறபோது, அடுத்த ஆண்டா, அல்லது அதற்கு அடுத்த ஆண்டா அல்லது அதற்கு அடுத்த ஆண்டா என்பதை இப்போது என்னால் சொல்ல முடியாது. பணியினுடைய முக்கியத்துவத்தைப் பொறுத்து அதற்குத் தகுந்த இடம் கிடைக்கும்.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளாக இப்படியே நாம் அதிகாரி பெருமக்களைச் சந்திக்கிறபோது, சொல்லி காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் இது பரிந்துரை செய்யப்பட்டு அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தாலும், அதற்கு ஆகும் செலவு 50 இலட்சமாக இருக்கிற காரணத்தால், நிதிநிலை இடம் கொடுக்கவில்லையென்ற காரணத்தையே சொல்லிக்கொண்டு வருகின்ற காரணத்தினால் அந்த மதிப்பீட்டைக் குறைத்தாவது, தரைப்பாலமாகவாவது குறைந்தது 25 இலட்சம் மதிப்பீட்டிலே போடுவதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், அப்படிப் போட்டுக் கொடுத்தாலும்கூட அந்தப் பகுதி மக்களுக்கு அது நல்ல வாய்ப்பாக அமையும். ஆகவே, அதை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்வதைத் திருந்தச் செய்துவிடுவது தான் நல்லது. எனவே, மதிப்பீட்டைக் குறைத்து இப்போதைக்கு ஒன்று, பின்னாலே ஒன்று என்று செய்வது பொருத்தமாக இருக்காது. இதிலே பணி முக்கியத்துவத்தைக் கருதி என்று நான் ஏற்கனவே சொன்னபடி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலேகூட பல வேலைகள் நடந்திருக்கின்றன. அந்த வேலைகள் எல்லாம் இதைவிட முக்கியம் என்ற காரணத்தால் முன்னாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. இது முக்கியம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற காரணத்தால், ஆய்வு செய்து, இருக்கின்ற மற்ற வேலைகளோடு ஒப்பிட்டு பார்த்து, நடவடிக்கை எடுக்கலாம்.

[1987 நவம்பர் 13

போக்குவரத்துக் கழகங்களில் எம். எல். ஏ. மற்றும் வி. ஐ. பி.களுக்கு இருக்கை ஒதுக்கீடு.

103—(*வினா எண் 14162) திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் பேருந்துகளில் எம்.எல்.ஏ. மற்றும் வி.ஐ.பி.களுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பது போல், மற்ற போக்குவரத்துக் கழகங்களின் நீண்ட தூர விரைவு பேருந்துகளிலும் இருக்கை ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

திருவள்ளுவர் பேருந்துகளில் எம்.எல்.ஏ. மற்றும் வி.ஐ.பிக்களுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைப் போல மற்ற போக்குவரத்துக் கழகங்களின் நீண்ட தூர விரைவுப் பேருந்துகளில் இருக்கை ஒதுக்கீடு குறித்த அறிக்கை, கழகம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்.

விரைவுப் பேருந்துகள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில்தான் உள்ளன. ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள அனைத்துப் பேருந்துகளும் சாதாரணப் பேருந்துகள்தான். அநேகமாக எல்லா வழித்தடங்களிலும் பதினைந்து நிமிட இடைவெளியில் அனைத்து இடங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் எம்.எல்.ஏ., போன்ற முக்கிய நபர்களுக்கு இருக்கைகள் தாராளமாக கிடைக்கும். எனவே தனியாக இட ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியமில்லை.

மேலும் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் "திண்டுக்கல்—சென்னை" பேருந்தில் இரண்டு இருக்கைகள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 13]

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் :

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இருக்கைகளில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இருக்கைகளுக்கு இருக்கை எண்கள் உள்ளது போல் இருக்கை எண்கள் இல்லை. இதனால் மிகச் சிறிய பெருமக்கட்கென (V.I.P.S.) இட ஒதுக்கீடுகள் முன்னதாகச் செய்வதில்லை. எனினும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மிகச் சிறிய பெருமக்கள் இருக்கை வசதிகளை கோருகின்ற நேரங்களில், தக்க வகையில் தகுந்த இருக்கைகளை அவர்களுக்கு அளிக்குமாறு எல்லா நடத்துநர்களுக்கும் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கூறிய நெறிமுறைகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மிகச் சிறிய பெருமக்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் :

பல்லவன் போக்குவரத்துக் கழகம் எவ்விதமான நீண்ட தூர விரைவு பேருந்தையும் இயக்கவில்லை.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் போல் நீண்டதூர விரைவு பேருந்துகள் நடத்துவதில்லை. எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வி.ஐ.பி.-களுக்கும் இருக்கை ஒதுக்கீடு சம்பந்தமான நிலை எழவில்லை.

அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் :

அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் குறைந்த தொலைவு தடங்களில் சென்று வருகின்றன. இவற்றில் பெரும்பாலும் எம்.எல்.ஏ.க்கள், வி.ஐ.பி.-க்கள் பயணம் செய்வது மிகக் குறைவு. இந்நிலையில் இருக்கை ஒதுக்கீடு செய்யத் தேவையேற்படவில்லை. எனினும் எம்.எல்.ஏ.க்கள் அல்லது வி.ஐ.பி.-க்கள் பயணம் செய்ய நேரிடுகையில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அமர வசதி செய்து தரப்படுகிறது.

நேசமணி போக்குவரத்துக் கழகம் :

நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் நீண்ட தூர பேருந்தாக நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு 2 பஸ்கள் செல்லுகின்றன. இந்த இரு பேருந்துகளிலும் 2 இருக்கைகள்

(இருக்கை எண் 14, 15) நாடாளுமன்ற, சட்டமன்ற, உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இவை நீங்கலாக 4 இருக்கைகள் (இருக்கை எண். 8, 9, 16, 17) வி.ஐ.பி.-க்கு என ஒதுக்கப்பட்டுள்ளன.

மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் :

250 கிலோ மீட்டருக்கு மேல் செல்லும் இக்கழக பேருந்துகளில் 2 இருக்கைகள் பேருந்து புறப்படும் வரை எம்.எல்.ஏ. மற்றும் வி.ஐ.பி.-களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அண்ணா போக்குவரத்துக் கழகம் :

திருவள்ளுவர் போக்குவரத்து கழக பேருந்துகளைப் போன்று ஒவ்வொரு பக்கமும் 2 இருக்கைகள் வீதம் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் இல்லை. மேலும் இருக்கை எண் கொண்டு குறிப்பிடுவதுமில்லை. இது தவிர இருக்கைகளை ஒதுக்கீடு செய்யும் முன்பதிவு முறையும் நடைமுறையிலில்லை. எனவே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினரால் செய்யப்பட்டு வரும் முறையை விஸ்தரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனினும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் இருக்கைக்காக அணுகும்போது அவர்களின் தேவைப்படி முன்னுரிமை அளித்து நிறைவேற்றப்படுகிறது.

ஜீவா போக்குவரத்துக் கழகம் :

ஜீவா போக்குவரத்துக் கழகத்திலிருந்து தொலை தூர விரைவுப் பேருந்துகள் எதுவும் இயக்கப்படவில்லை. தற்பொழுது சாதாரண நிலைப் பேருந்துகள் இரண்டு மட்டும் திருச்சி—சென்னை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே மேற்படி பேருந்துகளில் இருக்கை ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

சோழன் போக்குவரத்துக் கழகம் :

திருவள்ளுவர் பேருந்துகளில் எம்.எல்.ஏ. மற்றும் வி.ஐ.பி.-க்களுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதுபோல் இக்கழகத்தில் நீண்ட தூர பேருந்துகளுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. (குடந்தை-சென்னை பேருந்துகளைத் தவிர). இருப்பினும் நீண்ட தூர பேருந்துகளுக்கு புறப்படும் இடத்தில் பேருந்து புறப்படுவதற்கு அரை மணி நேரம் முன் வரை பேருந்தின் இடதுபுற முன் இரண்டு இருக்கைகள் எம்.எல்.ஏ. மற்றும் வி.ஐ.பி.-க்களுக்காக காலியாக வைக்கப்பட்டிருக்கும்.





பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் :

250 கி.மீ. தூரத்திற்கு கீழ் உள்ள நீண்ட தூர ஒன்று அல்லது இரண்டு தடங்களை மட்டுமே புறநகர் போக்குவரத்துக் கழகங்கள் இயக்குகின்றன. இவைகளில் பெரும்பாலும் சிறிது தூரம் பயணிகளே பயணம் செய்கின்றனர்.

எனவே, புறநகர், வழித்தடங்களில் எம்.எல்.ஏ. மற்றும் வி.ஐ.பி.-க்களுக்கு இருக்கை ஒதுக்கீடு முறை இதுவரை இல்லை. ஆனால், எம்.எல்.ஏ.-க்கள் மற்றும் வி.ஐ.பி.-க்கள் இப்போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும் பொழுது அவர்களுக்கு இருக்கைகள் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ளுமாறு நடத்துனர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சேரன் போக்குவரத்துக் கழகம் :

தற்போது இப்போக்குவரத்துக் கழகத்தால் கோவையிலிருந்து சென்னைக்கு நீண்ட தூர பேருந்துகள் இரண்டு இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர வேறு நீண்ட தூர விரைவு பேருந்துகள் இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுவதில்லை.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் :

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் விரைவுப் பேருந்து எதுவும் இயக்கப்படவில்லை.

சென்னைக்கு நாள் ஒன்றுக்கு திருநெல்வேலியிலிருந்து கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினால் ஒரே ஒரு பேருந்து மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. தேவையானபோது இருக்கைகள் சட்டமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோளின்படி ஒதுக்கப்படுகின்றன.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 பக்கங்கள் கொண்ட விவர அறிக்கை ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதில், 250, 300 கிலோ மீட்டருக்கு மேலே செல்லக்கூடிய போக்குவரத்துக் கழகங்களில்தான் எம்.எல்.ஏ.-க்களுக்கு பாஸ் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, அமைச்சர்கள் எல்லோரும் காரிலே போவதால் இந்தக் கஷ்டம் தெரியாது என்று நினைக்கிறேன். நாங்களெல்லாம் பஸ்ஸிலே பயணம் செய்வதாலே, வி.ஐ.பி.-க்களுக்கு ஒரு முன்னுரிமை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 13

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இது நீண்ட தூர பேருந்தைப் பற்றி இருக்கிற
காரணத்தால், அறிக்கையும் கொஞ்சம் நீண்டிக்கிறது.
பஸ்ஸிலே நாங்கள் போகாதவர்கள் அல்ல. பஸ்ஸிலே போகிற
வர்களுடைய சிரமங்கள் என்ன என்று எங்களுக்குத் தெரியும்.
ஆனால் இப்போது அந்தச் சிரமங்களெல்லாம் குறைகின்ற
அளவிலே பேருந்துகள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு
உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.
இதிலே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த
வரையிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களோடு
வரக்கூடிய ஒரு நபருக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கின்ற
வகையிலே இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா
பேருந்துகளிலும் இந்த முன்னுரிமை கொடுப்பதற்கான நட
வடிக்கையை நாம் எடுத்துவிட்டால் பல்வேறு சங்கடங்களைச்
சந்திக்கவேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டுவிடும். அதற்காக
இரண்டு இருக்கைகளைக், கடைசிவரை அவர்களுக்காகத் தயா
ரான நிலையில் வைக்கிறபோது அதனால் வரவேண்டிய வருவாய்
பல கோடி அளவுக்கு இழப்பாக ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது.
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் அந்த நிலை இருந்
தாலும் வருகிற முக்கியஸ்தர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும்
என்று சொல்லியிருக்கிறோம். அதைப்போலவே மற்ற எல்லாப்
போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் ஒதுக்குகிறபோது
அதனால் பல்வேறு சங்கடங்கள் உருவாகும். காரணம் மற்ற
பேருந்துகளில் தனித் தனி இருக்கைகள் இருக்காது.
ஒரே இருக்கையாக, நீளமாக இருக்கும். எனவே அதில் இடம்
ஒதுக்கி வைப்பது என்பது பொதுமக்களுக்கு சங்கடத்தை
ஏற்படுத்துவதாக இருக்கும் என்பதைத்தான் பார்க்கிறோம்.
எனவே இப்போது இருக்கிற முறையே சரியாக இருக்கும் என்று
கருதுகிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் பஸ்ஸில் வருகிறபோது,
10, 20மைல் பிரயாணம் செய்கிறபோது, நடத்துநர்கள் மரியாதை
கொடுக்காத நிலை இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தாக்கீது அனுப்பி சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறபோது உட
னடியாக இருக்கைகள் கொடுக்க வேண்டும் என்றாவது உத்தரவிட
முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறபோது,
ஓட்டுநர்களும், நடத்துனர்களும் முடிந்தவரை முன்னுரிமை
கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.
அவர்கள் ஏற்கெனவே பதிவு செய்திருந்தாலும், செய்யாவிட்டா
லும் அவர்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, முன்னுரிமை
கொடுக்க வேண்டும். காரணம் அவர்கள் அவசர காரியமாக
வரக்கூடும் — என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில்



1987 நவம்பர் 13]

நீங்கள் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்று
சர்குலர் அனுப்புவது அவ்வளவு நன்றாக இருக்காது. காரணம்
கேட்டு வாங்கக்கூடாது என்று நான் கருதுகிறேன். நாமே
அவர்களிடத்தில் ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்திக்
கொள்வது நல்லது என்று கருதுகிறேன். சில இடங்களில்
ஓட்டுநர்களும், நடத்துனர்களும் சட்டமன்ற உறுப்பினர்களிடம்
தவறாக நடந்துகொள்கிறார்கள். அவர்கள்மீது நாங்கள்
கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.
அதோடு நாமும்கூட அவர்களோடு ஒத்துப் போவது கொஞ்சம்
சிறப்பாக இருக்கும் என்றுகூட நான் கருதுகிறேன். யாரும்
தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது — அந்த ஒத்துழைப்போடு
நடந்துகொண்டால் பிரச்சனை வெளியே வராது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன்
(பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற
இலவச பஸ்பாஸ் வசதியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
களுக்கும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை
செய்வாரா என்று அறிய விரும்புகிறேன். மாநில அளவில் இல்லை,
என்றாலும்கூட அவர்கள் வசிக்கிற மாவட்ட அளவிலாவது
இதைக் கொடுக்க பரிசீலனை செய்வாரா ? மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இப்போது பதில் சொல்ல முடியாது என்றாலும்கூட
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கலந்து கொண்டா
வது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தச் சலுகையை
வழங்க பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்மீது நல்ல அபிமானத்தோடு
தான் இதைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களும் அவசரப்பட
வில்லை என்றுதான் கருதுகிறேன். எனவே அதைப் பற்றி
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசித்தான் முடி
வெடுக்க வேண்டும். இருந்தாலும், இப்போதே நாம் சில
சங்கடங்களைச் சந்திக்க வேண்டியிருப்பதால் அதைக் கொஞ்சம்
அதிகமாகப் பரிசீலனை செய்து — கொஞ்சம் மிக அதிகமாகவே
ஆய்வு செய்துதான் முடிவெடுக்க வேண்டியிருக்கிறது என்பதை
நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஏ. என். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின்
பஸ்களில் வி.ஐ.பி.க்களுக்கு இரண்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்
டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சீட்டு
களும் பஸ் புறப்படுகிற இடத்தில்தான் ஒதுக்கப்படுகிறதே தவிர
மற்ற இடங்களில் — மற்ற ஸ்டாப்பிங் ஸ்டேஜ்களில் —
கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்
நான் விருதுநகரிலிருந்து பஸ் ஏற வேண்டுமானால் அந்த

இருக்கைகள் கிடைப்பதில்லை. புறப்படுகிற இடத்திலேயே பில்-ஆப் ஆகிவிடுகின்றன. காரணம் கேட்டால், புறப்படுகிற நேரத்தில்தான் உங்களுக்கு ரிசர்வேஷன் செய்வதற்கு வசதி இருக்கிறது மற்ற இடங்களில் அந்த வசதி உறுப்பினர்களுக்குக் கிடையாது என்று சொல்லுகிறார்கள். இன்னொன்றையும் கூடச் சொல்கிறார்கள். திருவனந்தபுரம், பெங்களூர் போன்ற இடங்களிலிருந்து வருகிற பஸ்களைப் பொறுத்த வரையில் அங்கே இருப்பவர்கள் ஒத்துக் கொள்வதில்லை என்று கவுண்டரில் இருப்பவர்கள் சொல்லுகிறார்கள். திருநெல்வேலியிலிருந்து ஒரு பஸ் சென்னைக்கு வந்தால் அதில் விருதுநகரில் ஏறுவதற்கு அனுமதியில்லை. புறப்படுகிற இடத்திலேயே அந்த பஸ் சீட்டுகள் பூர்த்தி செய்யப்பட்டுவிடுகின்றன. எனவே இதைக் கவனித்து 2 சீட்டுகளை முழுவதுமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஒதுக்கி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து புறப்படுகிற அந்தப் பேருந்தில் விருதுநகரில் ஏறக்கூடியவர்களுக்கு காலி வைக்க வேண்டும். அடுத்து, மதுரை, அடுத்து திருச்சி, அடுத்து விழுப் புரம், திண்டிவனம் என்று சென்னை வரை வரவேண்டியிருக் கிறது. எனவே கடைசிவரை இந்த இருக்கைகளைக் காலியாக வைத்துக் கொண்டிருப்பது என்பது அநேகமாக நாட்டுக்கே மிகப் பெரிய நஷ்டம் என்றே கருதுகிறேன். பல பேர் வண்டியில்லாமல் திண்டாடுகிற நேரத்தில் நாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று சொல்லி காலியாக இரண்டு இருக்கைகளைக் கொண்டு வருகிறபோது நம்மீதே அவர்களுக்கு ஒரு அதிருப்தி ஏற்படு வதைக்கூட நாம் பல இடங்களில் பார்க்கிறோம். இன்னும் சிலபேர், சட்டமன்ற உறுப்பினர் வந்தால் நாங்கள் காலி செய்து கொடுத்துவிடுகிறோம், இப்போது எங்களை ஏற்றிக் கொள்ளுங் கள், நாங்கள் அவசரமான காரியமாக வருகிறோம் என்று கேட்கிறார்கள். இப்போதே வண்டி புறப்படுகிற கடைசி நிமிஷம் வரை காலியாக வைத்திருந்து அதற்குப் பின்னர்தான் சட்ட மன்ற உறுப்பினர் யாரும் வரவில்லை என்றால் மற்றவர்களுக்குக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. ஒருவேளை திருநெல்வேலியி லிருந்து வருகிற பேருந்தில் பயணம் செய்ய வேண்டுமென்று கருதுவாரானால் — அவர்களுக்கெல்லாம் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது — அவர்களுக்கு முன்கூட்டியே சொல்லிவிட்டால் காலியாக விருதுநகர் வரை கொண்டு வருவார் கள். மேலும் ஒன்று, நீங்கள் மாதத்தில் ஒரு நாள்தான் வருகிறீர் கள். இதற்காக மாதம் முழுவதும் அந்த இருக்கைகளை ஃபிரியாகக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. எனவே இதை யெல்லாம் பார்த்தால் நாம் கொஞ்சம் அனுசரித்துத்தான் போக வேண்டியிருக்கிறது.





ஈரிப்பாறையில் தேயிலை தொழிற்சாலை.

104—(*வினா எண் 14946)—திரு. கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், கீரிப்பாறையில் கூட்டுறவுத் துறையின் மூலம் தேயிலை தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-50)

திரு. கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் காட்டுப் பகுதிகளில் ரப்பருக்கு அடுத்தபடியாக தேயிலையைச் சிறு அளவிலே அங்கே யுள்ளவர்கள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தேயிலையைப் பக்குவப்படுத்தி விநியோகம் செய்கின்ற அளவிற்கு அதைத் தயார் செய்வதற்கு அங்கே வசதி இல் லாத காரணத்தால் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகளின் மூலமாக அறிந்தேன். ஆகவே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து குமரி மாவட்டம் தொழிலில் பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்திற்கொண்டு அங்கே ஒரு தேயிலைத் தொழிற் சாலையை அமைக்கமுன்வருவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பிலே ஒரு தேயிலைத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு ஆய்வு செய்து பார்த்ததில், அங்கே பயிரிடப்படுகிற தேயிலையின் தரம் குறைந்திருப்பதால் அங்கே வேறு பயிர்களைப் பயிரிடு வதற்கான நடவடிக்கைகளை விவசாயிகள் எடுத்து விட்டார்கள். இந்தத் தொழிற்சாலையை அமைத்தால் அது வெற்றிகரமாக

வராது என்று தெரிவித்த காரணத்தால் இப்போது கைவிடப்பட்டிருக்கிறது. எனவே அங்கேயிருக்கின்ற நிலைமைகளைச் சட்டமன்ற உறுப்பினர் பார்த்து அது உண்மைதானா என்பதைத் தெரிந்து கடிதம் கொடுத்தால் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தமிழில் ஒளிபரப்பு செய்தல்.

105—(*வினா எண் 203)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு, சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்யும்படி மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளதா ?

(ஆ) இதன் மீது மத்திய அரசு நடவடிக்கை குறித்து தகவல் ஏதும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் உள்ள எல்லா குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அனைத்தையும் சென்னை தொலைக்காட்சி நிலையத்துடன் மைக்ரோ வேவ் மூலம் இணைக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளது. தற்போது கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் சென்னை தொலைக்காட்சி நிலையத்துடன் மைக்ரோ வேவ் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நீலகிரி போன்ற மாவட்டங்களில் சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்க முடியாத நிலை இருக்கிறது. இது போன்ற மைக்ரோ வேவ் மூலம் இணைக்கப்படாத மாவட்டங்களை மைக்ரோவேவ் மூலம் இணைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு சென்னையில் ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகளை தமிழக மக்கள் பார்க்க வசதி ஏற்படுத்திக் கொடுக்க மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மைக்ரோவேவுடன் இதுவரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற எல்லா டிரான்ஸ்மிட்டர்களையும் இணைக்க வேண்டுமென்று மைய அரசுக்கு ஏற்கெனவே மாநில அரசு எழுதியிருக்கிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்கச் சொல்லி வலியுறுத்தும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் மக்கள் ஏழு எட்டு மணிக்குமேல்தான் வீட்டிற்குத் திரும்பி வருவார்கள். அவர்கள் 9 மணிக்கு மேல் எந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்க்க முடிவதில்லை. ஆகவே 9 மணிக்கு மேலும் தொடர்ந்து தமிழக மக்கள் தங்கள் தாய்மொழி தமிழில் நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு—எப்படி மத்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கைகளை, திட்டங்களை மக்களுக்குப் பரப்ப தொலைக்காட்சியைப் பயன்படுத்துகிறதோ அதைப் போல—மாநில அரசாங்கம் தன்னுடைய திட்டங்களை, கொள்கைகளை மக்களுக்குப் பரப்புவதற்கேற்ப ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு சில மணி நேரமாவது மாநில அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளை நாமே ஒளி பரப்ப அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நேரத்தை ஒதுக்குவதில்கூட தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அதிகமான நேரம் ஒதுக்க வேண்டும் என்று மைய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் நேரிலும், கடிதம் மூலமும் இந்த அரசு வலியுறுத்தி இருக்கிறது, இரண்டாவது சேனல் வருகிறபோது தமிழ்நாட்டிற்கு அதைக் கொடுத்தால் அதில் தமிழ் நிகழ்ச்சிகளை அதிக நேரம் ஒளிபரப்ப சாதகமாக இருக்கும் என்ற கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் மைய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சுமார் 80 சதவீதம் தமிழ் அல்லாத நிகழ்ச்சிகள், செய்திகள் நிரம்ப இருக்கின்றன. காலையிலே டி.வி.யை வைத்தால் தமிழில் இருப்பதில்லை, மற்ற நிகழ்ச்சிகள்தான் இருக்கின்றன. ஆகவே தமிழ் நிகழ்ச்சிகள் எந்த அளவிற்கு இருக்க வேண்டும், மத்திய அரசின் நிகழ்ச்சிகள் எப்போது இருக்க வேண்டும் என்று வரையறுத்துக்கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் வழிவகை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 13

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கேட்ட அதே கேள்வியைத்தான் மீண்டும் கேட்கிறார்கள். தொடர்ந்து இப்போதுள்ள நேரத்தில் அதிகம் தமிழ் நிகழ்ச்சிக்கு ஒதுக்க வேண்டுமென்று மைய அரசுக்கு மாநில அரசு கடிதம் மூலமும் நேரிடையேயும் வலியுறுத்தி வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது தொகுதிக்கு ஆற்றியுள்ள பணிகளைத் தெரிவிக்கின்ற வகையிலும் மக்களும் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ? இன்றைக்கு கிரிக்கெட் விளையாட்டை நேரிடையாக ஒளிபரப்புகிறார்கள். அது மிக அற்புதமாக மக்கள் மத்தியிலே வரவேற்கப்படுகிறது. முக்கியமாக மக்களுக்காக பணியாற்றுகின்ற சட்டமன்ற நடவடிக்கைகளை நேரிடையாக ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி சம்பந்தப்பட்ட தொலைக்காட்சித் துறை அமைச்சரிடம் கருத்து தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

பாலாடைக் கட்டி தொழிற்சாலை.

106—(*வினா எண் 5284)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாடைக் கட்டி தொழிற்சாலை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில் எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) ஆம்.



1987 நவம்பர் 18]

(ஆ) அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானலில் 1979-ல் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 1985-ல் ரூ. 61 இலட்சத்திலும் பாலாடைக் கட்டி தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது மாதிரி பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை வேறு இடங்களிலும் நிறுவ அரசு முன் வருமா ? இங்கே பால் தட்டுப்பாடு இருக்கிறது. அதனால் வெளி நாடுகளிலிருந்து பால் வாங்க நடவடிக்கையோ அல்லது மாடு வாங்க நடவடிக்கையோ அரசு எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாலாடைக் கட்டிக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. ஆனால் பால் போதிய அளவுக்கு, பாலாடைக் கட்டி தயாரிக்கும் அளவுக்குக் கிடைக்காததால் மேற்கொண்டு பாலாடைக் கட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் வெள்ளாட்டுப் பாலை விரும்பிச் சாப்பிட்டவர்கள். அது உடம்புக்கு நல்லது, குழந்தைகளுக்கு நல்லது. ஆகவே ஆட்டுப்பால் சாப்பிடவேண்டு மென்று மனிதர்களை வற்புறுத்துவதோடு, பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஆட்டுப் பாலிலிருந்து பாலா டைக் கட்டி தயாரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆட்டுப் பால் போதிய அளவுக்குக் கிடைக்காது. அது போதிய அளவுக்குக் கிடைத்தால்தான் அதிலிருந்து பாலாடைக் கட்டி உற்பத்தி செய்யும் யோசனையை ஏற்க முடியும்.

கிரிப்பாறை தொழில் கூடத்தில் ரப்பர் விற்பனை.

107—(*வினா எண் 7601)—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ரப்பர் கழகத்தில் கிரிப்பாறை தொழில் கூடத்திலிருந்து 18—10—1985 அன்று ரப்பர் எடை போட்டு விற்பனை செய்ததில் நடந்த முறைகேடு சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

[1987 நவம்பர் 13

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு ரப்பர் கழகத்தில், கீரிப் பாறை தொழில் கூடத்திலிருந்து 18-10-1985 அன்று ரப்பர் எடை போட்டு விற்பனை செய்ததில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை. ஆனால், விற்பனை செய்யப்பட்ட ரப்பரை அனுமதிக்கப்பட்ட நேரம் கடந்தும் வெளியே அனுப்பப்பட்டது. இது சம்பந்தமாக மூன்று தொழில் கூட சரகர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தொழிற் கூட மேலாளர், கழகத்திலிருந்து தாய்த் துறையான வனத்துறைக்கு மாற்றப் பட்டுள்ளார். ஒரு புதிய எடை மேடை, தொழிற்சாலையி லேயே அமைக்கப்பட்டுள்ளது. சரக்குகள் வெளியே அனுப்பு முன்னர், இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனி நிகழா வண்ணம் செய்ய மேலதிகாரிகளால் மாதிரி சோதனை முறைகளை மேற் கொள்ளவும், நிர்வாக முறைகளிலும், விதிகளிலும், தக்க மாற்றங்கள் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு ரப்பர் கழகத்தில் முறைகேடான முறையில் ரப்பர் விற்கப்படுகிறது என்ற முறையிலேதான் பல புகார்கள் வந்தன. 1986 மே மாதத்திலே அங்கே 80 டன் குறைபாடு ஏற்பட்டதாகவும், அது சம்பந்தமான விவரங்கள் 8-6-1986, 15-6-1986 கல்கி பத்திரிக்கையில் போடப்பட் டிருக்கிறது. அதைத் தொடர்ந்து அங்கே பல குழப்பங்கள் ஏற்பட்டு, தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்ட நிலை கூட ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலை அங்கே தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், அதிகாரிகள் மேலே கடுமை யான நடவடிக்கைகளை அந்த நிர்வாகம் எடுக்கவில்லை. நிர் வாகம் நடவடிக்கை எடுக்காததால்தான் இப்படிப்பட்ட முறை கேடுகள் ஏற்பட்டு வருகின்றன என்பதால், அரசு சம்பந்தப் பட்டவர்கள்மேல் தகுந்த கடுமையான நடவடிக்கை எடுத்து, அரசினுடைய வருவாயைப் பாதுகாக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போல, 28-5-1986 அன்று நிர்வாக இயக்குநர் சம்பந்தப்பட்ட 3 சரகர்களை மனோகரன், அருள்சாமி, ஆண்டி யப்பன் ஆகியவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய் தார்கள். தற்போது கண்காணிப்பு மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறை தனியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க உத்தேசித் திருப்பதால் 1986-லிருந்து தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ள வர்களுக்கு 6-11-1987 முதல் மீண்டும் பணி கொடுக்கப்பட்டு,



1987 நவம்பர் 13]

அவர்களுக்கு மேலே உள்ள அசிஸ்டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் மாற்றப்பட்டுள்ளார். இது போன்ற முறைகேடுகள் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இதற்கு மிக முக்கிய காரணமாக இருந்த அசிஸ் டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் அவர்களுக்கு அந்த பாக்டரியிலிருந்து இட மாற்றம் மாத்திரம் செய்து, அந்த அதிகாரி மேல் தகுந்த நடவடிக்கை எடுக்காமல், கீழே உள்ள அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதால், அங்கே பெரிய அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளை மீண்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அசிஸ்டென்ட் கன்சர் வேட்டர் ஆப் பாரஸ்ட் பொறுத்த அளவிலே அவருக்குப் புரமோஷன் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அவர் மேலே தகுந்த நடவடிக்கை எடுத்து, ஒரு நல்ல முறையை அரசு ஏற்படுத்துமா?

(முற்பகல் 11-00).

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே முதலிலேயே விடையிறுத்தபோது இது பற்றி சொன்னேன். எந்த முறை கேடுகளும் இல்லை. உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட லாரிகள் வெளியிலே அனுப்பப்படவில்லை என்ற குறைதான் இருந்தது என்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால், தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேக்கு, சிசு மரங்களை பொது ஏலத்தில் விடுதல்.

108—(*வினா எண் 9489—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், பொதுப் பணித்துறைக்குச் சொந்த மான ஆற்றங்கரைகளில் விழுந்த தேக்கு, சிசு மரங்களை பொது ஏலத்தில் விடும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1987 நவம்பர் 13

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பொதுப் பணித்துறையினருக்குச் சொந்தமான ஆற்றங் கரைகளில் விழுந்த தேக்கு மரம், சிசு மரங்கள் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இருப்பில் உள்ள மரங்களை ஏலமிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 18-3-87ல் நடந்த ஏலத்தில் தேக்கு கம்பங்கள் மற்றும் சிசு கம்பங்கள் மொத்தம் ரூ. 1,31,962.90-க்கு ஏலமிடப்பட்டு ஏலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குரும்பூர் ஆதி நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருப்பணி.

109—(*வினா எண் 10668) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், குரும்பூர் ஆதி நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) தொகை வழங்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், குரும்பூர் ஆதி நாராயணப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்திலிருந்து ரூ. 50,000 நிதி மாற்றம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காசங்காடு கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டிடம்.

110—(*வினா எண் 13560) திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, காசங்காடு கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதியில் காசங்காடு என்ற இடத்தில் கால்நடை கிளை நிலையம் இல்லை. ஆனால் அங்கு கால்நடை மருந்தகம் ஒன்று இயங்கி வருகின்றது. அந்த கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்ட போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று, கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மலைவாழ் இனத்தவர்களுக்கு உணவு விடுதியில் இடம்.

111—(*வினா எண் 7325) திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில் எத்தனை மலைவாழ் இனத்தவர் உணவு விடுதியில் இடம் கோரி விண்ணப்பித்துள்ளார்கள்?

(ஆ) எத்தனை பேர் சேர்க்கப்பட்டுள்ளார்கள்?

(இ) எத்தனை பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்? ஏன்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1985-86 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் 392 மலைவாழ் மாணவர்கள் இடம் கோரி விண்ணப்பித்தனர்.

(ஆ) 389 பேர் விடுதியில் சேர்க்கப்பட்டனர்.

(இ) 3 மாணவர்களுக்கு மட்டும் வயது வரம்பைத் தாண்டியவர்கள் என்பதால் விடுதி வசதி அளிக்காமல் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வில் ஒதுக்கீடு.

112—(*வினா எண் 7588) திரு. க. பாரமலை மற்றும் திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் எந்தெந்த துறைகளில் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படுகிற பதவிகளில் (Reservation in promotional post) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது?

(ஆ) அனைத்து துறைகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வின் போது கீழ்க்காணும் துறைகளில் குறிப்பிட்ட சில பதவிகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது :—

(1) வருவாய்த் துறை (துணை மாவட்ட ஆட்சியர் மற்றும் துணை வட்ட ஆட்சியர்) ;

(2) வணிகவரி துறை (வணிகவரி அலுவலர், உதவி வணிக வரி அலுவலர்) ;

(3) நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை (உதவிப் பொறியாளர்) (நெடுஞ்சாலை) ;

(4) ஆவணப் பதிவுத்துறை (சார் பதிவாளர் II) பத்திரப் பதிவு) ; மற்றும்

(5) நில அளவை, நிலப் பதிவுருக்கள் (நில அளவையாளர், இளநிலை கனிப் பொறியாளர் மற்றும் படிஎடுப்பு உதவியாளர்)

(ஆ) அனைத்து துறைகளுக்கும் விஸ்தரிப்பது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

### தாட்கோ தலைமை அலுவலகம்.

113—(*வினா எண் 12503) திரு. அ. பிரணவநாதன் மற்றும் திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ தலைமை அலுவலகத்தை விழுப்புரத்தி லிருந்து சென்னைக்கு மாற்றும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.





### ஆதி திராவிட நலத்துறை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலை பள்ளியாக உயர்த்துதல்.

114—(*வினா எண் 13850)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, சிங்கானூரில் உள்ள ஆதி திராவிடர் நலத்துறை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி யாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த கல்வியாண்டில் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்த உயர்நிலைப் பள்ளியை நடப்புக் கல்வியாண்டில் (1987–88) மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தி அரசாணை வெளி யிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### மாநிலங்களவையில் தெரிவித்த கருத்து பற்றி முதலமைச்சரின் அறிக்கை.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற, நமது முதலமைச்சர் வேறு கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் எனக்கும் முதலமைச்சர், எங்கள் கட்சியைச் சார்ந்த வர்களுக்கும் முதலமைச்சர், ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் முத லமைச்சர். அதே போல, தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர் கள், எந்த கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் இந்த அவைக்கு உரியவர்கள், நாட்டிற்கு உரியவர்கள், நம்மவர் கள். நேற்றைக்கு முந்தா நாள் குறிப்பு ஒன்றை நான் வெளியிலே போகும்போது பத்திரிகை நிருபர்கள் எனக்குத் தந்தார்கள். அந்த குறிப்பில், மாநிலங்களவையில் இந்த அவையினாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அனுமதிக்க முடியாது. மாநிலங்கள் அவையில் பேசினதைப் பற்றி இங்கே பேசமுடியாது. இங்கே அந்தக் குறிப்பு வராது. (குறுக்கீடு) அதற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்துவது முறையல்ல. (குறுக்கீடு) 'பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. கி. மனோகரன் : பத்திரிகை நிருபர்களிடமிருந்து பெறுவதை விட இங்கே பெறுவது நல்லதல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கையை எங்கேயும் கொடுக்கலாம். It is not relating to the Proceedings of the House.

நான் ஒன்றும் டிஸ்கஸ் பண்ணவில்லையே (குறுக்கீடு) அந்த பிரச்சினை இங்கே வேண்டாம். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே எழவும் செய்யாது.

திரு. கி. மனோகரன் : வேண்டாம், வேண்டாம் என்று சொல்கின்றீர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இல்லை. மாநிலங்கள் அவையிலே பேசினதைப் பற்றி இங்கே பேசமுடியாது.

திரு. கி. மனோகரன் : எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாநிலங்கள் அவையில் பேசிய பேச்சுக்கும் எங்கள் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லை என்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கட்சி விவகாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்சி தலைவர் என்ற முறையில் அதைச் சொல்லியிருக்கின்றார்கள். 'சீப் மினிஸ்டர்' என்ற முறையில்தான் தெரிவித்திருக்கின்றார்கள். (குறுக்கீடு) Cheif Minister is also General Secretary of the Party. அப்படியும் வருகிறது அல்லவா ?

திரு. கி. மனோகரன் : நான் முதலமைச்சர் என்றுதான் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : He can control his M. Ps. and M.L. As. He has got that prerogative as the Leader of the Party.

திரு. கி. மனோகரன் : அந்த அறிக்கையை இந்த அவையிலே வைத்திருக்கலாம்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே வரமுடியாது. அதற்கு இங்கே யாரும் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே எழாது எப்படிப் பதில் சொல்வது ?

திரு. கி. மனோகரன் : நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும்.

திரு. கி. மனோகரன் : போர் நிறுத்தக் கொள்கையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விவாதம் இப்போது இங்கே வேண்டாம். பி.ஏ.சி.யில் பேசுவோம் வாருங்கள். அங்கே வாருங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டரில் இவ்வளவு பெரிய விவகாரம் விவாதிக்க முடியாது. பதில் சொல்ல முடியாது. பாயிண்ட் ஆப் ஆர்டரில் அது ஒன்றும் வராது.

திரு. கி. மனோகரன் : எப்படி பிசினஸ் வைப்பது ? என்னென்ன வைப்பது என்பதுதான் அங்கே வரும். பிரச்சினையைப் பற்றி பேசும் இடம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் அஜெண்டாவில் ஒதுக்கிய பிறகுதான் பேச முடியும். இப்போது பேசமுடியாது. என்னென்ன விவாதிக்கலாம் என்று நாம் அங்கே முடிவெடுத்து பின்னர் இங்கே வந்து விவாதிக்கலாம். (குறுக்கீடு) அது பாயிண்ட் ஆப் ஆர்டரில் எழ முடியாது. (குறுக்கீடு) ராஜ்ய சபாவில் நடந்தது பற்றி இந்த ஹவுசில் பதில் சொல்வதற்கு யாரும் இல்லையே. (குறுக்கீடு) இது அதில் வராது. (குறுக்கீடு) It is not related to the proceedings of the House. As the Leader of the Party and as a Chief Minister he has issued a statement. You cannot raise it here under any of the Rules (குறுக்கீடு) நீங்கள்தான் படிக்க வேண்டும். (குறுக்கீடு) பதில் (குறுக்கீடு) நான் எப்படிச் சொல்வது ? (குறுக்கீடு) There is no point of order. It cannot be raised as a point of information also.

THIRU A. RAHMANKHAN : Contempt of the House?

Mr. SPEAKER : It dose not relate to the preedings of the House (குறுக்கீடு) எனக்கு உங்கள் பிரச்சினை புரிகிறது. உட்காருங்கள். அடுத்து, அரசினர் தீர்மானம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடு).

[பேரவைத் தலைவர்] [1987 நவம்பர் 13

நீங்கள் என்ன கிளப்பப் போகிறீர்கள் என்று சொல்ல வில்லையே (குறுக்கீடு) அது பாயின்ட ஆப் ஆர்டரில் வராது. என்னுடைய அறையில் வந்து கேளுங்கள் (குறுக்கீடு) விதியைப் படித்து தயவுசெய்து சொல்லுங்கள். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது அவையின் நடவடிக்கையிலிருந்து எழ வேண்டும். அவை நடவடிக்கை எதுவும் விவாதிக்கப்படவில்லையே. உட்காருங்கள் (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். நான் அதற்கு வழி சொல்கிறேன்.

## 3. அரசினர் தீர்மானம்.

### விதி 55 (6)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒரே நாளில் இரண்டிற்கு மேற்பட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களைக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வரக்கூடாது என்றுள்ள தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 55 (6)-ஐ இன்றும் மற்றும் இக்கூட்டத் தொடர் முழுவதும் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) சென்னை வேளச்சேரி பகுதியிலுள்ள சாவடி இடத்தை இராம நிர்வாக அலுவலர் சட்டத்திற்குப் புறம்பாக விற்றது குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை வேளச்சேரிப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான கிராம சாவடி இடத்தை கிராம நிர்வாக அலுவலர் அரசுக்கு தெரியாமல் சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்ததால், ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1987 நவம்பர் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

### அறிக்கை.

சென்னை மாவட்டம், மாம்பலம்-கிண்டி வட்டம், வேளச்
சேரி கிராம நிருவாக அலுவலராகப் பணிபுரிந்த திரு. ஞான
சேகரன் என்பவர், மேற்படி கிராமத்தில், சாவடியிடத்தைச்
சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்தார் என்று பெறப்பட்ட
புகாரின்பேரில், சென்னை மாவட்டாட்சியர், அவரை 19-5-1987
இல் தற்காலிகப் பணி நீக்கம் செய்துள்ளார். அவர்மீது சுமத்தப்
பட்ட புகார் துணை ஆட்சியர் நிலையிலுள்ள அலுவலரான,
மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் அவர்களால் ஆரம்ப
விசாரணை செய்யப்பட்டு, அவருடைய நியமன அலுவலரான
மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களால்
தமிழ்நாடு குடிமுறை பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும்
மேல்முறையீடு) விதி 17 (ஆ)-வின்படி குற்றப் பத்திரிகை
ஏற்படுத்தப்பட்டு, விதி முறைகளின்படி விசாரணையும் நடத்தப்
பட்டது. விசாரணையின்போது இவர்மீது புகார் கொடுத்த
திரு. வி. சங்கர் என்பவரும் விசாரிக்கப்பட்டார். விசாரணை
யின்போது மேற்படி இடம் விற்கப்பட்டதற்கு ஆதாரமாகக்
கொடுக்கப்பட்ட பத்திர எண் 1146/1986-ஐப் பார்வையிட்
டதில், வேளச்சேரி கிராம நில அளவை எண். 438/1-இல் உள்ள
நத்தம் புறம்போக்கில் அமைந்துள்ள கிராமச் சாவடி பகுதிப்
பரப்பளவான 800 சதுர அடியை தனி நபரான, திரு. எஸ்.
கருப்பசாமி என்பவர் திரு. வி. ராமசாமி என்பவருக்கு விற்பனை
செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. இதை முன்னாள் கிராம
நிருவாக அலுவலர், திரு. ஞானசேகரன் விற்பனை செய்ய
வில்லை என்றும் தெரிய வருகிறது.

2. மேலும், மேற்படி பழுதடைந்திருந்த கிராமச் சாவடி
யைச் சீர் செய்யவே திரு. ஞானசேகரன் அவ்விடத்திலுள்ள
கொட்டகையைப் பிரித்ததாகவும் தெரிய வந்துள்ளது. எனி
னும், கிராம நிருவாக அலுவலர் என்ற முறையில் மேற்படி
விற்பனை குறித்து அலுவலகத்திற்குத் தெரிவிக்காததாலும்
அலுவலகத்திலிருந்து முன் அனுமதி பெறாமல் கொட்டகை
யைப் பிரித்ததாலும், அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு அதற்கு
தண்டனையாக அவருடைய ஊதிய உயர்வினை ஆறு மாத
காலத்திற்கு மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
அவர்களால் நிறுத்தி வைக்கப்பட்டு உத்திரவிடப்பட்டதுடன்
அவரை வேளச்சேரி கிராமம் மற்றும் மாம்பலம் கிண்டி வட்டத்
திலிருந்து மாற்றம் செய்தும் உத்திரவிட்டுள்ளார். மேலும்
மேற்படி அரசிற்குச் சொந்தமான கிராமச் சாவடி இடத்தினை
விற்பனை செய்த தனி நபரான திரு. எஸ். கருப்பசாமி என்
பவர் மீது சென்னை மாவட்ட ஆட்சியரால் தனியே நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது என்றும் மேற்படி இடம் தற்போது
அரசின் கைவசம் மாம்பலம்-கிண்டி வட்டாட்சியரின் பொறுப்
பிலுள்ளது என்றும் இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்)
அரசிற்குத் தெரிவித்துள்ளார்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் பல முரண்பாடான தகவல்களை அதிகாரிகள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் முதலில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய

(முற்பகல் 11-10)

கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிலே இரண்டாவது பத்தியில் பழுதடைந்திருக்கிற கிராம சாவடியைச் சீர் செய்யவே திரு. ஞானசேகரன் அவ்விடத்திலே உள்ள கொட்டகையைப் பிரித்தார் என்று தெரியவந்துள்ளது என்று தெரிவித்து இருக்கிறார்கள். அடுத்த வரியில் கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் மேற்படி விற்பனை குறித்து அலுவலகத்திற்குத் தெரிவிக்காததாலும், அலுவலகத்திலிருந்து முன் அனுமதி பெறாமல் கொட்டகையைப் பிரித்ததாலும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு அதற்குத் தண்டனையாக அவருடைய ஊதிய உயர்வை ஆறு மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவரத்தின் மூலம் அங்கே ஒரு முறைகேடு நடந்தது என்பது மாத்திரமல்ல; அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தை கிராம நிர்வாக அலுவலரே முன்னின்று விற்பனை செய்திருக்கிறார் என்பதும் தெரிய வருகிறது. அவ்வாறு விற்பனை செய்தது மாத்திரமல்ல; சாவடியாக இருந்த அந்த காம்பவுண்ட் இடத்தை இடித்திருக்கிறார்கள். அப்படி இடிக்கும்போது பொது மக்கள் எல்லோரும் சேர்ந்து தடுத்து இருக்கிறார்கள். அவ்வாறு தடுத்தவர்கள் மீது காவல் துறையிலே புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைக்கூட அரசியலாக்கி ஒரு அரசியல் கட்சி பத்திரிகையிலேகூட செய்தி போட்டிருக்கிறார்கள்.

அரசுக்குச் சொந்தமான அந்தச் சாவடி இடத்தைச் சட்டத்திற்குப் புறம்பாக விற்பனை செய்த அந்த கிராம நிர்வாக அலுவலரைப் பாதுகாக்கிற நோக்கத்தோடு விசாரணை செய்த அந்த மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் உதவியாளர் பாரபட்சமாக ஒரு முடிவு எடுத்து பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த நபரை வேலையிலிருந்து நீக்கம் செய்து விட்டதற்குப் பிறகு மீண்டும் பணி உத்தரவை வழங்கி அதே மாம்பலம், கிண்டி, வேளச்சேரி பகுதிக்கே நியமனமும் செய்திருக்கிறார். அவ்வாறு நியமனம் செய்ததை எதிர்த்து இதுபோல் தவறு செய்த அதிகாரிகளை நியமனம் செய்திருக்கிறீர்களே என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்ட பிறகு வில்லிவாக்கத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். எனவே இந்த விவரத்தின்படி, முழு பூர்வாங்க விசாரணையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேற்கொண்டால் அதிலே நடைபெற்று இருக்கிற முறைகேட்டைப்பற்றியும், விசாரணை செய்தவர்கள் ஒருதலைப்பட்சமான விசாரணையைச் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி





யும் தெரிய வரும். எனவே அந்த வகையில் விசாரணையை மேற்கொள்ள மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒட்டி, அந்தப் பிரச்சினையைப் பொறுத்து ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை விசாரித்து இங்கே அறிக்கை தரப்பட்டு இருக்கிறது. அறிக்கையிலே முரண்பாடுகள் இருந்தால் அல்லது உண்மை மறைக்கப்பட்டிருக்குமேயானால், மாறுபட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்து இருக்குமேயானால் அதை இப்போது கவனத்திற்குக் கொண்டு வந்தால் மட்டும் போதாது; அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்து மூலமாகவும் எழுதி இன்னின்ன முரண்பாடுகள் நடந்தன என்று தெரிவித்தால் விரிவான விசாரணை நடத்தலாம். ஆனால் இதிலே சொல்லப்பட்டிருப்பது திரு. கருப்பசாமி என்பவர்தான் விற்றார் என்று. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது வி.ஏ. ஓ-வே விற்றார் என்று கூறுகிறார்கள். ஆகவே இந்த முரண்பாடுகளை எல்லாம் எழுதித் தந்தால் வேறொரு விசாரணை நடத்துவதற்கு முயற்சி செய்யலாம்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய முழு விவரங்களை ஆதாரங்களுடன் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தனியாக எழுதித் தருகிறேன். அதுபோல் இன்றைக்கு தாசில்தார் அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களிலும் அரசுக்குச் சொந்தமான இடங்களை, எப்.சி.ஆர். என்று போட்டு, பல தனியார்கள் கையகப்படுத்தி எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு தருகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்த நடைமுறைகளை மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான இடத்தை எந்தத் தனியாரும் எந்த வகையிலும் ஆக்கிரமிக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அப்படித் தனியார்கள் வேறு வகைகளிலோ அல்லது விதிமுறைகளை மீறியோ எடுத்துக்கொள்கிற வகையில் எங்கு எந்த நடவடிக்கை மேற்கொண்டாலும் அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுத்துக்கொள்வதற்கு முன்பு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் கிராம நிர்வாக அலுவலர் அரசுக்குத் தெரியாமல் சட்டத்திற்குப் புறம்பாக நிலத்தை விற்பனை செய்ததாக இங்கே குற்றச்சாட்டு எழுப்பி இருக்கிறார்கள். இது போலவே செங்கற்பட்டு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரே பன்னாட்டு விமான நிலையத்திற்கு எதிரில் 1.7 ஏக்கர் நிலத்தை அதாவது அரசாங்க நிலத்தை 30 ஆண்டுக்காலத்திற்குக் குறைந்த வாடகையில் தன்னுடைய மகன் பெயரிலேயே எடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இதுபோல் பல்வேறிடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய இந்தியத் தண்டனைச் சட்டத்தில் இம்மூவபின் ப்ராப்பர்ட்டியை யாராவது எடுத்தால் அவர்களைத் தண்டிப்பதற்கு வழியில்லை என்ற காரணத்தால்தான் இதுபோல் பல்வேறிடங்களில் பல்வேறு குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய பெரிய பொறுப்பில் இருக்கப் கூடியவர்கள் இது போன்ற பெரிய அதிகாரிகள் அரசாங்கத்திற்கு நஷ்டத்தை விளைவிக்கக்கூடியவர்களாக இருப்பதைத் தடுக்க வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட விவகாரங்களை நான் அவை முன்னவரிடத்திலே கொடுத்திருக்கிறேன். இன்னும் சில விவரங்களையும் தருகிறேன். பன்னாட்டு விமான நிலையத்திற்கு எதிரில் இருக்கிற நிலம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு நான் கூறிய பதிலை ஒட்டி சில கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு எதிரில் இருக்கிற நிலத்தை எடுத்து அதைக் குத்தகைக்கு விட்டதாக விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அந்தக் கோப்பு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அதைக் குத்தகைக்கு விடலாம் என்ற அளவிற்கு அங்கே இருக்கிற டி. ஆர்.ஓ. சிபாரிசு செய்திருக்கிறார்கள். குத்தகை யாருக்கு என்று விசாரித்த வகையில் அவருடைய மகன் என்று தெரிய வருகிறது. ஆனால் அது இன்னும் கொடுக்கப்படவில்லை. முழுவதும் ஆராயச் சொல்லி இருக்கிறேன். குத்தகைக்கோ, விலைக்கோ கொடுக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திடம் தான் இருக்கிறது. இன்னும் கொடுக்கப்படவில்லை ; கோப்பு வந்திருக்கிறது. முழுவதும் ஆராயும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இது பற்றி விவரத்தைத் தந்தார்கள். அதன் அடிப்படையில் ஆராயும்படி கோரப்பட்டு இருக்கிறது. ஆராய்ந்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர வேறு அல்ல. அவருடைய மகனுக்கு இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்பதையும், விசாரணை செய்து நியாயம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குமரி மாவட்ட ரப்பர் கழகத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழக தோட்டங்களில் 3 ஆயிரததிற்கும் அதிகமான தொழிலாளர்கள் 20—10—1987 முதல் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

குமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டக் கழகத்தில் பணியாளர்கள் உட்பட மொத்தம் சுமார் 3,000 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்நிறுவனத்தில் (1) குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஐ.என்.டி.யு.சி. இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்), (2) குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (டி.என்.டி.யு.சி. தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ்), (3) கன்னியாகுமரி டிஸ்டிரிக்ட் எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (சி.ஐ.டி.யு.சி-இந்திய தொழிற் சங்கங்களின் மையம்), (4) குமரி தோட்ட தொழிலாளர் நலச் சங்கம், (5) அண்ணா தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் (அண்ணா தொழிற் சங்கப் பேரவை) மற்றும் (6) கன்னியாகுமரி டிஸ்டிரிக்ட் தோட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொழிலாளர் முன்னேற்ற பேரவை) ஆகிய தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன.

2. இந்நிறுவனத் தொழிலாளர்கள் 1986-87-ம் ஆண்டுக்கு 20 சதவிகிதம் போனசும் கருணைத் தொகை ரூ. 500-ம் கோரி 19/20—10—1987 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

3. இத்தாவா குறித்து திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடந்ததைத் தொடர்ந்து 3—11—87, 4—11—87, 5—11—87 மற்றும் 6—11—87 ஆகிய தேதிகளில் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு சென்னையில் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. 6—11—87 அன்று நடைபெற்ற சமரசப்

பேச்சு வார்த்ன்தகளின் போது 8.33 சதவிகிதம் போனசும்,
பிடித்தம் செய்யும் தொகையாக ரூ. 100–ம் கொடுப்பதாக நிர்
வாகம் ஒப்புக் கொள்ள, அதை ஏற்றுக் கொண்டு, தொழிலாளர்கள்
வேலை நிறுத்தத்லதை கைவிட்டு 9—11—87 முதல் வேலைக்கு
திரும்புவுதாக சம்மதித்து, தொழிற் தகராறு சட்டப்பிரிவு,
12(3)-ன் கீழ் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்),
சென்னை, முன்னிலையில் ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது.
அதன்படி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு
9—11—87 முதல் வேலைக்குத் திரும்பினர். நிறுவனத்தில்
தற்போது சகஜநிலை நிலவி வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்
பட்ட நேரத்தில் வேலை நிறுத்தம் நடந்து வந்தது. ஆனால்
அமைச்சரால் கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்
பட்டிருப்பதுபோல, ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அவர்கள் வேலைக்கு
சென்றிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து எழுப்பப்பட்டிருக்கக்
கூடிய ஒரு பிரச்சினையை அமைச்சருடைய கவனத்திற்குக்
கொண்டு வந்து அதை ஒரு கேள்வியாகக் கேட்கிறேன்.

100 ரூபாய் கொடுப்பதாக நிர்வாகம் ஒத்துக் கொண்டுள்ளது
என்று சொல்லப்பட்டிருப்பது உண்மைதான். அதை
எப்படி பிடித்தம் செய்வது என்பது சம்பந்தமாக தொழிலாளர்
துறை இணை ஆணையர் முன்னாடி பேசி முடித்துக் கொள்ள
லாம் என்று ஒப்பந்தத்திலே ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.
மாநில அரசு எடுத்துள்ள பல நிறுவனங்களிலே லாபம் ஏற்படா
மல் இருந்தாலும் கூட தீபாவளியை ஒட்டி கருணைத் தொகை
கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் 20 சதவிகிதம்
போனஸ் பெற்றிருக்கிறார்கள். தனியார் தோட்டத் தொழி
லாளர்கள் எப்படி உற்பத்தி செய்கிறார்களோ அப்படித்தான்
இந்தத் தோட்டத்திலே பணி புரிகிற தொழிலாளர்களும் உற்
பத்தி செய்கிறார்கள். என்பது துறையின் பொறுப்பிலே இருக்
கிற அமைச்சருக்கு நன்கு தெரியும். ஆகவே தேயிலைத் தோட்ட
தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை கொடுத்திருப்பதைப்
போல இங்கும் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்திருப்பதைக்
கருத்தில் கொண்டு, பொங்கல் நேரத்திலே கூட அவர்களுக்குப்
பொங்கல் பரிசு வழங்கப்படவில்லை என்பதையும் கருத்தில்
கொண்டு, கொடுத்த இந்த 100 ரூபாயை பிடித்தம் செய்யாமல்
இருப்பதற்கு, அதை கருணைத் தொகையாக மாற்றிக் கொள்வ
தற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, வேலை நிறுத்தம் தொடர்பாக
இந்தக் கவன ஈர்ப்பு தீர்மானம். அது முடிவுற்று விட்டது என்று
பதில் தெரிவித்து இருக்கிறேன். அதற்கு மேலும் ஏதாவது





கேட்க வேண்டிய கேள்விகள் இருந்தால் அந்தத் துறை சம்பந்தப்
பட்ட அமைச்சரிடத்திலே கேட்க வேண்டும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

## (இ) திருவில்லிபுத்தூரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெளி வாகத் தெரியாதது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, ''கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்
திலிருந்து அஞ்சல் செய்யப்படும் நிகழ்ச்சிகள் திருவில்லிபுத்தூர்
நகரில் தெளிவாக தெரியாததால் அப்பகுதி மக்களின் கவலை
குறித்த'' அவரசப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்
சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் ; மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கொடைக்கானலில் உயர் சக்தி கொண்ட (10 கிலோவாட்)
தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
சென்னை தொலைக் காட்சி நிலைய நிகழ்ச்சிகளை அப்பகுதி
யிலுள்ள மக்களும் காணும் வகையில் சென்னை—கொடைக்
கானல் நுண் அலை தொடர்பு (Micro Wave Link)
ஏற்படுத்தப்பட்டு இந்த அஞ்சல் நிலையம் 14–1–1987 முதல்
செயல்பட்டு வருகிறது.

கொடைக்கானலைச் சுற்றியுள்ள 150 கிலோமீட்டர் தூரம்
வரையில் வசிக்கும் மக்களும், நில அமைப்பு மற்றும்
பருவ நிலையைப் பொறுத்து அதற்கு மேற்பட்ட தூரத்தில்
இருக்கும் சில இடங்களில் உள்ளவர்களும் சென்னை தொலைக்
காட்சி நிலைய நிகழ்ச்சிகளை காண முடிகிறது. ஆனால் மலை
மறைவுப் பகுதிகளில் இவ்வஞ்சல் தெரிவதில்லை. அண்ணா,
மதுரை ஆகிய மாவட்டங்களில் முழுமையாகவும், இராமநாத
புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, காமராசர் மாவட்டங்
களில் பெரும்பாலான இடங்களிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பு
திருப்திகரமாக உள்ளது (Satisfactory Reception)
என்று தொலைக்காட்சித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 13

வத்திரா இருப்பு ( Watrap ) அருகேயுள்ள மலைத் தொடர்ச்சியினால் காமராசர் மாவட்டத்திலுள்ள திருவில்லி புத்தூர் நகரப் பகுதியில் கொடைக்கானல் தொலைக் காட்சி நிலைய அஞ்சல் நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிவதில்லை என்றும், இது இயற்கையினால் ஏற்பட்ட தடை என்றும், தொலைக்காட்சித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-20)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் வத்திராயிருப்பு அருகே யுள்ள மலைத் தொடர்ச்சியினால் காமராசர் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூர் நகரப் பகுதியில் கொடைக்கானல் தொலைக் காட்சி நிலைய அஞ்சல் நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிவதில்லை என்றும், இது இயற்கையினால் ஏற்பட்ட தடையென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வத்திராயிருப்பு அருகில் அமைந்துள்ள அந்த உயர்ந்த குன்றின் மேல் ஒரு லோ பவர் மின் ட்ரான்ஸ்மிட்டர் அமைக்கவும், டி.வி. நிகழ்ச்சி தென் மாவட் டங்களுக்கு நன்கு தெரிய மதுரையில் உள்ள ஒளிபரப்பு நிலை யத்தை சக்தி வாய்ந்ததாக மாற்றவும், டி.வி. யின் இரண்டாவது சானலை மதுரையில் தொடங்கவும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மலை நிழல் என்ற காரணத்தால், அங்கே இந்த ஒளிபரப்பு நிலையத்தால் பயன்பெறாத குறை இருக்கிறது. அதைப்போக்குவதற்கு அந்த இடத்தில் ஒரு குறைந்த சக்தியுள்ள ஒளிபரப்பு நிலையத்தை ஏற்படுத்த முடியுமா என்று மத்திய அரசுக்கு நாம் எழுத இருக்கிறோம். மத்திய அரசும் இதுபற்றி ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் ஒரு லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். 10 ஆயிரம் டி.வி.க்கள் இருக்கின்றன. ஆனாலும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாத நிலை இருக்கிறது. மத்திய அரசு இதனைச் செய்வதற்கு காலதாமதம் ஏற்படுமானால் ஸ்ரீவில்லிபுத்தூரில் தொலைக்காட்சி நுகர்வோர் மனமகிழ் மன்றம் என்று அமைத்திருக்கிறோம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்வாழ் மக் களுக்கு "டீஸ்சார்ஜரை அமைத்து டெலிகிராப் கம்பி மூலமாக, மின்கம்பி மூலமாக இணைப்புகள் கொடுப்பதற்கு முன்வந்தால் அந்த மன்றங்களுக்கு மத்திய அரசு உதவ மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபற்றி ஆய்வு அறிக்கை மத்திய அரசுக்கு—சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட இருக்கிறது. சம்பந்தப்பட்ட மத்திய துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு விரைவில் பரிகாரம் கிடைக்க நடவடிக்கையெடுக்கப் படும்.

(ஈ) தென்காசி வட்டத்தில் கால்நடைகள் கருச்சிதைவு நோயினால் பாதிப்பு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, "தென்காசி வட்டத்தில் உள்ள கால்நடைகள் அதிக அளவில் கருச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாட்டில் கருச்சிதைவு நோய் பரவலாக வெகு நாட் களாக இருந்து வந்துள்ளது. 1957-ல் இருந்து 1961 வரை செய்த ஆய்வின் மூலமாக இந்த நோய் மேற்குதொடர்ச்சி மலைச் சார வில் உள்ள கிராமங்களில் அதிக அளவில் இருப்பது கண்டுபிடிக் கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, சங்கரன் கோயில், அம்பாசமுத்திரம் தாலுக்காக்களிலும், காமராஜர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவிலும் அதிக கிரா மங்கள் இந்த வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளன. தென்காசி தாலுக்காவில் 16 கிராமங்களிலும், அம்பாசமுத்திரம் தாலுக்கா வில் 5 கிராமங்களிலும், சங்கரன்கோயில் தாலுகாவில் 9 கிரா மங்களிலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் மூன்று இடங் களிலும் இந்த நோய் அதிக அளவில் காணப்படுகிறது. தவிர இந்த ஆய்வின் போது எடுக்கப்பட்ட கணக்கின்படி இந்த நோய் தமிழ்நாட்டில் மூன்று சதவிகித மாடுகளிடையே காணப்பட்டது. அதே சமயம் மேற்கு தொடர்ச்சி பகுதியிலுள்ள கிராமங்களில் இந்த வியாதி சராசரியாக 23 சதவிகித மாடுகளிடையே காணப் பட்டது. இந்த நோய் பரவாமல் தடுக்க கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு தகுந்த பயிற்சியும், விவரங்களும் வழங்கப்படு கிறது. சில கிராமங்களில் இந்த நோய் வெகுகாலமாக இருப் பதற்கு காரணம் அங்குள்ள விவசாயிகள் கடைப்பிடிக்கும் மாடு வளர்ப்பு முறைகளும், மற்ற கால்நடைகள் அந்த கிராமங்கள் வழியாக மற்ற இடங்களுக்கு செல்லுதலும் முக்கிய காரணங்கள் ஆகும். ஆகவே

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 13

இந்த கிராமங்களில் உள்ள கன்றுகளுக்கு தீவிர முறையில் தடுப்பூசி போடப்பட்டு நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஆய்வு குறிப்புப்படி தமிழ்நாட்டில் இந்த நோய் கணிசமாக குறைந்திருப்பது தெரியவருகிறது. தற்சமயம் தமிழ்நாட்டில் 0.9 சதவீத மாடுகளே இந்த வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத்துறையின் விடாமுயற்சியால் இந்த நோயினால் பாதிக்கப்படும் மாடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. இந்தப்பணியை தொடர்ந்து செய்து, இந்த வியாதியை அறவே நீக்க கால்நடை பராமரிப்புத்துறை எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

2. தென்காசி தாலுக்காவில் இந்த நோயைத் தடுக்க கால்நடை பராமரிப்புத்துறை தகுந்த நடவடிக்கை எடுத்து வந்துள்ளது. இதற்காகவே தனியாக ஒரு கால்நடை உதவி மருத்துவர் தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு பணிபுரிந்து வருகிறார். இந்நோயைக் கட்டுப்படுத்த 1982–83 முதல் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்தப் பகுதியில் உள்ள மாடுகளை இந்நோய்க்கான பரிசோதனை செய்து அந்த பகுதியில் உள்ள சிறு கன்றுகளுக்கு இந்த வியாதிவராமல் தடுப்பூசி போடப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் தென்காசி தாலுகாவில் 2,680 மாடுகள் இவ்வியாதிக்காக பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பகுதியில் 14,198 கன்றுக்குட்டிகளுக்கு இவ்வியாதி வராமல் இருக்க தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தவிரவும் இப்பகுதி மாடுகள் மீது தீவிர கவனம் செலுத்தி இந்த வியாதி மேலும் பரவாமல் இருக்கவும், மற்ற கன்றுக் குட்டிகளுக்கு பற்றாமல் இருக்கவும் நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையில் இதற்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பொதுவாக துறையின் மூலமாக நல்ல நடவடிக்கையெடுத்து ஓரளவிற்கு இந்த வியாதி கட்டுபபடுத்தப்பட்டிருக்கிறது என்று அதிலிருந்து தெரிந்தாலும் கூட இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகள் மீண்டும் அந்த நோயால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறதால், இந்த மாடுகளை அழிப்பது நல்ல வழியாக இருக்குமென்ற கருத்தைச் சொல்கிறார்கள். அப்படியானால், நோய் வந்து பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை வெட்டுபவர்களுக்கு அரசிலிருந்து மானியம் கொடுத்துக் கொண்டிருப்பதைப் போல இந்த பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு சமுதாயத்தின் முக்கியத்வதைக் கருத்தில் கொண்டு அவற்றை அழிப்பதற்கு ஏற்பாடு செய்து, அதற்கு ஏதாவது அரசு நஷ்டயீடு கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 13]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதியில் 29 சதவீதமாக இருந்த நோய் மிகவும் குறைக்கப்பட்டு தற்போது மிகவும் குறைந்த அளவில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நோய் க்ஷயரோகம் போன்ற ஒரு நோயாகும். கன்று தாயிடம் பால் குடிக்கிறபோதே நோய் கன்றுக்கு போய்விடுகிறது. ஆகவே கன்று சினைப்படுவதற்கு முன்பே தடுப்பு ஊசி போடப்படுகிறது. தாய் வயிற்றில் கரு இருக்கிறபோது 7 மாதத்திலிருந்து 10 மாதத்திற்குள்ளே இந்தக் கிருமி வேலை செய்து இந்தக் கன்றை கொன்று விடுகிறது. இபபடி கன்றைக் கொல்கிற இந்த நோயைத் தடுப்பதற்கு தகுந்த நடவடிக்கையெடுக்கப்படுகிறது. மாட்டை அழிக்க வேண்டிய தேவையில்லை.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் ஒரு முக்கியமான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நோய் தமிழகத்தில் குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைச் சாரலில் உள்ள கிராமங்களில்தான் அதிகமாக இருக்கிறது என்ற தகவலைத தந்திருக்கிறார்கள். ஆகவே என்னுடைய பகுதியில் இந்த நோய் அதிகமாக இருக்கிறது. இது குளிர் மலைப் பிரதேசத்தில் அதிகமாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே அந்தக் கண்ணோட்டதத்தில் இதற்காக இராணிப்பேட்டையில் இருக்கிற கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக ஏதாவது ஆராய்ச்சி நடக்கிறதா ? இதுபோன்ற சூழ்நிலையில் உள்ள, தட்ப வெட்ப நிலையில் உள்ள, உலகத்திலே பல பகுதிகளிலே உள்ள ஆராய்ச்சி நிறுவனத்தோடு தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு, மிகப் பெரிய அளவிலே இதைத் தடுப்பதற்காக அரசு ஏதாவது ஆராய்ச்சிகளுக்கு உத்திரவிட்டுள்ளதா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத் தடுப்பதற்குத்தான் கன்றுகளுக்கு சினை ஆவதற்கு முன்பே ஊசி போடப்படுகிறது. ஆனால் சினைப்பட்ட பிறகு, இதைத் தடுப்பதற்குத் தற்போது எந்த மருந்தும் கையாளப்படுவதில்லை. அந்த நோயைக் கண்காணிப்பதற்கு என்றே ஒரு விசேஷ கால்நடை உதவி மருத்துவர் தென்காசியில் போடப்பட்டு இருக்கிறார்கள். குளிர்ப் பிரதேசம் இந்த நோய் பரவுவதற்கு பொருத்தமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். கன்று ஈர்ந்தவுடன் வெளியே வருகிற அந்தக் கொடியை எடுத்து பத்திரமாக மூடி, மரத்திலேயோ அல்லது கீழேயோ புதைத்தால் இந்த நோய் பரவாது. ஆனால் அந்தப் பகுதியில் இதைச் சரியாகச் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். இதற்காக ஒன்றியத்தில் உள்ள கால்நடை அதிகாரிகள் மூலமாகவும் மற்றும் விளம்பர

இலாக்கா மூலமாகவும் சினிமா ஸ்லைடு, போஸ்டர்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு இதுபற்றிச் சொல்லி, அறிவை வளர்ப்பதற்குத் திட்டம் திட்டப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது.

**(உ) மருங்காபுரி தொகுதி, பொன்னியாறு அணை மண்மேடிட்டுள்ளதால் விவசாயிகள் பாதிப்பு.**

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''மருங்காபுரி தொகுதி—வையம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பொன்னையாறு அணையில் மண்மேடு அதிகமாக உள்ளதால் அணையை நம்பியுள்ள விவசாயிகளின் பாதிப்பு குறித்து'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதி வையம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பொன்னையாறு நீர்த்தேக்கம் 1974-ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இதன் நீர்த்தேக்க அளவு 51 அடியாகும். இதன் கொள்ளளவு 120 மில்லியன் கன அடிகளாகும். இந்த நீர்த்தேக்கத்திற்கு மலை வனாந்திரப் பகுதியில் இருந்து நீர்வரத்து வருவதால் கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் மண் படிந்து வருகிறது. இதனால் சுமார் 7 மில்லியன் கன அடி கொள்ளளவு குறைந்துள்ளது. எனினும் இந்த நீர்த்தேக்கத்தினால பயனடையும் பாசனம் பாதிக்கப்படவில்லை.

இந்த அணையின் கொள்ளளவு மண் படிந்து பாதிக்கப்படுவதைத் தடுக்க பூண்டியில் உள்ள நீரியல் மற்றும் நீர்நிலை இயல் ஆராய்ச்சிக் கழகம், நீர் நிலை ஆய்வு மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் கிடைக்கும் முடிவுகளைத் தொடர்ந்து மண் மேடிடுவதைத் தடுப்பதற்காக தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. சோலைராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், நீர் நிலை இயல் ஆராய்ச்சிக் கழகம் நீர் நிலை ஆய்வு மேற்கொண்ட பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த ஆய்வினை முடித்த பிறகு மிக விரைவிலே அந்த மண்மேட்டினை அகற்றித் தருகிற பணியினை அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா? மேலும் வருகிற காலம் மழைக்காலமாக இருக்கிற காரணத்தாலும் அந்த அணைக்





கட்டைச் சுற்றிலும் இருக்கிற வரப்பு, வாய்க்கால்கள் மிகவும் பழுதடைந்து இருக்கிற காரணத்தாலும்—பல ஆண்டுகளுக்கு முன்பு பழுது பார்த்த காரணத்தாலே—சீரழிந்து இருக்கிற அந்த வரப்பு வாய்க்கால்களை செம்மை செய்வதற்கு தற்போது நிதி ஒதுக்கித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர் நிலை ஆய்வு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முடிவுகளை மிக விரைவாக வாங்கி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். வரத்துக் கால்வாய்கள் தூர்ந்துபோய் இருப்பதை என்னுடைய கவனத்திற்கு தற்போது கொண்டு வந்து இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய தகுந்த நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்திரவிடப்படும்.

திரு. க. சோலைராசு : துணைத் தலைவர் அவர்களே, மணப்பாறை வட்டத்திலே மக்களுடைய பொழுதுபோக்காக அங்கே இருக்கக்கூடியது இந்த அணை. இந்த அணையிலே இருக்கின்ற, கண்கவரும் வகையில் இருக்கின்ற அந்தப் பூங்கா தற்போது சிறிதுகாலமாக சீரழிந்து இருக்கிறது. எனவே பூங்காவைச் செம்மைப்படுத்துவதற்கு அதிக நிதியினை ஒதுக்க வேண்டும். மேலும் இந்த அணைக்கட்டிற்குச் செல்வதற்குத் தேவையான சாலை மிகவும் பழுதடைந்திருக்கிறது. சாலையைச் சரி செய்வதற்காக, பொதுப்பணித்துறையினரைக் கேட்டால், அணைக்கட்டை மேம்படுத்துவதற்கு மட்டுமே நிதியிருக்கிறது என்று சொல்கிறார்கள். சாலைக்குத் தனியாக நிதி இல்லை என்று சொல்கிறார்கள். எனவே இந்த அணைக்கட்டுக்குச் செல்லக்கூடிய அந்த சாலையை மேம்படுத்துவதற்கு விரைவிலே நிதி ஒதுக்கித்தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அதிகாரிகளோடு பேசி, நிதிநிலைமைக்கேற்ப தகுந்த முடிவு எடுக்கப்படும்.

## 5. அறிவிப்புகள்

**(அ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

[1987 நவம்பர் 13

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை மேலும் திருத்துவதற்காக கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.



1987 நவம்பர் 13]

(முற்பகல் 11-30)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை தொடர்ந்து கொண்டு வருவதால் நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன. இந்தச் சட்டத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை தொடக்கத்திலேயே நான எதிர்க்கிறேன். காரணம்........(மணியடிக்கப்பெற்றது.(

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். இந்த தனி அதிகாரிகளுடைய பதவியின் காலத்தை தொடர்ந்து நீட்டித்துக்கொண்டு வருவதை ஒரு கொள்கையாக இந்த அரசு கொண்டிருக்கிறது. இந்த கொள்கையை அரசு மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கூறி இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

*1987 நவம்பர் 13*

(...) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட
முன்வடிவு, 1987

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன்:

"ஆளுநர் அவர்களால் 25—9—1987-ஆம் தேதியன்று
பிறப்பிக்கப்பெற்ற 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப்
பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு
அவசரச் சட்டம் எண் 6/1987) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. க. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :

"1987ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்
கழக (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண் 41/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற
வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானமும்
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்க
ளுடைய தீர்மானமும் பேரவையின் முன் விவாதத்திற்கு
வைக்கப்பெற்றிருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகத்
திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச்
சூட்டி இந்த மசோதாவை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இன்றைக்குக்
கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கின்ற திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதை நான் வரவேற்கிறேன்.
முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த மட்டிலும், திராவிட

---

* 11—11—1987ஆம் தேதியிட்ட. தமிழ்நாடு சிறப்பு
அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



*1987 நவம்பர் 13]* [திரு. அ. ரகுமான்கான்]

முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டிலும் ஆயிரம்
கருத்து வேறுபாடுகள் அரசியல் ரீதியாக இருக்கலாம். கருத்து
வேறுபாடு அரசியல் ரீதியாக என்பது வேறு ; அரசியல்
பண்பாடு என்பது வேறு. எனவே முதலமைச்சர் அவர்களைக்
கௌரவிக்கின்ற வகையில் இந்த மருத்துவப் பல்கலைக்
கழகத்திற்கு முதல்வர் அவர்களுடைய பெயரைச் சூட்டுவதை
யாரும் அரசியல் ஆக்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்களும்
அதைச் செய்ய விரும்பவில்லை. எனவே எங்கள் கழகத்தின்
சார்பாகவே நாங்கள் வரவேற்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தில்
கூட—அன்றைக்கு ஆட்சி அண்ணா அவர்கள் கையில் இல்லை.
1967-க்கு பின்னால்தான் அண்ணா அவர்கள் முதலமைச்சராக
ஆனார். இது அனைவருக்கும் தெரியும். சென்னை மாநக
ராட்சி அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
அதிகாரத்தின் கீழ் இருந்தது ; பேரறிஞர் அண்ணா அவர்கள்
இருந்த போது, மறைந்த பெரியவர் பெருந்தலைவர் காமராஜர்
அவர்களுக்கு சிலை வைக்கப்பட்டது. அவர்கள் காங்கிரஸ்
காரர் என்பதற்காக அண்ணா அவர்கள் எதிர்க்கவில்லை.
அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கவில்லை.
அதேபோல் அரசியல் பண்பாடு அன்றைக்கு அண்ணாவால்
காப்பாற்றப்பட்டதுபோல் 'மாற்றான் தோட்டத்து மல்லிகையும்
மணக்கும்' என்று சொல்லியவர் அண்ணா அவர்கள். அந்த
அடிப்படையிலே நம்முடைய முதலமைச்சருடைய பெயரை
இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு வைக்கப்படுவதை
நாங்கள் இங்கே வரவேற்கிறோம்.

ஆனால் உங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிட
மிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது; இந்த மருத்துவப்
பல்கலைக் கழகத்திற்காக திராவிட முன்னேற்றக் கழ
ஆட்சியின்போது முயற்சி செய்யப்பட்டது. ஆனால் மத்திய
அரசு அப்போது அனுமதி வழங்கவில்லை. இன்றைக்கு
இந்த அரசு அந்த முயற்சியிலே ஈடுபட்டு மத்திய அரசு அதற்கு
அனுமதி அளித்து இருக்கிறது. அதற்கான ஒரு சட்டத்தை
ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்
கள். தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகம் என்று அதற்கு
பெயர் சூட்டப்பட்டது. அது தொடர்பாக பல்வேறு அம்சங்
கள் எல்லாம் அந்த மசோதாவிலே சொல்லப்பட்டது.
சட்டம் ஆக்கப்பட்டது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்
களைக் கேட்கிறேன். தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகம்
என்று சட்டம் வந்தபோது இந்த பல்கலைக் கழகத்தினுடைய
பெயரை "டாக்டர் எம். ஜி. ஆர். மெடிக்கல் யூனிவர்சிட்டி"
என்று நீங்கள் வைத்து இருக்கலாம். ஏன் அப்போது வைக்க
வில்லை ? வைக்காததற்கு என்ன காரணம் ? அதிலே என்ன
சட்ட சிக்கல் ? அப்போது முதலமைச்சருடைய பெயரை
வைக்கக் கூடாது என்ற முடிவிலே இந்த அரசு இருந்ததா ?

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 13

அப்படியானால் நான் கேட்கிறேன். அதை விட்டுவிட்டு
திடீரென்று கவர்னர் மூலமாக— ஆளுநர் மூலமாக அவசரச்
சட்டத்தின் மூலமாக இந்தப் பெயர் மாற்றத்தைக்
கொண்டுவருவது என்று சொல்வது எந்த விதத்தில் அவசரச்
சட்டத்தைப் பயன்படுத்தவேண்டுமோ, அவசரச் சட்டம் எந்தக்
காரணத்திற்காகப் பிறப்பிக்கப்படவேண்டுமோ, அது போன்று
இல்லாமல் இந்த ஆட்சியில் அவசரச் சட்டம் என்பது மிக மிக
சாதாரண காரியங்களுக்காகப் பயன்படக்கூடிய ஆளுநர் அவர்
கள் ஒத்துக்கொள்ளக் கூடிய விஷயமாக நீங்களே அதைப்
பயன்படுத்திக்கொள்கின்ற காரியமாக இருப்பது சட்டத்தின்
நோக்கத்தை, ஜனநாயகத்தை, அரசியல் சட்டத்தை அவமானப்
படுத்துவதாக இருக்கிறது. காரணம், அன்றைக்கே இந்தப்
பெயர் மாற்றத்தை நீங்கள் விரும்பியிருந்தால் செய்திருக்கலாம்.
அதற்கு ஒரு அவசரச் சட்டமும் தேவையில்லை.

இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
அன்றைக்குக்கூட மசோதா கொண்டுவந்த நிலையில் நான்
எதிர்த்தேன். அப்போது ஒரு கேள்வியை இந்த அவையில்
கேட்டேன். ஏற்கனவே இந்த அரசாங்கம் ஒரு உத்தரவு
போட்டிருக்கிறது. உயிரோடு இருப்பவர்களுடைய பெயராலே
அரசாங்கக் கட்டிடங்களுக்கோ, நிறுவனங்களுக்கோ பெயர்
சூட்டக் கூடாது என்ற உத்தரவு இருக்கிறபோது, அரசாங்கத்
திற்கென்று அப்படி ஒரு கொள்கை இருக்கிறபோது
நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெயராலே மருத்
துவக் கல்லூரிக்கு பெயர் சூட்டுவதை வரவேற்றாலும், சட்ட
ரீதியாக, அது தப்பல்லவா ? அந்த உத்தரவிற்கு விரோதமான
தல்லவா ? அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு விரோத
மல்லவா ? அப்படி இருக்கும்பொழுது இந்த மசோதாவை
எப்படிக் கொண்டுவரலாம் என்று நான் கேட்டேன். அதற்கு
நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள்.
அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். அப்படி ஒரு
உத்தரவு இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது அதை
நாங்கள் எடுத்துவிட்டோம். எனவே உயிரோடு இருப்பவர்
களுடைய பெயராலே அரசாங்கக் கட்டிடங்களுக்கோ, நிறுவனங்
களுக்கோ, பெயர் வைக்கக் கூடாது என்று நாங்கள் ஏற்கெனவே
எடுத்த முடிவு இப்போது எங்களுடைய முடிவல்ல. நாங்கள்
ஒரு புதிய கொள்கைக்கு வந்துவிட்டோம். உயிரோடு இருப்
பவர்களின் பெயர்களை தாராளமாக வைக்கலாம்
என்ற முடிவிற்கு வந்துவிட்டோம் என்று சொன்னார்கள்.
அன்றைக்கு மசோதா நிலையிலே எதிர்த்த காரணத்தால்
நான் விளக்கமாகப் பேசவில்லை. ஆனால் இப்போது அமைச்ச
ரவர்கள் இருக்கிறார்கள். நான் கேட்கிறேன். அந்த உத்தரவு
போடவேண்டிய அவசியமென்ன ? அண்ணா, பெரியார் அவர்
கள் உயிரோடு இருந்தபோதுதான், பெரியாருக்கு சிலை
வைக்கப்பட்டது. அண்ணா அவர்கள் உயிரோடு இருந்தபோது
தான் அண்ணாவிற்கு சிலை வைக்கப்பட்டது. எனவே



1987 நவம்பர் 13] [திரு. அ. ரகுமான்கான்]

உயிரோடு இருப்பவர்களைக் கௌரவிக்கக் கூடாது என்றோ,
உயிரோடு இருப்பவர்கள் பெயர்களை வைக்கக் கூடாது
என்பதோ அண்ணாவின கொள்கையாகவும் எனக்குத் தெரிய
வில்லை. பெரியாரிய கொள்கையாகவும் எனக்கு தொியவில்லை.
ஆனால் அண்ணா வழி, அதுபோன்று பெரியார் வழி
ஆட்சி நடத்துவதாகச் சொல்கிற இந்த அரசாங்கம், திடீரென்று
ஒரு நாள் ஞானம் உதித்து, போதி மரத்தடியில் புத்தருக்கு
ஞானம் பிறந்தது போலே, உயிரோடு இருப்பவர்கள் பெய
ராலே கட்டிடங்களுக்கு, நிறுவனங்களுக்கு பெயர் வைக்கக்
கூடாது என்ற உத்தரவு போடுவதற்கு என்ன காரணம் ? அதற்கு
என்ன அவசியம் இருக்கிறது ? ஒரு நோக்கம் இருக்கவேண்டும்.
ஒரு 'ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்' இருக்கவேண்டும். காரண
மில்லாமல் காரியங்கள் நடக்காது. இது எனக்கு விளங்கவில்லை.
அமைச்சரவர்கள் இந்த அவையிலே கொஞ்சம் விளக்கமாகச்
சொல்வார்களேயானால், என்னால் புரிந்துகொள்ள முடி யும்.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், உங்களுடைய
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே
இருக்கக் கூடிய ஆலந்தூர் நகராட்சிக்கு அகில
இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகன
ரங்கம் அவர்கள் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது என்பதை
உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். பத்திரிகை
நிருபர்கள் இதுபற்றி இப்போது இருக்கிற அமைச்சர் அவர்
களிடம் கேட்டார்கள். அதற்கு அமைச்சரவர்கள் 'நோ
கமெண்ட்ஸ்' என்று பதில் சொல்லிவிட்டார்கள். ஆனால்
அதிலே என்ன உண்மை என்றால், உயிரோடு இருப்பவர்களின்
பெயராலே கட்டிடங்களுக்கோ, அல்லது நிறுவனங்களுக்கோ
பெயர் வைக்கக் கூடாது என்ற அந்த உத்தரவு அமலில்
இருக்கிறது. அப்படி அமலில் இருக்கும்போது ஆலந்தூர்
நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகனரங்கம் பெய ர்
வைக்கப்பட்டது. அந்த நெருக்கடியான நிலையில் அந்தக்
கேள்விக்கு பதில் சொல்லமுடியாத நம்முடைய அமைச்ச
ரவர்கள் ' நோ கமெண்ட்ஸ் ' என்று சொன்னார்கள். அப்படி
யானால் இந்த அரசு அந்த உத்தரவை யீறியிருக்கிறதா,
இல்லையா ?

அதுபோலவே உயிரோடு இருப்பவர்களின் பெயரை அரசாங்
கக் கட்டிடங்களுக்கோ, நிறுவனங்களுக்கோ பெயர் வைக்கக்
கூடாது என்ற உத்தரவு இருக்கிறபோது, அமலில் இருக்கும்போது
—நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன—அப்படி
ஒரு கொள்கை எடுத்ததற்குப் பிறகுதான் கொடைக்கானலில்
உயிரோடு இருக்கக்கூடிய அன்னை தெரசாவின் பெயரை
மகளிர் பல்கலைக் கழகத்திற்கு வைத்திருக்கிறீர்கள். நீங்கள்
தான் உத்தரவைப் போட்டிருக்கிறீர்கள். அரசாங்கம் உத்தரவை

மீறுகிறது. சாதாரண ஒரு நபர் உத்தரவை மீறினால் அவன்
தண்டிக்கப்படுகிறான். சட்டத்தை மீறினால் தண்டிக்கப்படு
கிறான். இப்போது அரசாங்கமே உத்தரவை மீறுகிறதே, அது
தப்பு செய்கிறதே, அதற்கு இந்த அரசாங்கம் என்ன பதில்
சொல்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இப்போது அந்த ஜீ. ஓ.வை எடுத்து
விட்டீர்கள். ஏன் போட்டீர்கள்? ஏன் எடுக்கிறீர்கள்? இது
எல்லோருக்கும் தெரியும். முதலமைச்சர் அவர்களின் பெயரை
வைக்க வேண்டுமானால், அந்த ஜீ. ஓ. இருந்தால், அது
நன்றாக இருக்காது. எனவே அந்த ஜீ. ஓ. வை எடுக்கவேண்டு
மென்று எடுக்கிறீர்கள். அதை வரவேற்கிறேன். அப்படி
யானால் இந்த நடைமுறையில் அரசாங்கம் புதிய கொள்கை
ஒன்றை எடுத்திருக்கிறது. அந்தப் புதிய கொள்கைதான்
என்ன? உயிரோடு இருப்பவர்களின் பெயரை கட்டிடங்களுக்கும்,
நிறுவனங்களுக்கும் வைக்கலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டது.
அப்படியானால், நாவலர் அவர்கள் இப்போது இங்கே இல்லை.
உங்களுக்குத் தெரியும். அண்ணாவால் தம்பி வா, தலைமை
ஏற்க வா என்று அழைக்கப்பட்டவர், நடமாடும் பல்கலைக்
கழகம் என்று உங்களால் போற்றப்படுபவர் எங்கள் கட்சி
யிலே இருந்தார். பிறகு 'எமர்ஜென்சி' வந்த பிறகு
உங்கள் பக்கம் வந்துவிட்டார்கள்.

(முற்பகல் 11-40)

ஆனால், அவருடைய பெயராலே, உங்களுக்கு மிக நன்றாகத்
தெரியும். ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளி நாவலர் பெயராலே
இருந்தது. ஆனால் நாவலர் நன்றாகத்தான் இருந்தார். அவ
ருடைய பெயரைப் போய் எடுத்தீர்கள். நான் கேட்கிறேன்.
இப்போதுதான் ஜி.ஓ. இல்லையே. அப்படியானால் நாவல
ருடைய பெயர் அதற்கு வைக்கப்படுமா என்று நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கமே நாவலரைக்
கௌரவிக்கக் கூடாதா? ஜி.ஓ. தான் இப்போது இல்லையே.
அவர் பெயரை எடுத்தீர்களே, பழையபடி அந்த பெயரை
வைப்பீர்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுபோலவே அண்ணாவினுடைய துணைவியார் திருமதி
ராணி அம்மையார் அவர்கள் மரியாதைக்கு உரியவர்கள்.
கழகக் குடும்பத்திலே அவர்களுக்கும் பங்கு உண்டு. அந்த
அம்மாவினுடைய பெயராலே ஏற்கெனவே கே. கே. நகரிலே
கல்யாண மண்டபம் இருந்தது. திடீரென்று அதை எடுத்தீர்கள்.
நான் கேட்கிறேன். அண்ணாவிற்கு செய்கின்ற மரியாதையாக
மீண்டும் அந்த அம்மாவினுடைய பெயரை அந்த கல்யாண மண்ட
பத்திற்கு வைக்கப்படுமா? அண்ணாவைக் கூட விட்டு விடக்
கூடாது. எனவே ராணி அண்ணா கல்யாண மண்டபம் என்று
பெயராவது சூட்டப்படுமா என்று நான் தெரிந்து கொள்ள
விரும்புகிறேன். அது போலவே இந்த இயக்கத்திற்காக





அரும்பாடுபட்டவர், இந்த இயக்கத்திலுடைய வளர்ச்சிக்காக
திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துக்
கொண்ட எங்களுடைய மாவட்டச் செயலாளர் அண்ணன்
திரு. முத்து அவர்களுடைய பெயராலே மதுரையிலே, மதுரை
முத்து மேம்பாலம் என்று இருந்தது. அதையும் எடுத்தீர்கள்.
அலிபாபாவும் 40 திருடர்களும் என்ற கதையிலே சிக்கிக் கொள்ளக்
கூடாது என்பதற்காக ஒரு வீட்டு கதவுக்கு மார்க் போட்டு விட்டு
எல்லா வீட்டு கதவுகளுக்கும் மார்க் போட்டதைப் போல
யாரையோ மனதிலே வைத்துக் கொண்டு யாருடைய பெய
ரையோ எதிலிருந்தோ அகற்ற வேண்டும் என்பதற்காக,
கேள்வி கேட்டு விடுவார்களே, அது தெரியக் கூடாதே, தப்பு
அடுத்தவர்களுக்கு விளங்கி விடக்கூடாதே என்பதற்காக நாவலர்
அவர்களையும் கூட விட்டு விட்டீர்கள், ராணி அம்மாவின் பெய
ரையும் எடுத்தீர்கள். முத்து அவர்களுடைய சேவையைக் கூட
மறந்து கடைசி வரைக்கும் இந்த இயக்கத்திற்காகப் பாடுபட்ட
அவருடைய மேம்பாலம் என்ற பெயரையும் எடுத்தீர்கள். அது
மீண்டும் வைக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

எங்களுடைய கட்சியின் தலைவர், அன்புத் தலைவர்,
டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயராலே அண்ணா
சாலையில் ஒரு மாளிகை நந்தனத்திலே, கலைஞர் கருணாநிதி
மாளிகை என்று இருந்தது. அது அவருடைய சொந்த மாளிகை
அல்ல. அதைப் போல சிலர் பிரச்சாரம் செய்தார்கள். அது
அரசாங்கத்தினுடைய மாளிகை. பெயர் இருந்தது. எப்படிப்
பெயர் இருக்கலாம்? கருணாநிதி விளம்பரப் பிரியர். எனவே
இருக்கக் கூடாது என்று சொல்லி அதை எடுத்தீர்கள். உயிரோடு
இருக்கக் கூடியவர்கள் பெயராலே இருக்கக் கூடாது என்பதற்
னாலே அதை எடுத்தீர்கள். எனவே பழையபடி அங்கே அவ
ருடைய பெயரை வையுங்கள் என்று நான் கேட்க மாட்டேன்.
ஏனென்றால் அந்த அளவிற்கு நீங்கள் அதிலே அரசியல் பண்
பாட்டோடு இருந்திருப்பீர்களேயானால் அந்தப் பெயரை
எடுப்பதற்காக இந்த உத்தரவைக் கொண்டு வந்திருக்க மாட்
டீர்கள். எனவே, அவருடைய பெயரை வையுங்கள் என்று உங்
களிடத்திலே கருணை மனு போட மாட்டேன். இந்த ஜி.ஓ.
போட்டதற்கும், இந்த ஜி.ஓ. எடுக்கப்பட்டதற்கும் கதாநாய
கனே அவர்தான் என்பதை நாடு அறியும். அவர் கட்டிடத்தில்
வாழவில்லை. மக்களுடைய இதயங்களில் வாழ்கிறார். இது
எங்களுடைய கருத்து.

அடுத்து மிக முக்கியமான ஒன்றை நான் அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தயவு
செய்து அமைச்சர் அவர்கள் சபையிலே இதற்கு விளக்கம்
சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக
நம்முடைய மருத்துவப் பல்கலைக் கழகம் தரமணியில் பேசிக்
மெடிக்கல் சையன்ஸ்—போஸ்ட் கிராஜுவேட் என்று கல்வி கற்
பிக்கப்பட்டு வருவதை அறிவீர்கள். மெடிக்கல் சையன்ஸ் என்ற

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 13

முறையில் அதை மெட்ராஸ் யூனிவர்சிட்டியோடு அதனுடைய
புரபசர்ஸ், லெக்சரர்ஸ், ஸ்டாஃப் எல்லாம் இணைத்து இருப்பது
தான் சரியாக இருக்கும். அதை நீங்கள் தனியாக மருத்துவப்
பல்கலைக் கழகத்திலே கொண்டு போய் இணைப்பதனால்
இன்றைக்கு இரண்டு யூனிவர்சிட்டிக்கு வர வேண்டிய கிராண்ட்
ஒரே யூனிவர்சிட்டிக்கு வந்து விடுகிறது. அதுமட்டுமல்லாமல்
இது மருத்துவத்தோடு மிகுந்த தொடர்புடையதல்ல. இது
ஒரு பேசிக் சையன்ஸ். இது ஒரு தனிப்பட்ட சப்ஜெக்ட். ஆகை
யினால் தரமணியில் இருக்கக்கூடிய போஸ்ட் கிராஜுவேட்ஸ்
பேசிக் சையன்ஸ் என்று சொல்வது சென்னைப் பல்கலைக்
கழகத்தில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்பு
கிறேன். வைஸ்-சான்ஸலர் இன்னும் போடப்படாமல் இருக்
கிறது. பழைய கட்டிடத்திலே புதியதை துவக்க வேண்டாம்
என்று கேட்டுக் கொண்டு அதற்கான நிலங்களை ஆர்ஜிதம்
செய்து இந்தப் பல்கலைக் கழகத்தை திறம்பட இயக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்.
இன்றைக்கு இந்தியாவினுடைய சுப்ரீம் கோர்ட் ஒரு கடுமை
யான உத்திரவை, ஒரு டைரக்ஷனைப் போட்டிருக்கிறது. அகில
இந்திய அளவிலே என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன்ஸ் நடந்தே
தீர வேண்டும். 15 சதவிகிதம் பிற மாநிலத்தினர்களுக்கு, தமிழ்
நாட்டில் இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளிலே இடம்
கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இதற்கு இந்த
அரசாங்கம் 171 இடங்களைக் காலியாகவே மருத்துவக் கல்
லூரியில் வைத்திருந்தது. அடுத்த வருடம்தான் அமுல் நடத்து
வோம். இப்போது அமுல் நடத்த மாட்டோம் என்று சொல்லிய
வுடனே அதை பில்-அப் செய்து விட்டார்கள். இப்போது சட்டி
சுட்டு விட்டது அடுத்த வருடம் பார்த்துக் கொள்ள வேண்டும்
என்று சொல்லுகிறார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம்
எல்லா மாநிலங்களும் எதிர்த்திருக்கின்றன. அமைச்சர் அவர்
கள் பதில் சொல்லக் கூடும். இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்
டிலே வழக்குப் போட்டிருக்கிறோம் என்று. வெறும் வழக்குகள்
பிரச்சினையைத் தீர்க்காது.

சுப்ரீம் கோர்ட்டிற்கு இது தேவையில்லாத விஷயம். கல்வி
மாநிலப் பட்டியலில் இல்லை. எனவே, இந்தத் தேவையில்லாத
விஷயத்தில் சுப்ரீம் கோர்ட்டு தலையிட்டு, நம்முடைய மண்ணின்
மைந்தர்களுக்கு, நம்மவர்களுக்குக் கிடைக்க வேண்டிய இடங்
களை பிற மாநிலத்துக்காரர்களுக்குக் கொண்டு போவது என்பது
எந்த விதத்திலும் நியாயம் அல்ல. இங்கே கூட, தமிழ் தெரியாத
நீதிபதி இருக்கக் கூடாது என்று நம்முடைய முதல்வரே பேசி
இருக்கிறார். அப்படி என்று சொல்லும்போது பிற மாநிலத்



1987 நவம்பர் 13] [திரு. அ. ரகுமான்கான்]

தவர்களுடைய கைகளுக்கு— மருத்துவக் கல்லூரியில் இன்று
15 சதவிகிதம் என்பார்கள். நாளைக்கு இன்ஜினியரிங் காலேஜில்
15 சதவிகிதம் என்று சொல்வார்கள்.

நம்முடைய துணை சபாநாயகர் அவர்களே, நீங்களே கூட
இந்தச் சட்டசபையில் இந்தப் பிரச்சினையைக் குறித்து பல
முறை பேசியிருக்கிறீர்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு
வந்திருக்கிறீர்கள். எனவே, இன்றைக்கு ஒரு மிகப் பெரிய
ஆபத்து நமக்கு இருக்கிறது. எனவே, தேர்தல் கூட்டணிக்காக
இதைக் கடுமையாக எதிர்க்காமல் இருப்போம் என்று சொன்
னால், அது தமிழக மக்களின் தலையெழுத்தோடு விளையாடு
வதாகும். எனவே, வழக்குப் போட்டிருக்கிறோம். பிரதம
ரிடத்தில் சொல்லியிருக்கிறோம், சுப்ரீம் கோர்ட்டிலே பேசி
யிருக்கிறோம் என்ற அளவோடு நிறுத்தாது, சுப்ரீம் கோர்ட்
டினுடைய அந்த டைரக்ஷனை எதிர்த்து, இந்த அரசாங்கம்
எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். அதற்கு அனுமதிக்கக் கூடாது
என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்தில் முதல்வர் அவர்களுடைய பெயரைச் சூட்டு
வதையே நான் எதிர்க்கவில்லை. வரவேற்கிறேன். பெருந்தன்
மையோடு நாங்கள் வரவேற்கிறோம். அரசியல் பண்பாட்டோடு
வரவேற்கிறோம். ஆனால், கேவலம் ஏற்கனவே இருந்த கட்டி
டங்களுடைய பெயர்களையெல்லாம் தனி நபருடைய பெயரில்
இருக்கலாமா என்பதற்கு அரசாங்கமே ஒரு உத்தரவு போடுவது
என்பது உலக வரலாற்றில் எங்கும் பார்க்க முடியாத ஒன்று.
அண்ணாவின் பெயரைச் சொல்கின்ற நீங்கள், இனிமேலாவது
அரசியல் நாகரிகத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்று
கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்தச் சட்டப் பேரவை
யிலே கொண்டு வரப்பட்டிருக்கிற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு
மருத்துவப் பல்கலைக் கழக திருத்தச் சட்டமுன்வடிவின் மீது
இந்த நாட்டு மக்களின் கருத்துக்களை இந்த மன்றத்திலே எதி
ரொலிப்பதிலே நான் பெருமைப்படுகிறேன். ஆற்றலில் சிறந்தது
மன ஆற்றல் என்று சொல்வார்கள். வணக்கத்துக்குரிய இதய
தெய்வம் டாக்டர் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு
டாக்டர் பட்டத்தை, 100 ஆண்டுக் காலத்திற்கு மேலாகப் பணி
யாற்றி சிறப்பு செய்த, பழம்பெரும் சென்னைப் பல்கலைக்
கழகம் வழங்கியதே அவருடைய மனிதாபிமான சேவையின்
அடிப்படையில்தான். ஆகவே, அப்படிப்பட்ட மனிதாபிமான
சேவையின் அடிப்படையில் ஒருவருக்கு ஒரு பல்கலைக் கழகம்
டாக்டர் பட்டம் வழங்கியது கூட உலகத்திலேயே இதுதான்
என்று நிச்சயமாக வரையறுத்துச் சொல்ல முடியும்.

[டாக்டர் கே. சமரசம்] [1987 நவம்பர் 13

தமிழ்நாட்டிலே போட்டிருக்கிற சமுதாய நலத் திட்டங்கள் உலக நோபல் பரிசு பெறத்தக்க வகையில் உயர்ந்து, எல்லோருடைய மனதையும், உலகையும் கவர்ந்திருக்கின்றன என்பதை நானும் இங்கே சொல்வதில் பெருமைப்படுகிறேன். சத்துணவுத் திட்டம் என்பது ஏதோ அவர்களுக்குச் செய்யக் கூடிய தர்ம கைங்கர்யம் என்பதற்காக அல்ல. சத்துணவுத் திட்டம், அவர்களுக்கு உடை, உணவு, புத்தகம், காலணி மருத்துவம் என்று எல்லாம் கொடுப்பது ஏதோ அவர்களுக்கு எல்லாம் இருக்கின்ற சங்கடத்தைப் போக்கக் கூடிய நிலையிலே என்பது அல்ல. அவை எதிர்காலத்திலே இங்கிருக்கக்கூடிய இளம் சிறார்கள் நலமுடன், வளமுடன், பலத்துடன், வலிவுடன், பொலிவுடன் வாழ்வதற்குரிய எதிர்காலத் தொலை நோக்குத் திட்டத்தின் அடிப்படையில்..' ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, உறுதி கொண்ட நெஞ்சினாய் வா, வா' என்று பாரதி பாடினானே, அந்தப் பாடலுக்கு யாரும் இதுவரையிலும் இலக்கணம் வகுக்காத நிலையில் உலக அரங்கிலேயே ஒரு இனம், ஒரு நாடு, ஒரு மொழி பேசக்கூடியவர்கள் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட போர்ப் படைத் தளபதிகளாக வர வேண்டும் என்ற தொலை நோக்குத் திட்டத்தோடு உருவாக்கப்பட்ட அதி அற்புத திட்டங்கள் ஆகும்.

ஆகவே, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இன்றைய தினம் அவர் பெயராலே இப்படிப்பட்ட மருத்துவப் பல்கலைக் கழகம் அமைவதற்கோ, நோபல் பரிசு பெறுவதற்கோ இதை விடச் சிறந்த ஒருவர் இருக்க முடியாது என்பதனை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல; உலக வங்கி ஓடோடி வந்து, உதவி செய்கிறோம், சத்துணவு திட்டத்திற்கு என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், இது கூட அறச் செயல் என்பதற்காக அல்ல, ஏழைகளுக்கு சோறு போடுகிறார்கள் என்பதற்காக அல்ல, ஏழைகள் எதிர் காலத்தில் நிரந்தர நிவாரணம் பெற்று நலத்துடன் வாழ்வதற்கு உலக வங்கி உதவி செய்கிறது என்ற வகையிலேதான் அது இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

அப்படிப்பட்டவர் பெயரால் பல்கலைக் கழகத்தை உருவாக்குவது மிக, மிகத் தேவையான, அவசியமான ஒன்று என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விரும்பாதவனைத் தண்டித்து விடு. முடியாதவனை மன்னித்து விடு என்று சொல்கின்ற பாரதம், இராமாயணத்தினுடைய கருத்தை உள்ளடக்கியது திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்வு. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று சொன்னாரே வள்ளலார் அவர்கள், அவருடைய இதயத்தில் உருவாகியது திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய



1987 நவம்பர் 13] [டாக்டர் கே. சமரசம்]

உள்ளம். உள்ளத்தை வைத்து உயர்வடைதல், இருப்பதைக் கொண்டு சிறப்படைதல் என்பது அவருடைய வாழ்வின் இலட்சியமாகும். இன்றைய தினம் அந்த அடிப்படையிலே இருக்கின்ற ஒருவருக்குத்தான், அவருடைய பெயரால்தான் பல்கலைக் கழகத்தை உருவாக்க வேண்டும் என்று இங்கே சட்ட மன்றத்திலே இந்தச் சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

'' நிறைமொழி மாந்தர் நீதிகள் அத்தனைக்கும் ஓர் நிலையமான இதயத்தைக் கொண்டவர்கள், கொடுமையான, எதிரியையும், மோசமான நண்பனையும் (துரோகி) எதிர்த்து வெற்றி கொள்பவனே சிறந்த தலைவன் '' என்பதற்கு உலகத்தில் எடுத்துக் காட்டாக விளங்கக்கூடிய உன்னத புருஷர், இந்தியாவின் மூத்த முதல்வர், அதுமட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கிற தமிழ் நாட்டில் மூன்று முறை தொடர்ந்து மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு, இந்த முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கக் கூடியவர்கள். உலக அரங்கிலேயே 10,000 மைல்களுக்கு அப்பால் ஒருவர் இருந்துகொண்டு, அவரால் நிறுத்தப்படுகின்ற வேட்பாளர்களும், கட்சியும், தானும் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது உலகத்திலேயே இதுவரையிலும் யாரும் கேள்விப்படாத ஒன்று. நாம் படிக்கின்ற இதிகாசங்களாக இருந்தாலும் சரி, இலக்கியங்களாக இருந்தாலும் சரி, வரலாறாக இருந்தாலும் சரி, வேறு எந்த நிலையிலேயும் வராத ஒன்றைப் புதிதாக உருவாக்கி, தம்முடைய வாழ்க்கையையே உலக வரலாற்றோடு இணைக்கக்கூடிய வகையில் அல்லது தம் வாழ்வின் வரலாற்றோடு உலக வரலாறு சில வரிகளாக இணையக்கூடிய வகையில் ஒரு மாபெரும் அற்புதத்தைச் செய்த, அற்புத மனிதர் தான் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள்.

அப்படிப்பட்ட நிலையில், 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற இராஜதந்திரியாக இருக்கின்ற அவர், இன்றைய தினம் அவருடைய பெயரால் இங்கே ஒரு பல்கலைக் கழகம் உருவாகிறது என்று சொன்னால், நாம் அப்படிப்பட்ட ஒரு நல்ல நேரத்தில், பொற்காலத்தில் வாழ்கிறோம் என்பது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும்.

இங்கே பேசுகின்றபோதுகூட பாராட்டினார்கள். ஆனால், பாராட்டுவதற்கு முன்பாக தீர்மானத்தை எதிர்த்து ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். காங்கிரஸ் அரசாட்சி செய்தபோது கூட சில பெயர்களை வைத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சி செய்தபோதுகூட சில பெயர்களைப் பதித்திருக்கிறார்கள். ஆனால், அப்போதிருந்தவர்களெல்லாம்

[டாக்டர் சே. சமரசம்] [1987 நவம்பர் 13

இப்படி ஒரு தீர்மானத்தைக் கொடுத்து, எதிர்த்து இருக்கிறார்
களா, பேசி இருக்கிறார்களா என்று நான் ஏடுகளைப் புரட்டிப்
பார்க்கின்றபோது என் கண்ணுக்குப் படவில்லை. அது அவர்
களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது என்று நான் கருது
கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில், இன்றைய
தினம் மிகத் தேவையான, அவசியமான, உலகக் கருத்தை ஒருங்
கிணைக்கக்கூடிய வகையிலே உருவாகின்ற அற்புதத் திட்டங்
களைப் போடுகின்ற புனிதர் ஒருவருக்குத்தான், இந்தப் பல்
கலைக்கழகத்தை அவர் பெயரால் தமிழ்நாடு அரசு உருவாக்கி
இருக்கிறது என்பதாலும் நாம் பெருமை கொள்ள முடியும்.

" தெய்வமென்ற கருத்தற்றோன் பாமரன்
தெய்வமிலை என்போன் அச்சொல் விளங்கான்
தெய்வமென்று கும்பிடுவோன் பக்தன்—அந்தத்
தெய்வத்தையறிய முயல்வோனே யோகி

தெய்வநிலை யுணர்ந்தவனே தேவன்—அத்
தெய்வமே அனைத்துயிரும் எனும் கருத்தில்
தெய்வத்தின் துன்பங்கள் போக்குதற்கே
தெய்வத் தொண்டாற்றுபவன் மனிதன் "

என்று சொல்வார்கள். அத்தகைய தெய்வத் தொண்டாற்றும்
வகையில், தன்னுடைய உடலை, பொருளை, ஆவியை, சக்தியை,
திறமையை, வலிவை அத்தனையையும் முழுமையாக ஒப்படைத்
துக்கொண்ட " குடும்பையுட் புகுமுன் குழவிதன் கொள்கை
போலே " கைவல்ய நவநீதன் கருத்துக்குச் சொந்தக்காரனாக
இருக்கின்ற, வரவு எவ்வளவாக இருந்தாலும் சரி, செலவு
இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற திட்டத்தை வகுத்துக்
கொண்ட, பரமன் முடிமீதிருக்கக்கூடிய பாம்பானாலும் சரி, அது
பக்தனைய கொல்ல நேர்ந்தால், படம் எடுக்க நேர்ந்தால்,
அதனை அடித்து நொறுக்க வேண்டுமென்ற ஆண்மை பெற்றவ
ருடைய பெயரால் ஒரு பல்கலைக் கழகம், மருத்துவப் பல்கலைக்
கழகம் உருவாகிறது என்று சொன்னால், இது மிகப்பெரிய
தேவையான ஒரு நிகழ்ச்சி; இது மிக அத்தியாவசியமான ஒரு
நிலை என்பதனை எடுத்துச் சொல்லி, அப்படிப்பட்ட பல்கலைக்
கழகத்தை, இதய தெய்வம், டாக்டர், புரட்சித் தலைவர்,
எம். ஜி. ஆர். அவர்கள் பெயரால் உருவாக்குகின்ற அரசை
பாராட்டி, வரவேற்று, அமர்கிறேன். வணக்கம்.

திரு. கு. ரமணி : மதிப்புமிக்க துணைத் தலைவர் அவர்
களே, இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட வரையில், அவசரச் சட்
டத்தை முதலிலே பிறப்பித்து திரும்ப இந்தச் சட்டத்தை இப்
படிக் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. நாம்
இந்த அவையிலே, இந்தச் சட்டத்தை, சட்டமாக நிறைவேற்றும்
போதே இதைச் செய்ய முடியும், ஏனென்றால், அவசரச்



1987 நவம்பர் 13] [திரு. கு. ரமணி]

சட்டத்தின் பெயரில் அதிகப்படியான நம்பிக்கை வைத்து போய்க்
கொண்டிருக்கக்கூடிய சுபாவத்தை இந்த அரசு கைவிட வேண்டு
மென்று நாங்கள் கோருகிறோம். பெயரைப் பொறுத்த வரை
யில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால்,
இதிலே சொல்லும்போது, தமிழ்நாடு முதலமைச்சர், டாக்டர்,
எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில்,
மருத்துவக் கல்வியின் மேம்பாட்டில் தனிச் சிறப்பு வாய்ந்த அக்
கறையினைக் காட்டி வந்திருக்கிறார் என்று அதனுடைய காரண
நோக்க விளக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கல்வி
விஷயத்திலேதான் எங்களுக்கு கவலை இருக்கிறது. பி. எஸ். ஜி.
மருத்துவ விஞ்ஞான கல்லூரியில் நடந்துள்ளதைக் கூறுகிறேன்.

அந்த மருத்துவக் கல்வியில் ஏற்படக்கூடிய குறைபாடுகளை
தீர்ப்பதற்கு இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம் என்னென்ன
நடவடிக்கைகளை எடுக்க உள்ளார்கள்? எந்தெந்த வகையில்
மருத்துவக் கல்வியில் முன்னேற்றம் காண உள்ளார்கள்? இன்
னும் குறிப்பாகச் சொல்லப்போனால் சாதாரண ஏழை எளிய
தமிழக மக்கள் எதிர்பார்க்கக்கூடிய மருத்துவ வசதி, அவர்க
ளுக்குக் கஷ்டம் இல்லாமல் கிடைக்கக்கூடிய வகையில் மருத்துவப்
பல்கலைக் கழகம் மருத்துவக் கல்வியைப் பெருக்க வேண்டும்.
அதற்கு, இந்த மருத்துவக் கல்வியைக் கற்பிக்கும் பல்கலைக்
கழகம் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டி
யிருக்கிறது. ஆனால், அரசாங்கத்தினுடைய மற்றொரு
கொள்கை எப்படி இருக்கிறது என்றால்—தனியார் துறைக்கு
இந்த மருத்துவக் கல்வியைக் கொடுக்க ஒப்புக்கொண்டு அத
னடிப்படையில் இன்றைக்கு சில கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டு
நடத்தப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக மருத்துவச்
கல்வியினுடைய தரம் கீழே போய்க் கொண்டிருக்கும்படியான
வேதனைக்குரிய காட்சியை நாம் பார்க்கிறோம். அதுமட்டு
மல்ல, அதிகமான மார்க்குகள் பெற்ற பல்வேறு மாணவர்கள்
இலட்சக் கணக்கில் பணம் செலவழிக்கவில்லை என்றால் அவர்
களுக்கு அட்மிஷன் கிடைக்காது என்ற நிலைமையும் அந்தக் கல்
லூரிகளால் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, திறமை
யுள்ள மாணவர்கள், எதிர்காலத்தில் நல்ல மருத்துவர்களாக—
நல்ல டாக்டர்களாக—வரவேண்டியவர்கள் அந்தக் கல்லூரிகளில்
இடம் கிடைக்காமல் கஷ்டத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கி
றார்கள். அதில் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மாத்திரம் நான்
ஒரு உதாரணத்திற்காக இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் தனியார் துறையில் முதலில் அண்ணா
மலைப் பல்கலைக் கழகத்திற்கு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்திக்
கொள்ள அனுமதிக்கப்பட்டது. அதற்கு அடுத்தாற்போல்
ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி அளிக்கப்
பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, பி.எஸ்.ஜி. இன்ஸ்டிடியூட் ஆப்
சயன்ஸ் என்கிற அந்தக் கல்லூரிக்கும் அனுமதி அளிக்கப்பட்

டிருக்கிறது. இவைகள் எல்லாமே தனியார் துறையில் இருக்கிற கல்லூரிகள். தனியார் துறையில் இருக்கிற கல்லூரிகள். முழுக்க, முழுக்கப் பணம் படைத்த, மிகுந்த சக்தி உள்ளவர்களால் நடத்தப்படுகிற கல்லூரிகள். ஆனால், அங்கே நடப்பது என்ன என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். இந்த அவையும், அரசாங்கமும் இதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு இனிமாவது இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களின் நடைமுறைப் பயிற்சிக்காக பி.எஸ்.ஜி. இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயன்ஸ் கல்லூரிக்குச் சொந்தமான ஆஸ்பத்திரி இல்லை. இதன் காரணமாக மாணவர்களின் நடைமுறைப் பயிற்சிக்காக அவர்களை பஸ்களில் வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள மருத்துவ மனைகளுக்கு அழைத்துச் செல்கிற நிலைமை இருக்கிறது. இந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்காக இந்தக் கல்லூரியோடு இணைந்திருப்பதாக சில ஸ்பெஷலைஸ்டு தனியார் ஆஸ்பத்திரிகளை அவர்கள் காட்டினார்கள். இங்கே எங்களுக்கு ஆஸ்பத்திரி வசதி இருக்கிறது என்றார்கள். ஆனால், உண்மையில் அந்த மாணவர்களுடைய பயிற்சிக்கு அது சகாயம் செய்வதற்கு பதில் உபத்திரவத்தைத்தான் உண்டாக்குகிறது. அந்த மருத்துவ மனைகளுக்குச் செல்வதற்கு நீண்ட நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. மருத்துவக் கல்லூரிக்கான அனுமதியைப் பெறுவதற்கு முன்னால் தங்கள் மருத்துவக் கல்லூரியோடு சில ஆஸ்பத்திரிகள் இணைந்திருப்பதாகக் கூறி அந்த ஆதாரத்தைக் காட்டித்தான் அவர்கள் அனுமதி பெற்றிருக்கிறார்கள். 1985 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அந்தக் கல்லூரிக்கு ஆரம்பத்தில் 70 இடங்களைக் கொடுத்திருந்தார்கள். அடுத்த ஆண்டிலேயே—நான் நினைக்கிறேன்—அது 100 இடங்களாக உயர்த்தப்பட்டது, தற்போது அதை 130 ஆக உயர்த்துவதற்காக ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டு அதுவும் கொடுக்கப்பட்டாகிவிட்டது. பாரதியார் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ளது இக்கல்லூரி. எனவே, பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர் அவர்கள், கல்லூரி கேட்ட 30 இடங்களுக்குப் பதில் 25 கொடுக்கிறேன் என்று 25 இடங்களுக்கு அனுமதித்திருக்கிறார்கள். இது எனக்குக் கிடைத்த தகவல். அனேகமாக இது சரியான தகவல் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, பாரதியார் பல்கலைக் கழகத்தோடு இணைந்திருக்கிற காரணத்தால் தாங்கள் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க முடியும் என்று அந்தக் கல்லூரியை நடத்துகிறவர்கள் நினைக்கிறார்கள். காரணம் பி.எஸ்.ஜி. குரூப் சம்பந்தப்பட்டவர்கள்—அந்தக் கல்லூரியை நடத்துகிறவர்கள் மிகப் பெரிய தொழிற்சாலைகளை ஏராளமாக நடத்தக்கூடியவர்கள். பெரும் செல்வந்தர்கள், கொண்டிருக்கும் பணக்காரர்கள். அப்படிப்பட்டவர்கள் மருத்துவக் கல்லூரியைத் தொடங்கும் போதே கல்லூரியோடு ஒரு ஆஸ்பத்திரியையும் சேர்த்து கட்டமாட்டேன் என்கிறார்கள்?



(நண்பகல் 12-00)

கல்லூரிக்கு அதிக இடங்களைப் பெறுவது என்ற அந்த முறையில் பாரதியார் பல்கலைக் கழகத்தின் உதவியோடு அவர்கள் அந்த 25 இடங்களையும் சேர்த்துப் பெற்றிருக்கிறார்கள். ஒரு மாணவனுடைய படிப்புக்கு 7 படுக்கைகள் என்ற விதத்தில் 100 மாணவர்கள் படிக்கக் கூடிய இந்தக் கல்லூரியில் 700 படுக்கை வசதியுள்ள ஆஸ்பத்திரி இருக்க வேண்டும். அப்போதுதான் 'டீச்சிங்' முறையாக நடத்த முடியும். இது நான் சொல்வதல்ல. இந்திய மெடிக்கல் கவுன்சில் நார்ம்ஸ் இது. இதன்படியும், டாக்டர் நடராஜன் குழு கொடுத்திருக்கக்கூடிய ஆலோசனையின்படியும் இந்த மருத்துவக் கல்லூரியில் 1988 ஆம் ஆண்டு ஜனவரிக்குள் 700 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியை அவர்கள் கட்டியாக வேண்டும். ஆனால், அப்படி அந்த ஆஸ்பத்திரி இல்லை. அங்கே கட்டிடம் கட்டவும் ஆரம்பிக்கவில்லை. இந்தக் கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற கட்டிட வேலையே இன்னும் பூரணமாக முடியவில்லை. ஆனால், 25 மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது சட்டப்படி செய்ததா என்பதைப் பார்க்க வேண்டும். அதனுடைய அப்ரூவல் என்பது சட்டப்படி இருக்க வேண்டும் என்பதற்காக பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர், டாக்டர்கள் கொண்ட ஒரு நிபுணர் குழுவை அமைத்து அந்தக் கல்லூரியின் ஸ்டாண்டர்ட் எப்படி இருக்கிறது, அதன் டீச்சிங் பெசிலிட்டீஸ் எப்படியிருக்கிறது, ஆஸ்பத்திரி பெசிலிட்டீஸ் எப்படியிருக்கிறது என்று பார்ப்பதற்கு ஆய்வு பண்ணச் சொன்னார்கள். அவர்கள் ஆய்வு செய்ததற்குப் பிறகு அந்தக் குழுவின் பரிந்துரை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

எனக்குத் தெரிந்த விஷயத்தைச் சொல்லுகிறேன். அந்தக் குழு திட்டவட்டமாக அந்தக் கல்லூரிகளுக்கு இந்த சீட்டுக்களை அதிகப்படுத்தக் கூடாது என்றும், ஏற்கெனவே இருக்கின்ற 100 மாணவர்களை படிக்க வைக்கக் கூடிய தன்மைகூட அந்தக் கல்லூரிக்கு இல்லை என்றும், போதிய அளவிற்கு டீச்சிங் பெசிலிட்டீஸ் சரியாக இல்லையென்றும், ஆகவே கொடுக்கக் கூடாது என்றும் சிபாரிசு செய்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அந்த சிபாரிசு சிண்டிகேட்டுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படவில்லை. சிண்டிகேட்டின் கூட்டம் நடந்தால் எல்லோருக்கும் தெரியும் என்பதால் அங்கே வைக்க வில்லை. அப்படி வைக்காமல் 25 சீட்டுகளை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். வைஸ்-சேன்சலருக்கு அப்படி என்ன டிஸ்கிரிஷனரி பவர் இருக்கிறது? மெடிக்கல் சயன்ஸ் விஷயத்தில் அவருக்கு டிஸ்கிரிஷனரி பவர் எப்படி வந்தது என்று தெரியவில்லை. அவரே ஒரு மெடிக்கல் மேன் அல்ல. அவர் ஒரு என்ஜினீரிங் நாலேட்ஜ் உள்ளவர். அவராகவே கொடுத்திருக்கிறார். அப்படியானால், இந்தியன் மெடிக்கல் கவுன்சிலின் ரெககனிஷன் நிச்சயமாகக் கிடைக்காது. 100 பேர்களை வைத்து நடத்தவே ஸ்டாண்டர்ட் இல்லையென்றால் நிச்சயமாகக் கிடைக்காது.

[திரு. கு. ரமணி] [1987 நவம்பர் 13

கோயம்புத்தூர் மெடிக்கல் காலெஜ் ஆஸ்பத்திரிக்கே ஒரு
கட்டடத்தில், ஆப்பரேஷன் தியேட்டர் வசதி சரியாக இல்லை
என்று சொல்லி, இந்தியன் மெடிக்கல் கவுன்சில் பிரதிநிதிகள்
வந்து பார்த்து 10 இலட்சம் ரூபாய் உடனடியாக சாங்ஷன்
பண்ண வேண்டும் என்று இந்த மாநில அரசுக்கு ஒரு கட்ட
ளையைக் கொடுத்து, இதைச் செய்யவில்லை என்றால் அந்த
மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கே அங்கீகாரம் ரத்து செய்
யப்படும் என்று அன்றைக்குத் தெரிவித்தார்கள் அதற்காக நட
வடிக்கை எடுத்து இதே அவையில் பிரச்சினையைக் கிளப்பி
யிருக்கிறேன் அந்தச் சமயத்தில். பிறகு நடவடிக்கை எடுக்கப்
பெற்று ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. அதற்கே அப்படியென்
றால் இதற்கு எப்படி இந்த அங்கீகாரம் கிடைக்கும்? இதிலே
பிரச்சினை என்னவென்றால், D... Netarajan C. mmittec which
had originally recommend d the affiliation f his Coll g had stated
hat by 1988 j nuary 700 bedded hosplt l sh uld b ready"
என்று சொல்லியிருக்கிறது. டாக்டர் நடராஜன் கமிட்டி இப்
படித் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. அப்படி சொல்லியபடி
இல்லாவிட்டால் அபிலியேஷன் கிடைக்காது. இப்படிச் சொல்
லியும் கூட அதற்கு மேலே போய் அந்தக் கல்லூரி, தனியார்
துறையிலே உள்ள அந்தக் கல்லூரி நடக்கும்போது அவர்களுக்கு
நாம் அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று எண்ணுவதும் அதிக
இடங்களை பணத்திற்காக அனுமதிக்க வேண்டும் என்று எண்ணுவ
தும் இருந்தால் மருத்துவக் கல்வியின் தரம் என்னவாகும்.?
ஆகவே அதற்காக தீவிரமான நடவடிக்கையைப் பல்கலைக் கழக
மும், இந்த அரசும் இப்பொழுதே எடுக்க வேண்டிய நிலையிலே
இருக்கின்றன என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.
ஆஸ்பத்திரிக்குக் கட்டிடம் இல்லாத நிலையில் இப்படி நடக்கிறது
இதற்கும் மேலாக 25 பேர்களுக்கு சேங்ஷன் கிடைத்தவுடன்
பாரதியார் பல்கலைக் கழகத்திலிருந்து உத்திரவு வந்தவுடன்
25 பேர்கள் சேர்க்கப்பட்டார்கள். இப்போது 125 மாணவர்கள்
இருக்கிறார்கள். அந்த 25 மாணவர்களிடமிருந்து வாங்கப்
பட்ட கேபிடேஷன் பீ, நன்கொடை—என்ன பெயர் வேண்டு
மானாலும் வைத்துக்கொள்ளுங்கள்—2½ இலட்சம் ரூபாய்
வீதம் 62½ இலட்சம் ரூபாய். 25 மாணவர்களிடமிருந்து
62½ இலட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. ஒரு மாணவன்
மொத்த மார்க் 70 சத விகிதம் வாங்கிய ஒரு மாணவன் அந்தக்
கல்லூரியில் சேரவேண்டுமென்று வந்தான். பி.எஸ்.ஜி. இன்ஜினி
யரிங் கல்லூரியின் ஸ்டேன்டர்டை வைத்துப் பார்த்து இந்தக்
கல்லூரியின் ஸ்டேன்டர்டும் நன்றாக இருக்குமென்று சொன்
னார்கள். இந்தக் கல்லூரிக்கு விண்ணப்பம் போடு என்று
சொல்லி, விண்ணப்பம் போட்டான். 50,000 ரூபாய்வரை
கொடுக்க அவன் தயார். அவன் கிட்டேயே போக முடியவில்லை.



1987 நவம்பர் 13] [திரு. கு. ரமணி]

2½ இலட்சம் ரூபாய் பணம் கொடுத்தவர்களுக்குத்தான் சீட்
கூட்டம் அதிகமாக வந்த பிறகு இன்னும் பணம் ஜாஸ்தியாகி
விட்டது. 62½ இலட்சம் ரூபாய் வசூல் பண்ணி இருக்கிறார்
கள். ஆனால் டீச்சிங் பெசிலிடீஸ் இல்லாமல், ஆஸ்பத்திரி
சொந்தமாக இல்லாமல் காலேஜ் கட்டிடம் முழுமையாக
இல்லாமல் ஒரு மருத்துவக் கல்லூரி நடந்தால், நம்முடைய
மருத்துவக் கல்வி எங்கே போய் சேரும், என்ன நிலைமை ஏற்
படும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். மேலும் அதிக
மார்க்குகள் வாங்கி இருக்கிறவர்கள் வெளியிலே இருக்கிறார்கள்.
அவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்க முடியாது. தனியார்
கல்லூரிகளுக்கு அனுமதி கொடுத்தன் விளைவு இது என்று சொல்ல
விரும்புகிறேன். இதைத்தான் ஆரம்பத்திலேயே சொன்னோம்
மக்களுக்கு வைத்திய வசதி கொடுக்கக்கூடிய சுகாதாரத்தைப்
பாதுகாக்கக்கூடிய நாம் நூற்றுக் கணக்கான கோடிக்கணக்கான
மக்களுடைய பணத்தைச் செலவழித்து நடத்தக்கூடிய இந்த
ஏற்பாடுகள் முழுவதன்பலனையும் தனியார் கல்லூரிகள்
கொண்டு போகக்கூடிய நிலையை அனுமதிக்கக்கூடாது. எனக்குக்
கிடைத்துள்ள ஒரு செய்தி, இது குறித்து அந்த பாரதியார்
யூனிவர்சிட்டியின் சேன்சலராக இருக்கக்கூடிய மேன்மை தங்கிய
கவர்னர் அவர்களுக்கு ஒரு பெட்டிஷன் அனுப்பப்பட்டிருக்கிறது.
கவர்னர் அவர்கள் உடல் நலம் இல்லாமல் இருந்த நேரம்
அது. அது என்னாவயிற்று என்று தெரியவில்லை. நிபுணர் குழு
நியமித்து, அவர்கள் சிபாரிசு செய்தும்கூட, இப்படி தவறு
நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு விஷயத்தைச் சொல்லி முடிக்கிறேன். கோவை
மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பற்றி அண்மையிலே
கோவை செஷன்ஸ் நீதிபதி ஒரு தீர்ப்பு அளித்ததை அமைச்சர
வர்கள் பார்த்திருப்பார்கள். 2 வயதுள்ள சரவணன் என்ற
பையனுக்கு ஒரு ஆப்பரேஷன் செய்ய வேண்டிய அவசியம்
ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணினார்கள். ஆப்ப
ரேஷன் தியேட்டரில் ஆப்பரேஷன் நடக்க இருந்த நேரத்தில்,
நல்ல விசேஷ பயிற்சி பெற்ற மயக்க மருந்து கொடுக்கக்கூடிய
டாக்டர்— அனெஸ்தசிஸ்ட்—இல்லாமல், ஒரு அன்குவாலிபைட்
டாக்டர் மயக்க மருந்து கொடுத்திருக்கிறார். எம்.பி.பி.எஸ்.
டாக்டர் இன் கேஸ் ஆஃப் எமர்ஜன்சி மயக்க மருந்து கொடுக்கலா
மென்று சொல்லுவார்கள். அப்படி ஒரு டாக்டரைக் கொண்டு
மயக்க மருந்து கொடுத்ததால், அதிகப்படியான மயக்க மருந்து
கொடுத்து, கடந்த 7 வருடங்களாக அந்தப் பையன் கோமா
கன்டிஷனில் இருக்கிறான். 2 வயதில் ஆஸ்பத்திரிக்குப் போனவன்
இப்போது 9 வயதாகிறது. நல்ல அழகான பையன். நான்
போய்ப் பார்த்தேன். அந்த மாதிரி மயக்க மருந்து கொடுத்த
தால் ஹார்ட் தகராறு வந்தது. கார்டியாக் அரெஸ்ட் வந்த
பிறகு, அதற்காக ஒரு ஆப்பரேஷன் செய்தார்கள். அதைச்
சரிப்படுத்தினார்கள். ஆனால் கோமா கன்டிஷன் வந்து விட்டது.

[திரு. கு. ரமணி] [1987 நவம்பர் 13

அவனைத் தனியார் மருத்துவமனையில் சேர்த்து, அங்கே எக்ஸ் ரேப் போட்டுகள் பார்த்து, நியூரோ சர்ஜன் பார்த்து, ஒன்றும் பண்ணமுடியாது என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். மோஸ்ட் பேக்வார்ட் கம்யூனிட்டி பையன். அவனால் என்ன பண்ண முடியும்?

(பிற்பகல் 12-10)

கொண்டு வந்து மறுபடியும் மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியிலே படுக்க வைத்தோம். அந்த கேஸ் வந்தபோது, அந்த நீதிபதி அவர்கள் உண்மையாகவே அரசாங்கத்தையும் கடுமையாகக் கண்டித்து அங்கே இருக்கின்ற டீனுக்கும், அங்கே இருக்கின்ற இந்த ஆப்பரேஷன் பணியில் இருக்கக்கூடிய டாக்டர்கள் எல்லோரையும் பொறுத்து கண்டனம் தெரிவித்து, ரூபாய் 50 ஆயிரம் உடனே பணம் நட்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவனுக்கு புத்தி சரியாக ஏற்பட்டு, கோமா கன்டிஷன் மாறி வருகின்றவரைக்கும் மனிதாபிமான அடிப்படையிலே, சிகிச்சை கொடுத்து கியூர் பண்ணி வெளியிலே அனுப்பவேண்டும். என்றும் தீர்ப்பு கூறியுள்ளார் இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் அவனுடைய கோமா கன்டிஷன் மாறுகிற வரைக்கும் மருத்துவ செலவையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். என்பதற்காக பயிற்சியின் தரம் கெட்டுப்போனாலும் அங்கு தகுந்த பயிற்சிபெற்றவர்கள் இல்லை என்றாலும் என்ன ஆகும்? என்பதை உணர்த்தவே கோவை மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட ஆக்சிடென்ட் வார்டு 5, 6 வருடங்களாக காண்ட்ராக்டர் கட்டிடம் கட்டாமல் ஏமாற்றியதையெல்லாம் கூட எதிர்த்துப் போராடி ஓபன் செய்தோம். அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து இருக்கின்றார்கள். அதற்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் கள் எல்லோரும் வந்தார்கள். மிகவும் சந்தோஷத்தோடு திறந்து வைத்தோம். அது எத்தனையோ ஆக்சிடெண்ட் கேஸ்கள் வருகின்ற இடம். அங்கே ஆப்பரேஷன் தியேட்டரிலே, எல்லா விதமான சௌகரியமும் இருக்கிறது. ஆனால் ஒரு மயக்க மருந்து கொடுக்கின்ற நிபுணர் டாக்டர் மட்டும் இல்லை என்ப தால் அங்கே ஆப்பரேஷன் நடத்தமுடியவில்லை. 24 படுக்கை கள் கொண்ட ஒரு அருமையான கட்டடத்திற்குள் ஆப்பரேஷன் நடத்தமுடியவில்லை. அதனாலேயே மற்ற பிரிவில் உள்ள ஆப்ப ரேஷன் தியேட்டரிலே கொண்டுபோக வேண்டிய நிலை இருக் கின்றது.

ஆகவே பயிற்சி பெற்ற டாக்டர்கள், குவாலிபைட் டாக்டர் களைப் போட்டு [illegible] தன்மை, டிரீட் மெண்டினுடைய தன்மை இவைகளைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு காரியங்கள் செய்யவேண்டும். தகுதி



1987 நவம்பர் 13] [திரு. கு. ரமணி]

யான டாக்டர்களை வைத்துக்கொண்டு இந்த காரியங்களை செய்யவில்லை என்றால் ஜனங்களுக்கு பெரிய கஷ்டங்கள் ஏற் படும். இதனால் தனியார் மருத்துவ மனைக்காரர்கள்தான் லாபம் அடைகிறார்கள். இதை மக்கள் கேட்கிறார்கள், அரசாங்க மருத்துவமனையிலே இப்படியெல்லாம் ஏற்படுகிறதே என்று.

இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு நோயாளிக்கு ஊசி போட்டு இருக்கின்றார்கள். அந்த ஊசி கழன்று ரத்த குழாயிலே நேரே போய்விட்டது. வருடக் கணக்கிலே ஊசி எடுக்க முடியாமல் இருக்கின்றது. இது போன்ற தவறுகள் பல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் ஐந்து பேர்கள் பேசவேண்டும். இத்தோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

திரு. கு. ரமணி ; அந்த ஊசியையே எடுக்கமுடியாமல் இருக்கின்றது என்று அதே ஆஸ்பத்திரியில் போய் நான் ரிப் போர்ட் பண்ணினேன். அந்த ஊசியை வெளியிலே எடுக்க வில்லை. நம்முடைய அரசாங்க மருத்துவ மனையைக் குறை சொல்வது என்பது அல்ல என்னுடைய நோக்கம். அரசாங்க மருத்துவ மனைகள் தனியார் மருத்துவமனையை விட திறமை யோடு இருக்கவேண்டும். அரசாங்க மருத்துவ மனைகளைச் சீரழிக்கக்கூடிய அளவு தனியார் மருத்துவமனைகளிலே காரியங் கள் செய்யப்படுகிறது. அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. ஆகவே தகுந்த கட்டுப்பாடுகளும், ஒழுங்கு முறைகளும் வகுக்கப் படவேண்டும். தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி அளிப்பதை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பி.எஸ்.ஜி. கல்லூரி விஷயத்தில் உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் அந்த நிலைமையை மாற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமைபெற்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள சட்ட முன்வடிவு மீது எனது கருத்துக்களை எடுத்து வைக்க அனுமதித் தமைக்கு முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் இதயம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் பெயரை, அமைய இருக்கின்ற மருத்துவப் பல்கலைக் கழகத் திற்கு வைப்பது சாலப் பொருத்தம் என்பதை கூறுவதிலே நாமெல்லாம் பெருமை அடைகிறோம்.

[டாக்டர் அ. பொன்னுசாமி] [1987 நவம்பர் 13

பேரறிஞர் பெருந்தகை, நமக்கெல்லாம் பாடமாக
இருந்தார். இப்போது இங்கே படமாக இருக்கின்றார்கள்.
அவருடைய கருத்துக்களுக்கு இணங்கி அரசை அமைத்த புரட்சித்
தலைவர் அவர்கள் 1977-லே தன்னுடைய பொறுப்பிலே இந்த
துறையை வைத்துக்கொண்டிருந்த காலத்திலேயிருந்து தமிழகத்
தில் இந்தத் துறை எவ்வளவு சிறந்த முறையில் இயங்கியது
என்பதற்கு ஒரு சில எடுத்துக் காட்டுக்களை எடுத்துக்கூறுவது
என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

1977 ஆம் ஆண்டுக்கு மக்கள் நல்வாழ்வுக்காக நமது
புரட்சித் தலைவர் அரசாங்கமானது, ரூ. 76,16,59,000 செலவு
செய்தது. இப்போது 1987ஆம் ஆண்டு, ரூ. 214 கோடி ஆக
அதனை உயர்த்தி இருக்கின்றது என்று சொன்னால் நமது
அரசாங்கமானது மருத்துவத் துறைக்கு எவ்வளவு சீருடனும்,
சிறப்புடனும் செயல்பட்டு வருகிறது என்பதைப் எடுத்துக்
காட்டுவதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

1977-லே நம் மருத்துவ மனைகளினுடைய எண்ணிக்கை
350 ஆக இருந்தது, 1987லே 395 ஆக உயர்ந்திருக்கிறது.
1977-லே மருந்தகங்கள் எண்ணிக்கை 1,122 ஆக இருந்தது.
1987-லே 2,200 ஆக மாறியிருக்கிறது.

1977லே ஆரம்ப சுகாதார நிலையங்கள் 383 தான் செயல்
பட்டுக்கொண்டிருந்தன. ஆனால் இன்று 1987லே 481 ஆக ஆகி,
இத்துடன் இந்த ஆண்டு கூட 195 அரசு புதிய மருந்தகங்கள்
ஆரம்பச்சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டன. அதன்
காரணமாக இதனுடைய எண்ணிக்கையானது 656 ஆக உயர்ந்
திருக்கிறது.

1977லே மற்ற மெடிகல் இன்ஸ்டிடியூட்டுகளினுடைய எண்
ணிக்கை 165 ஆகத்தான் இருந்தது. 1987லே அது 280 ஆக
ஆக்கப்பட்டிருக்கிறது. 1977 ஆம் ஆண்டில் தாய் சேய் நல
விடுதிகளின் எண்ணிக்கை 3,866 ஆக இருந்தது. மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் தாய்மார்களின் மீது தமக்கு இருந்த
பற்றின் காரணமாக 1987 ஆம் ஆண்டில் தாய் சேய் நல விடுதி
களின் எண்ணிக்கையை 8,050 ஆக உயர்த்தியிருக்கிறார்கள்.
அப்படி என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
தாய்மார்கள் மீது எந்த அளவு பற்று கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டாகக் குறிப்பிட விரும்பு
கிறேன். தொற்றுநோய்கள் குழந்தைகளைப் பற்றிக்கொண்டு,
அல்லல்படக் கூடாது, அவதிப்படக் கூடாது என்று எண்ணி,
அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயத் தடுப்பூசி போட
வேண்டும் என்று, ஒரு வார காலம் தடுப்பூசி வாரம் நடத்த
வேண்டுமென்று ஆணையிட்டு தொற்று நோய்கள் தோற்றோடச்
செய்து நல்லமுறையில் திட்டமிட்டுப் பணியாற்றி வருவது மாண்பு
மிகு புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆர். அவர்களுடைய அரசு
என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 13] [டாக்டர் அ. பொன்னுசாமி]

1977-ல் இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 49,044.
1987 ஆம் ஆண்டில் படுக்கைகளின் எண்ணிக்கை 55,000த்தை
தாண்டிவிட்டது என்பதை நினைவுபடுத்தி நாமெல்லாம்
பெருமைப்படுகின்றோம். 'மாடர்ன் பெசிலிட்டீஸ், "The
modern facilities in the medical field should reach the common
down-trodden people in the villages". காமன் பியூபிளுக்கு
சென்றடைய வேண்டுமென்ற எண்ணத்தில் திட்டமிட்டு
நல்ல பல காரியங்களைச் செய்து தந்தவர் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் அரசு என்பதைச் சொல்லிக்
கொள்வதில் நாமெல்லாம் பெருமையடைகின்றோம். அந்த
வகையில் கிராமப்புற மக்களுக்கெல்லாம் நவீன மருத்துவ
வசதிக்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதன் காரணமாக
ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்
என்று இருந்ததை, 30 ஆயிரம் மக்களுக்கு ஒன்று என்று மாற்றிய
தால்தான் 1977 ஆம் ஆண்டில் 383 ஆக இருந்தது 1987 ஆம்
ஆண்டில் 1,409 ஆக மாறியிருக்கின்றது. அந்த வகையில் கிராமப்
புற ஏழையெளிய மக்களுக்கு மருத்துவ சேவை எளிதில் கிடைக்
கக்கூடிய அளவில் நல்ல காரியங்களைத் திட்டமிட்டு செய்தது
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய சாதனை என்
பதை எண்ணி நாங்களெல்லாம் பெருமைப்படுகின்றோம். இது
நாள்வரை மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமே இருந்து வந்த
'ஸ்பெஷாலிட்டீஸ்' என்று சொல்லக்கூடிய உயர்ந்த மருத்துவ
வசதி, சிறப்பு வாய்ந்த சிறப்பு மருத்துவப் பகுதிகள் மாவட்டத்
தலைநகர மருத்துவ மனைகளுக்கும், ஏன் இன்னும் ஒருபடி
தாண்டி வட்ட மருத்துவமனைகளிலும் கூட அது சென்றடையச்
செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையே சாரும்.
இதை நாங்களெல்லாம் எண்ணிப் பார்த்து பெருமையடை
கின்றோம். கடந்த கால கட்டத்தில் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் இந்திய மருத்துவ சரித்திரத்
திலேயே 24 மணி நேரத்திற்குள்ளாக 150 சிவில் சர்ஜன்கள்
பதவி உயர்வு கொடுக்கப்பட்டு பட்டி தொட்டிகளில் எல்லாம்
பணியாற்ற அமர்த்தப்பட்டுள்ளனர். இத்தகைய அரிய சாதனை
யைச் செய்யக் காரணமாக இருந்ததும் நம்முடைய மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள்தான் என்பதால் நாங்களெல்லாம்
பெருமைப்படுகிறோம்.

அடுத்து செவிலியர்களின் குறைகளுக்கு செவி சாய்த்த அரசு
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். இப்
போது அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. அவர்களுக்கு
இருந்த அனைத்துக் குறைகளையும் தீர்த்து வைத்தவர் மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதை இந்த நேரத்தில்
சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். குடும்பக் கட்டுப்
பாடாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தத் துறையாக இருந்
தாலும் சரி, மருத்துவத் துறை என்று எடுத்துக் கொண்டாலும்
சரி, இந்தியாவிலேயே தலைசிறந்த சாதனையை மருத்துவத்
துறையில் செய்து வருவது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
களுடைய அரசுதான். குடும்பக் கட்டுப்பாட்டில் இந்தியாவி
லேயே தொடர்ந்து முதலிடம் வகித்து பெருமை பெற்றுக் கொண்
டிருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய
ஆட்சி.

[டாக்டர் அ. பொன்னுசாமி] [1987 நவம்பர் 13

இப்போது மருந்து திருட்டு என்பது மருந்துக்குக் கூடக் கிடையாது. அந்த வகையில் மருந்துத் திருட்டை ஒழித்தப் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையே சாரும். மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் நுழைவுத் தேர்வை வைத்து ஊழல் நுழையாமல் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். மருத்துவத் தேர்விலே எந்தவித மான தில்லுமுல்லும் நடைபெறாமல் நல்ல முறையில் நுழைவுத் தேர்வினை நடத்தி, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் எந்த விதமான குறைபாடும் இல்லாமல் தேர்வு செய்யப்படுகிறது என் பதை இங்கே சொல்லிக் கொள்வதில் நாங்களெல்லாம் பெருமை யடைகின்றோம்.

கிராமங்களிலும் சிறந்த சேவை புரிய வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே சிறப்பு மேற்படிப்பு, பட்ட பட்டய மேற் படிப்புப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் சாதனையை படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்தான். இன்றைக்குத் தமிழ்நாட்டில் அவர்களின் எண்ணிக்கை 1,072 என்பதை நாமெல்லாம் எண்ணிப்பார்த்து பெருமைப்படலாம்.

அதுபோல இரண்டு அரசு மற்றும் 3 தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைத்துக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். இன்றைக்கு சேலத்திலே அரசு சார்பிலே ஒரு மருத்துவக் கல்லூரியும், பெருந்துறையிலே போக்குவரத்துக் கழகங்களின் சார்பிலே ஒரு மருத்துவக் கல்லூரி யும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கு மேலாக 3 தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி மருத்துவத் துறையிலே பெரிய சாதனையைப் படைத்திருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு என்பதை எண்ணி நாங்களெல்லாம் பெருமைப்படுகின்றோம். இந்தியாவிலேயே மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துவதற்கு முதன் முதலாக சட்டம் இயற்றியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் என்பதை நாம் மட்டும் எண்ணிப் பெருமையடையவில்லை, இந்திய மருத்துவச் சங்கமே பாராட்டியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையுடன் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

(பிற்பகல் 12-20]

அதுபோலவே மாற்று உறுப்புகளைப் பொருத்திக் கொண்ட நோயாளிகளின் அறுவை சிகிச்சை மற்றும் மருந்துகளுக்குத் தேவை யான அனைத்துச் செலவுகளையும் கொடுக்கிற அரசு நம்முடைய அரசுதான். நமது தலைவர் அவர்கள், நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல பிள்ளைகளை உருவாக்க 3,866 தாய் சேய் நல விடுதி களை உண்டாக்கி இருப்பது நமது அரசாங்கம்தான். கர்ப்பிணிப் பெண்களுக்கு நல்ல அறிவுரை கூறுவதற்காகவும் மருத்துவ வசதி



1987 நவம்பர் 13] [டாக்டர் அ. பொன்னுசாமி]

களை இலவசமாகச் செய்து கொடுக்கவும் பாடுபட்டுக் கொண் டிருக்கிற அரசாங்கம் நமது அரசாங்கம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

400 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவு செய்து குழந்தைகள் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் என்ற சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த திட்டத்தை உருவாக்கியிருப்பது புரட்சித் தலைவ ருடைய அரசாங்கம்தான். இந்தத் திட்டமானது உலக சுகாதார நிறுவனத்தால் நல்ல முறையில் பாராட்டிக் கூறப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டு ஆக வேண்டும். இலங்கையிலே குறிப்பாக தமிழ் ஈழத்திலே மருத்துவ வசதி கிடைக்காமல் அல்லல் படுகிற மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கவேண்டும் என்பதற்காக இரண்டு மருத்துவக் குழுக்களை யும், ஏராளமான மருந்துகளையும் அனுப்பி வைத்தவர் புரட்சித் தலைவர் அவர்கள்தான். எங்கெங்கு செந்தீயின் செந்தணலில் வெந்து மக்கள் அவதிப்படுகிறார்களோ அவர்களுக்கும் கோரப் புயலால், கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உள் ளத்தால் மட்டுமல்லாமல் பொன்னாகவும், பொருளாகவும், பண மாகவும் கொடுத்து தன்னுடைய வாழ்நாளிலேயே அதிகமான நன்கொடையைக் கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக் காரராக, மக்களுடைய இதயதெய்வமாக வீற்றிருப்பவர் புரட்சித் தலைவர் அவர்கள். அந்தப் புரட்சித் தலைவருடைய பெயரை, அமைய இருக்கின்ற மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு வைப் பதை தமிழக மக்கள் ஒவ்வொருவர் உள்ளமும் பாராட்டுகின்றது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

புரட்சி தலைவர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டு மென்று கடந்த காலத்திலே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கூட நாமெல்லாம் குறிப்பிட்டிருந்தோம். அப்போது கூட புரட்சித் தலைவர் அவர்கள் இதை மறுக்கக்கூடாது என்று நாம் சொல்லியிருந்தோம். இப்போது அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு அனுமதி கொடுத்ததற்காக அவருக்கு நான் இந்த நேரத்தில் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே யு.ஜி.சி. நிறுவனத்தினுடைய அனுமதியைப் பெற்று மருத்துவ பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவர் அவர்கள்தான். புரட்சி தலைவருடைய பெயரைக் கேட்டாலோ, அவருடைய படத்தைப் பார்த்தாலோ, நேரிலே பார்த்தாலோ, பரவசம் அடைகிறோம். அவருடைய காலத்தில் அமைந்திருக்கிற, அவருடைய அரசின் பொற்காலத் தில் அமைந்திருக்கிற இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்திற்குப் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை வைப்பதில் நாமெல்லாம் பெருமை அடைகிறோம். இந்தப்

பல்கலைக் கழகத்திலே பயில்கிற மாணவர்கள், நாமெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்திலே பயில் கிறோம் என்றும் அங்கே பணிபுரிகிறவர்கள் எல்லாம் நாமெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்தி திலே பணிபுரிகிறோம் என்றும் பெருமைப்படுகிற நிலையில் உள்ள அவர்களை எல்லாம் வாழ்த்தி இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நன்றியைச் சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரை வைப்பதாக இந்த அரசு முடிவு செய்து இருப்பதாகச் சொல்லி இந்த சட்ட முன்வடிவு விவாதத் திற்கு வைக்கப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் தற் போதைய தமிழ்நாட்டில் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ்நாட்டில் மருத்துவ கல்லூரி மேம்பாட்டுக்காகத் தனிச் சிறப்பு வாய்ந்த அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள் என்பது தான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மிக்க மகிழ்ச்சி.

தமிழ்நாட்டில் 8 மருத்துவக் கல்லூரிகள் இருந்த இடத்தில் 11 மருத்துவக் கல்லூரிகளாக முதல்வர் அவர்கள் ஆக்கி இருக்கிறார் கள். புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மருத்துவக் கல்லூரிகள்— இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி, அண்ணாமலை சர்வகலா சாலையில் உள்ள மருத்துவக் கல்லூரி, கோவையிலே உள்ள பி.எஸ்.ஜி. நிறுவனத்தினுடைய மருத்துவக் கல்லூரி—ஆகிய மூன்று கல்லூரிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இது எந்தக் கோட்பாட்டுடன் எந்த முறையில் அமைக்கப்படுகிறது என்பதைச் சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் பார்த்தோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள மருத்துவப் பல்கலைக் கழகத்தில் ஒருவருக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் கேப்பிட்டேஷன் ஃபீஸ் என்று சொல்லி பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்து அவர்களைச் சேர்த்ததை நாம் பார்த்தோம். அந்த அளவில் ஒரு தனி மனிதர் இரண்டரை இலட்சம் ரூபாயைக் கொடுத்து மருத்துவப் படிப்பு படித்தால் அந்த டாக்டர் எப்படி மருத்துவ மனைக்கு வரும்போது சேவை செய்வார் என்பதை எல்லாம் பற்றிச் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே நான் விரிவாகச் சொல்லியிருக்கிறேன்.

ஏழைகள் மிகுந்த அறிவாளிகளாக இருந்தாலும் கூட, ஒன்றிரண்டு மார்க்குகள் குறைந்த காரணத்தாலோ அல்லது ஏழை என்ற காரணத்தாலோ அந்த மருத்துவக் கல்லூரியின் வாசலைக்கூட எட்ட முடியவில்லை. அதற்குக் காரணம் 2½ லட்சம் ரூபாய் இல்லாத காரணத்தாலே. அந்த அளவிலே தான் இந்த மருத்துவப் பல்கலைக் கழகங்களும், மருத்துவக் கல்லூரி களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.





இன்னொன்றைக் கூட நான் சொல்ல வேண்டும். இந்த மருத்துவக் கல்லூரிகள் (குறுக்கீடு) கடைசியிலே கேளுங்கள்....

திரு. ரா. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே ஜனதா கட்சி ஆளும் கட்சியாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே இருக்கிற மருத்துவக் கல்லூரிகளில் இதுபோன்று கேப்பிட்டேஷன் ஃபீஸ் கட்டி படிக்கிற மாணவர்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்த முறையை எடுத்துவிட்டால் அவர்கள் எல்லாம் கர்நாடகத்திலே போய் 3 லட்சம் ரூபாய் கட்டி படிக்க வேண்டிய அவசியம் ஏற் படுமே, ஆகவே அங்கே ஜனதா அரசாங்கத்திலே அதைக் கட்டுப் படுத்தச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்து வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற நானும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். இப்போது பேசியவரும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். அந்தக் காரணத் தாலே அங்கேதான் இதைப் பேச வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமானால் அங்கே உள்ள எதிர்க்கட்சியிடம் சொல்லி அதைச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிலே இன் னொன்றும் இருக்கிறது. இங்கே இருந்து கர்நாடகத்திலே போய்ப் படித்து விட்டு டாக்டர்களாக பிராக்டீஸ் பண்ண இங்கே வந்து விடுகிறார்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறுக்கீடு செய்வது சரியாக இருக்காது என்று கருதுகிறேன். காரணம் நீங்கள் அவையின் தலைவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே இருந்து இருக்கிற உண்மைகளைச் சொல்வதில் தப்பு இல்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: 2½ லட்சம் ரூபாய் கொடுத்து சேர வேண்டும் என்று அங்கே யாரும் விளம்பரம் செய்யவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்னொன்றும் சொல்லுவேன். இந்த மாதிரியான நிலைமை தமிழ்நாட்டில் இல்லாமல் இருந்தது என்பதை ஒப்புக் கொள்வீர்களா? அதை ஏன் கொண்டு வந்தீர்கள் என்று தெரியவில்லை. அத்தோடு, இந்த மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் அதற்குரிய இணையான மருத்துவ மனைகள் இல்லாமலேயே நடந்துகொண்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 13

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
சரியான பெசிலிட்டீஸ் இல்லை என்ற செய்தியும் வந்திருக்கிறது.
இதைத்தவிர, இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால்,
செங்கற்பட்டிலே அனுமதி பெற்ற மருத்துவமனை இருக்கிறது.
அது அந்தக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. அங்கே 2 மாதங்
களாக ஆப்பரேஷன் தியேட்டர் இயங்கவில்லை. காரணம் என்ன
தெரியுமா? அங்கே மயக்க மருந்து கொடுக்கிற மருத்துவர்கள்
இல்லை. அந்தக் காரணத்தினாலே 2 மாதங்களாக ஆப்பரேஷன்
தியேட்டர் இயங்கவில்லை. இன்னொரு செய்தியையும் சொல்லு
வேன். மதுராந்தகத்திலே ஒரு கர்ப்பிணி பெண், குழந்தை பெற்ற
பின் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்
அங்கே. ஆனால் அந்தப் பெண் பரிதாபமாக மாண்டு போனார்.
அப்படி மாண்டு போனதற்குக் காரணம் பயிற்சி பெற்ற மயக்க
மருந்து கொடுக்கும் டாக்டர் இல்லாமல் இருந்ததுதான். பயிற்சி
பெறாதவர்கள், அனுபவம் இல்லாதவர்கள் மயக்க மருந்து
கொடுத்த காரணத்தாலே அவர் இறந்து போனார் என்று ரிப்
போர்ட் சொல்லுகிறது. இதையெல்லாம் நீங்கள் கவனத்திலே
கொண்டு, அதைச் சரி செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, முதலமைச்சரின் பெயரை வைப்பதில்
எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. முதலமைச்சரின் பெயரை
வைப்பதில் மிக்க மகிழ்ச்சி. நான் சொல்லிக் கொள்ள விரும்பு
வது இன்னொன்று. நீங்கள் சொன்னீர்கள், உயிரோடு இருப்பவர்
வர்களின் பெயர்களை எந்த ஸ்தாபனங்களுக்கும் வைக்கக் கூடாது
என்று. சொன்னதை மாற்றிக் கொண்டதாக மாண்புமிகு போக்கு
வரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கூட நேற்று சொன்னார்கள்.
அதிலே மகிழ்ச்சி. ஆனால் எப்போது நீங்கள் மாற்றிக் கொண்
டீர்கள்? அது எங்களுக்குத் தெரிய வேண்டாமா? நீங்களே சொல்லி
சட்டமாக ஆக்கியதை எப்போது மாற்றிக் கொண்டீர்கள் என்று
சட்டமன்ற உறுப்பினர்களாக, மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும்
எங்களுக்குத் தெரிய வேண்டாமா? நான் கேட்டுக்கொள்ள
விரும்புவது என்னவென்றால், ஆலந்தூரிலே ஒருவருடைய
பெயரை நகர மன்றத்திற்கு வைத்தீர்கள் அல்லவா, மோகன
ரங்கம் என்று? அப்போது மாற்றிக் கொண்டீர்களா அல்லது அதன்
பிறகு மாற்றினீர்களா என்பது எங்களுக்குத் தெரியவில்லை.
அதை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே விளக்க வேண்டும்,
உங்கள் கொள்கை என்றைக்கு மாறியது என்று. இன்னொன்று
கூட சொல்வேன். பணம் இருக்கின்றவர்கள் தங்களுடைய
பணத்தைக் கொடுத்து பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள்
என்று பெயரைப் போட்டுக் கொள்கிறார்கள். மகிழ்ச்சி. பணம்
இருக்கிற ஒரே காரணத்திற்காக பெயர் வந்து விடுகிறது.
ஆனால் பொது வாழ்க்கையிலே, செயற்கரிய காரியங்களை
செய்தவர்களுடைய பெயர்களை வைப்பதை நாங்கள்
தடை செய்யவில்லை. விரும்புகிறோம். அதை நாம்



1987 நவம்பர் 13], [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

(பிற்பகல் 12–30)

அதிகமாக வைக்க ஏற்றுக்கொள்கிறோம். செயற்
கரிய செய்த பல்வேறு தலைவர்களுடைய பெயர்களை மட்டு
மல்ல, அவர்களுடைய படங்களைக் கூட வைக்கலாம். இதை
நான் சொல்வதற்குக் காரணம், சென்ற ஆண்டே இந்த
அவையில் இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். பாரதப்
பிரதமராக இருந்து மறைந்த ஆசிய ஜோதி பண்டிட் ஜவஹர்லால்
நேருஜியின் படத்தை இந்த மன்றத்தில் வைக்க வேண்டுமென்று
சொன்னேன். 17 ஆண்டுக் காலம் எந்தவிதமான எதிர்ப்புமின்றி
ஆண்ட முடிசூடா மன்னர் அவர். அவருடைய படத்தை இங்கே
வைக்க வேண்டும் என்று சொன்னேன். இன்றுவரையில் இந்த
அரசு அதற்கான முயற்சியைச் செய்யவில்லை.

அதைப்போன்று 9 ஆண்டுக் காலம் தமிழ்நாட்டில் அரசுப்
பொறுப்பிலே இருந்து பொற்கால ஆட்சி நடத்திய பெரும்
தலைவர் காமராஜ் அவர்களுடைய படத்தை எல்லா அலுவலகங்
களிலும் வைக்க வேண்டுமென்று சொன்னோம். அவர்களுடைய
படத்தை வைக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டி
ருப்பதாக அறிகிறேன். ஆனால் அந்த உத்தரவு செம்மையாகச்
செயல்படுத்தப்படவில்லை. பல அலுவலகங்களிலே அவர்
களுடைய படத்தை ஒரு மூலையில் தூக்கிப் போட்டிருக்கிறார்
கள். அந்த உத்தரவைச் சரியான முறையில் செயல்படுத்தி,
அந்தப் படத்தை வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். செயற்கரிய
செய்த தலைவர்கள் உயிரோடு இருந்தாலும் அவர்களுடைய
படத்தை வைக்க எங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்று சொல்லி
முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இங்கே விவாதத்தில் இருக்கக்கூடிய மருத்
துவப் பல்கலைக் கழகத் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

இந்தச் சட்டத் திருத்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற விஷயம்
கடந்த கூட்டத் தொடரில் இது சம்பந்தப்பட்ட சட்டத்தின்
மீதான விவாதத்திற்கு வரவில்லை. இதிலே பல்வேறு விஷயங்கள்
சொல்லப்பட்டிருக்கின்றன. பல்வேறு விஷயங்கள் சொல்லப்
பட்டிருந்தாலும் மருத்துவத் துறையை ஒட்டி இருக்கிற பல்வேறு
பொதுவான கருத்துக்களை பட்ஜெட் விவாதம் வருகின்றபோது
விவாதிக்கின்ற வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற
முறையிலே இங்கே மிக முக்கியமான ஒரே ஒரு விஷயத்தை
மட்டுமே வலியுறுத்த விரும்புகிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1987 நவம்பர் 13

ஏற்கெனவே பிறப்பித்திருக்கிற அவசரச் சட்டத்தை 'ரீ
பிளேஸ்' பண்ணி இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு
வரப்பட்டிருக்கிறது. கடந்த கூட்டத் தொடரில் மருத்துவப்
பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு அவைமுன் வைக்கப்பட்ட
போது அதற்குரிய பெயர் வைக்கும் வாய்ப்பு ஏன் இல்லாமல்
போயிற்று என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஆளுகின்ற தரப்பிலே இருக்கிற பெரும்பகுதி உறுப்
பினர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இந்த மருத்துவப்
பல்கலைக் கழகத்திற்குப் பெயர் வைப்பதற்கு ஒரு கருத்தை,
நியாயத்தை குறிப்பிட்டார்கள். நான் அந்த விவரங்களுக்குள்ளே
போக விரும்பவில்லை. அத்தகைய பிரச்சினைகள்மீது பேச
வேண்டிய அவசியம் இல்லை, பொருத்தமில்லை என்பதால்
அதற்குள்ளே போகாமல் நடைமுறையிலே இந்த மாநில அரசு
தன்னுடைய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் எவ்
வளவு பின்னடைந்திருக்கிறது, தன்னுடைய பொறுப்புக்குத்
தகுந்த நடைமுறையில் ஈடுபடவில்லையே என்பதைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

கடந்த கூட்டத் தொடரிலே மருத்துவப் பல்கலைக் கழகச்
சட்ட முன்வடிவு விவாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவாதம்
முடிந்து ஆறு மாதங்களுக்குள் ஒரு அவசரச் சட்டத்தின் மூல
மாகப் பெயர் வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏன்
வந்தது? கடந்த கூட்டத் தொடரிலேயே இதைச் செய்திருக்க
லாமே, இதைச் செய்யாமல் இடையிலே அவசரச்சட்டம் ஏன்
என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த மாநில அரசு அறிவித்த ஜி. ஓ.வை வைத்து உயிரோடு
இருப்பவர்கள் பெயரை அரசு நிறுவனங்களுக்கு வைக்கலாமா,
வைக்கக் கூடாதா என்ற விவரத்திற்குள் போக நான் விரும்ப
வில்லை. ஆனால் உயிரோடு இருப்பவர்கள் பெயரை வைக்கக்
கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இப்போ
துள்ள நடைமுறையைப் பார்க்கிறபோது அந்த ஆணையை
அரசு ஒரு உள்நோக்கத்தோடுதான் பிறப்பித்திருக்கிறது; அந்த
ஆணையை வாபஸ் பெறுவதும் ஒரு உள்நோக்கத்தோடுதான்
என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருக்கிற ஒரு அரசு விருப்பு
வெறுப்போடு நடந்துகொள்வது, பழிவாங்கும் நோக்கத்தோடு
நடந்துகொள்வது, அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி
களை பழிதீர்த்துக்கொள்வது என்ற நிலையை மேற்கொண்டால்
அது ஜனநாயக மரபுகள் பெரிதும் ஆழமாக காயப்படுத்தப்
படுவதாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1987 நவம்பர் 13] [திரு. கே. சுப்பராயன்]

நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், உயிரோடு இருப்
பவர்கள் பெயரை வைக்கக்கூடாது என்று உத்தரவு போட்டீர்கள்.
அள்ளித் தெளித்த அவசரக் கோலத்தில் அந்த உத்தரவைப்
போட்டீர்கள், அதே அள்ளித் தெளித்த அவசரக் கோலத்தில்
அந்த உத்தரவை 'வித்ட்ரா' பண்ணுவதற்கு என்ன காரணம்?
தங்கள் அரசியல் எதிரிகளைப் பழிதீர்த்துக்கொள்ள அந்த
உத்தரவைப் போட்டீர்கள். அரசியல் எதிரிகளைப் பழிதீர்த்த
பின்னால் தங்களுடைய கௌரவத்தை நிலைநிறுத்துவதற்காக,
தங்கள் கையில் இருக்கிற அதிகாரத்தின் மூலமாக,
அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள் என்று மக்கள்
நினைக்க வழி ஏற்படாதா? வழி ஏற்பட்டிருக்கிறது உங்கள்
நடவடிக்கை மூலம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இங்கே ஒரு விசேஷ சூழ்
நிலை இருக்கிறது. இந்தப் பெயர் வைப்பதிலே மருத்துவப்
பல்கலைக் கழகம் மட்டுமல்ல; மாவட்டப் பிரிவினை உள்ளிட்டு
பல்வேறு விஷயங்களில் கசப்பான நிலைமை இருக்கிறது. கால
மெல்லாம் நாட்டை ஒன்றுபடுத்தப் போராடிய தலைவர்கள்
பெயரால் மக்கள் பிளவுபடுத்தப்படுகிறார்கள். இதன்மூலம்
ஜாதி, மதக் கொள்கைகள் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்
கின்ற வகையில் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றன. ஆகவே
பெயர் வைப்பதைப் பொறுத்தமட்டில், இன்றைய சூழ்நிலையில்,
கூர்ந்த மதியோடு செயல்பட வேண்டும்; தேசிய ஒற்றுமைக்கு
உகந்ததாக இருக்க வேண்டும். இப்போதைய நடைமுறையைப்
பார்க்கும்போது இது மக்களைப் பிளவுபடுத்தும் ஆயுதமாக,
ஒற்றுமையைக் குலைக்கும் ஆயுதமாகப் பயன்படும் வாய்ப்பு
இருக்கிறதா என்று அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய
அவசியம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தப் பெயர் வைக்கிற பிரச்சினையை ஒட்டி,
மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி
யிருக்கிற அதேநேரத்தில் இறுதியாக ஒரு விஷயத்தை மீண்டும்
நினைவுபடுத்திக் கொள்வதற்காகச் சொல்கிறேன். இந்த மருத்
துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவில் பூர்வபீடிகை காரண
நோக்கங்களில் சொல்லப்பட்டிருக்கிற சில விஷயங்கள் நடை
முறைக்கு வராத ஒன்றாகவுள்ளன. மருத்துவக் கல்லூரிகளைத்
தனியாகப் பிரித்து, மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கி
றோம் என்று சொல்லி திட்டங்கள் தீட்டி, மருத்துவக் கல்வியைத்
தனியார் துறைக்கு ஒதுக்குவதன் மூலம் அது ஒரு மிகப்பெரும்
வியாபாரமாக மாறி, தமிழ்நாட்டில் இந்த மருத்துவக் கல்வி
சாமானியர்கள் தீண்ட முடியாத ஒரு கனவுக் கோட்டையாக
ஆகிவிடும் சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையைத் தவிர்க்க
மருத்துவக் கல்வியை தனியார் துறைக்கு ஒதுக்குவதை விட்டு,
மக்கள் நல்வாழ்வு என்று சொல்லுகின்ற இந்த அரசாங்கம்

[திரு. கே. சுப்பராயன்] [1987 நவம்பர் 13

சமுதாய ஆரோக்கியத்தை முன்னிட்டு இந்தச் சட்டமுன்வடிவை
மறுபரிசீலனை செய்து பொருத்தமான மாற்றம் கொண்டுவர
வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு துணைச் சபா
நாயகர் அவர்களே, இன்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகத
திற்குப் பெயர் சூட்டுவதைப்பற்றி திருத்த மசோதா ஒன்றைக்
கொண்டுவந்திருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில்,
இதுவரையில் இருந்த எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் ஒரு
முத்தாய்ப்பு வைத்தாற்போல் மருத்துவக் கல்லூரிகளைத்
தனியாகப் பிரித்து, ஒரு முக்கியத்துவம் கொடுத்து, தனிப்
பல்கலைக்கழகம் உருவாக்கியதற்காக நாங்கள் பாராட்டு
கிறோம். அதிலும் சிறப்பாக இந்தப் பல்கலைக் கழகத்திற்கு
நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சருடைய பெயரைச் சூட்டி
யிருப்பதை ஒரு சிறப்புத் தன்மை வாய்ந்ததாகக் குறிப்பிட
விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் எனக்கு முன்னால் பேசிய
வர்கள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.
வபயரைச் சூட்டுவதிலே உள்ள சங்கடங்கள், நேரத்திற்கு
நேரம் கருத்திலே ஏற்படுகின்ற மாற்றம், வேறுபட்ட கருத்து,
அதற்கான ஆணை மாறி மாறி வந்தது பற்றி எல்லாம் சொன
னார்கள்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.
சுப்பராயன் அவர்கள் தேசிய ஒற்றுமைக்கும், தேசிய முன்னேற்
றத்திற்கும் உழைத்து, நாட்டிற்கு வல்லமை தேடித்தருகின்ற,
புகழைத் தேடித் தருகின்ற தலைவர்களுடைய பெயரை வைப்
பதிலே யாருக்கும் எந்தவிதமான சங்கடமும் இல்லை என்று
சொன்னார்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் தேசிய
நலன் கருதி பல்வேறு தேசியப் பிரச்சினைகளில் அக்கறை கொண்
டுள்ளார்கள். குறுகிய காலமாக இருந்தாலும், நீண்டகாலமாக
இருந்தாலும் அவர்களுடைய அண்மைக்கால நடவடிக்கையும்
செயலும் இந்த நாட்டுமக்களுக்கு, இந்திய மக்களுக்கு ஒற்றுமை
யையும் ஒருமைப்பாட்டையும் உணர்த்துகின்ற வகையில், தேசிய
நலன் கருதி, பல்வேறு பிரச்சினைகளை அணுகியிருக்கிறார்கள்
என்பதை எடுத்துக்காட்டுகின்றன. ஆகையால் அவர்கள் தேசியத்
தலைவர்களுக்கு ஒத்த இடத்தில் வைக்கப்பட்டு, அவர்களுடைய
பெயரைச் சூட்டுவதை எங்கள் கட்சி வரவேற்கிறது; நானும்
பாராட்டுகிறேன்.

அதேநேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சித்
தலைவர் அவர்களுடைய பெயராலே தமிழ்நாட்டில் இயங்கி
வரும் மருத்துவப் பல்கலைக் கழகம் உலகத்தில் இருக்கிற
எல்லாப் பல்கலைக்கழகங்களையும் விட அதிகமான
முக்கியத்துவம் வாய்ந்ததாக, சிறப்பு வாய்ந்ததாக இருக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று



1987 நவம்பர் 13] [திரு. எஸ். வேணுகோபால்]

(பிற்பகல் 12.40)

சொன்னால் ஏதேனும் நோய் என்று சொன்னால்
இங்கேயிருந்து உடனடியாக அமெரிக்கா செல்கிறார்கள். வசதி
படைத்தவர்கள், செல்வம் படைத்தவர்கள், செல்வாக்கு
மிக்கவர்கள் உடனடியாக வேறு நாடுகளுக்குச் சென்றுதான
சிகிச்சை செய்து கொள்கிறார்கள். தமிழ் நாட்டின் தலைநகரில்,
ஏன் இந்தியாவின் தலைநகரில் கூட பார்த்துக் கொள்வதில்லை.
அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கக்கூடாது. எனக்கு முன்னால்
பேசியவர்கள் முதல்வர் அவர்களின் புகழை, செயல்முறை
களைப் பற்றிப் பேசுகிறபோது அவ்வளவு சிறப்பாகச் சொல்லி
யிருக்கிற காலக்கட்டத்தில், இந்தப் பல்கலைக் கழகம் உலக
அரங்கத்தில் சிறப்பானதொன்றாக இருக்க வேண்டுமென்று நான்
விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்பு
கிறேன். மருத்துவத் துறை என்கிறபோது என்னால் இதைச்
சொல்லாமல் இருக்க முடியவில்லை. இன்றைக்கு சென்னையில்
இருக்கிற பொது மருத்துவமனைகளுக்குப் போனால் அங்கே
மக்கள் போதிய படுக்கை வசதி இல்லாமல் கீழே படுத்துக்
கொண்டிருக்கிற காட்சியைக் காண முடிகிறது. அங்கே இருக்கிற
சுகாதார வசதிகளைப் பார்த்தால் யாரும் உள்ளே போக
முடியாத அளவிற்கு தண்ணீர், மலம் போன்றவை தேங்கி, கொசுக்
கள் தொல்லையால் மக்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.
சுகாதார வசதிகளைச் செம்மைப்படுத்தவில்லை. பிணக்கிடங்
கில் ஏ. சி. மெஷின் வேலை செய்யவில்லை. ஸ்டான்லி
மருத்துவமனையிலும் ஏ. சி. மெஷின் இயங்கவில்லை. இப்படிப்
பல்வேறு குறைபாடுகள் பொது மருத்துவமனைகளில் இருக்
கின்றன. காலை 6 மணிக்கு அங்கே போனால் 10 மணி வரைக்கும்
கியூவில் நிற்க வேண்டும். அங்கே கொடுக்கப்படுகிற மருந்துகள்
மக்கள் நல்வாழ்விற்காக நல்ல மருந்தாகக் கொடுக்கிறார்களா
என்றால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
மருந்து இவ்வளவுதான். ஐந்து மாத்திரையை கையில் பிடி
என்று சொல்கிறார்களே தவிர வேறல்ல. இதைச் சொல்லும்
போது தனியார் மருத்துவ மனைகளை அரசுடைமையாக்க
வேண்டும், தனியார் மருத்துவமனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள
வேண்டும். நான் தேசியமயமாக்குவதற்கு மாறுபட்டவன் அல்ல.
ஆனால் பொது மருத்துவமனைக்குப் போகிறபோது சிகிச்சை
பெறுவதில் நேரம் அதிகமாகிறது, கொடுக்கப்படுகிற மருந்து
களும் சரியாக இருப்பதில்லையென்பதால் மக்கள் தனியார்
மருத்துவமனைகளுக்குப் போகிறார்கள். அப்படிப்பட்ட
நிலைமை இருக்கக்கூடாது. தமிழகத்தில் இருக்கிற எல்லா ஏழை
எளிய மக்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழே இருப்பவர்
களுக்கும், மிகச் சாதாரணமான மக்களுக்கும் நலம் பயக்கிற
வகையில் எல்லாக் காரியங்களையும் செய்து நல்ல மருந்து
களைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 நவம்பர் 13

உதாரணமாகச் சொன்னால் சென்னையில் இருப்பதைப்
போல மதுரையில் இராஜாஜி மருத்துவமனை இருக்கிறது.
அங்கே பிணக்கிடங்கில் ஏ.சி. வேலை செய்யவில்லை என்று
சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அடுத்து அந்த
மருததுவமனைக்குப் போதுமான தண்ணீர் வசதியே இல்லை.
ஈ.சி.ஜி. மெஷின் வேலை செய்யவில்லை. எக்ஸ்ரே கருவி வேலை
செய்யவில்லை. இப்படிப் பல்வேறு குறைகள் இருக்கின்றன.
பொது மருத்துவமனைகளில் ஏழைகளுக்கு எல்லா வசதிகளும்
கிடைக்கிறதா என்றால் இல்லை. அதற்காகக் கோடிக்கணக்கான
பணம் செலவு செய்தாலும், அங்கே இருக்கிற குறைபாடுகள்
நீங்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது என்றும்
அமைச்சர் அவர்கள் இதில் தயவுசெய்து கவனம் செலுத்தவேண்டு
மென்றும் கேட்டுக்கொள்கிறேன். பொது மருத்துவமனைக்குப்
போய் விட்டு வந்தவர்கள், நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்
கள் யாரும் மறுபடியும் அந்த மருத்துவமனைக்குப் போவார்
கள் என்று சொல்ல முடியாது. அவ்வளவு சுகாதாரக்கேடு
அங்கே இருக்கிறது. அங்கே ஒரு கெட்ட வாடை வீசுகிறது.
அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரையில் பொது மருத்துவமனை
களில் பல முக்கிய கருவிகள் இல்லை. நான் இன்னொன்றையும்
சொல்கிறேன். தனியார் மருத்துவமனைக்குப்போன போது ஒரு
முக்கியமான ஸ்கேனிங் எடுக்கச் சொன்னார்கள். அந்த ஸ்கேனிங்
வசதி பொது மருத்துவமனையில் இருக்கிறதா என்றால், இல்லை.
எங்கேயிருக்கிறது என்றால் அப்போலோ ஆஸ்பத்திரியில்
இருக்கிறது. அங்கே ஸ்கேனிங்கிற்கு சென்றவுடன் அதற்கு
3,800 ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். ஏழை
யாக இருப்பவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள்
அங்கே போக முடியுமா என்று பாருங்கள். வசதி படைத்தவர்
கள்தான் அங்கே போக முடியும். ஆகவே சாதாரணமான
வர்கள் அங்கே போக முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, படித்து பட்டம் பெற்ற டாக்டர்கள் பலபேர் இங்கே
வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலை எங்கேயாவது
கிராமத்திலாவது அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இப்படி
வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு இந்தப் பல்கலைக் கழகத்
தின் மூலம் வேலை உருவாக்க வேண்டுமென்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன். இதற்கு முன்னாலே கோயம்புத்தூரில் மெடிகல்
காலேஜில் உபகரணங்கள் இல்லாத காரணத்தால், கருவிகள்
இல்லாத காரணத்தால், மருத்துவமனை இல்லாத காரணத்தால்
அதற்கு அந்தத் தகுதியை அளிக்கமுடியாது என்ற
கருத்தை டெல்லியிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். அப்படி
யில்லாமல் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் பெயரால் உரு
வாக்கியிருக்கிற பல்கலைக் கழகம் சீரோடு, சிறப்பாக இருக்க
வேண்டுமென்று விரும்புகிறோம். எந்தவிதமான குறையும்
எந்தவிதமான தட்டுப்பாடும் இதற்கு இருக்கக்கூடாது. படித்து



1987 நவம்பர் 13] [திரு. எஸ். வேணுகோபால்]

வெளியே வருபவர்கள் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர்
அவர்கள் பெயரால் பல்கலைக்கழகம் இருக்கிறது என்று
சொன்னால், எம். ஜி. ஆர். என்று சொன்னவுடனே ஏழை
களுக்கு உதவுகிற கரம் என்று சொல்வதைப்போல், நல்ல
திறமையாக தீர்க்கதரிசனமான வெற்றிகொள்பவனாக
வீரனாக, நல்ல அறிவாளியாக வருகிற அளவிற்கு இந்தப் பல்
கலைக்கழகம் இருக்கவேண்டுமென்று கூறி, அளித்த வாய்ப்
பிற்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகம்
என்று அறிமுகப்படுத்தப்பட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்
பல்கலைக் கழகம் என்று மாற்றப்படுவதற்கு உண்டான
அவசரச் சட்டம் பிறப்பிக்கபபட்டு, இந்த அவசரச் சட்டத்தைச்
சட்டமாக ஆக்குகின்ற இந்த மசோதா மீது பேசிய அத்தனை
பேர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, எல்
லோருமே வரவேற்றார்கள். நான் அதற்காக நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய
உரையைத் துவக்குவதற்கு முன்பாக நான் ஒன்றை இந்த அவைக்
குறிப்பிலே பதிவு செய்ய வேண்டும் என்று கருதுகிறேன். என்
வாழ்நாளில் எத்தனையோ மசோதாக்களை இந்த அவையிலே
கொண்டு வந்து நான் அறிமுகம் செய்து, நிறைவேற்றியிருக்கி
றேன். நிலச் சீர்திருத்த மசோதா முதற்கொண்டு, குடியிருப்பு
மசோதாக்கள் முதற்கொண்டு, பல மசோதாக்களைக் கொண்டு
வந்து நிறைவேற்றியிருக்கிறேன். என்றாலும் மனத் தூய்மை
யோடு, நான் மனந்திறந்து சொல்கிறேன். இந்த மசோதாவை
நிறைவேற்றுவதில் நான் பெருமை அடைகிறேன். பூரிப்பு அடை
கிறேன். இதை ஒரு பெருத்த வாய்ப்பாக நான் கருதுகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி) என் வாழ்நாளில் நான் பெற்ற ஒரு
அரிய வாய்ப்பாக இதைக் கருதுகிறேன்.

ஏன் என்றால், ஒரு தனி மனிதனுடைய பெயரை நாங்கள்
பல்கலைக்கழகத்திற்கு வைக்கவில்லை. ஒரு சமுதாயத்திற்கு
எழுச்சியை உண்டாக்கி, சமுதாயத்தோடு தன்னையும் இணைத்
துக் கொண்டு, சமுதாயம் வளர்ந்தால்தான் தான் இருக்க
முடியும் என்ற உணர்வோடு ஏழை எளியவர்களுடைய வாழ்வில்
அன்றாடம் அக்கறை கொண்டு உழைக்கின்ற ஒரு உத்தமத் தலைவ
னுடைய பெயரை வைப்பதில் நான் மட்டுமல்ல, இந்த அமைச்சரவை
வையில் இருக்கிற அத்தனை பேர்களும், அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அத்
தனை பேர்களும் பெருமையோடு, மகிழ்ச்சியோடு இந்த நல்ல
காரியத்தைச் செய்ய இறங்கியிருக்கிறோம்.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 நவம்பர் 13

இந்தச் சட்டத்தைப் பற்றி கருத்து தெரிவித்துப் பேசும்போது
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு
வாளர் ரகுமான்கான் அவர்கள், அவர்களுக்கே உரித்தான பாணி
யில் பேசினார்கள். அவரும் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்,
எம். ஜி. ஆர். பெயரை வைப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை
இல்லை, நாங்கள் பெருந்தன்மையானவர்கள், எங்களுடைய
பண்பாடு ஒரு தனியான பண்பாடு, பண்பாட்டுக்கு இலக்கணமே
நாங்கள்தான் என்று சொல்வது போல, அவர்களுக்கே உரிய
பண்பாட்டைச் சொல்லி, ஏதோ மற்றவர்கள் எல்லாம் பண்பாடு
அற்றவர்கள் என்று கருதவேண்டும் என்பதற்காக அப்படிப் பேசி
னார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் நான் மன வேதனை
யோடு தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பண்
பாட்டைப் பற்றிப் பேசியவர்கள் இந்தச் சட்டத்தை நிராகரிக்கி
றோம் என்ற தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, ஆதரிக்கிறோம்
என்று பேசுவது என்ன புதிய பண்பாடோ எனக்குப் புரியவில்லை.
இந்தப் பண்பாட்டுக்கு இலக்கணத்தை நான் எங்கே போய்க்
கேட்பது என்று எனக்குத் தெரியவில்லை. சட்டத்தை எதிர்க்கி
றோம் என்று சொல்லிவிட்டு, நிராகரிக்கிறோம் என்று சொல்லி
விட்டு, பண்பாட்டுக்கு இலக்கணம் பேசுவது, ஏதோ ஒன்று
வேதம் ஓதுகிறது என்று சொல்வார்களே, அதைப்போல் இருக்
கிறது.

நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்
களைக் கேட்டுக் கொள்வது, அவர்களுக்கு இருக்கின்ற ஆதங்கம்
எனக்குப் புரிகிறது. "ஏன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தீர்
கள்? உயிரோடு இருப்பவர்களுடைய பெயரை வைப்பதில்லை
என்று சொன்னீர்களே, இப்போது ஏன் வைத்தீர்கள்? முன்பு
உயிரோடு இருப்பவர்களுடைய பெயரை எடுக்கவேண்டும் என்று
உத்தரவு போட்டீர்களே, இப்போது ஏன் வைத்தீர்கள், எப்
போது இந்தச் சட்டத்தை மாற்றினீர்கள், அப்போது நாங்கள்
இதைப் பண்பாட்டோடு ஏற்றுக்கொண்டோம்" இதையும்
எங்களுக்கு உரிய பண்பாட்டோடு நாங்கள் ஏற்றுக்கொண்டோம்
என்று சொன்னார்கள். நான் இந்த அவைக்கும், நாட்டுக்கும்,
இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஒரு உண்மை
யைத் தெரிவிக்கலாம் என்று இருக்கிறேன்.

மருத்துவப் பல்கலைக்கழகம் துவக்கப்படும்போதே, கோப்பு
கள் முதலமைச்சருக்கு அனுப்பப்படும்போதே, இதற்கு என்ன
பெயரை வைக்கலாம் என்று நாங்கள் கேட்டு, முதலமைச்சர்
முடிவிற்கு இந்தக் கோப்பை அனுப்பினோம். அனுப்பிய அந்தக்
கோப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்கள் கையா
லேயே தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகம் என்று பெயரிட
வேண்டும் என்று எழுதி இருக்கிறார்கள். அந்தப் பேரிலேதான்
இந்தச் சட்டம் கொண்டு வந்தபோது, தமிழ்நாடு மருத்துவப்
பல்கலைக் கழகம் என்ற பெயர் வைக்கப்பட்டது. முதலமைச்சர்
அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்றதற்குப் பிறகு இந்த மருத்துவப்



1987 நவம்பர் 13] [திரு. ப. உ. சண்முகம்]

(பிற்பகல் 12-50)

பல்கலைக் கழகத்திற்கு முதலமைச்சர் பெயரை வைக்க வேண்டும்
என்று அமைச்சர்களாகிய நாங்கள் எல்லாம் ஒன்று கூடி முடிவு
எடுத்து, முதலமைச்சர் அமெரிக்காவில் இருப்பதற்கு உள்ளாகவே,
அவரைக் கேட்டால் ஒத்துக் கொள்ளமாட்டார் என்ற காரணத்
தால் நாங்கள் இதை அவசரச் சட்டமாகக் கொண்டு வரவேண்டும்
என்று சொல்லி, அவசரச் சட்டமாகப் போட்டோம். இதுதான்
உண்மை. இன்னமும் இந்தத் தேதி வரையில், இந்த நேரம் வரை
யில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு இணக்கம்
தெரிவிக்கவில்லை என்றாலும் குடியரசுத் தலைவருடைய ஒப்புதல்
பெற்று விட்டதற்குப் பிறகு, இந்த அவையினுடைய ஒப்புதலைப்
பெற்றுவிட்டதற்குப் பிறகு—இந்த அவையினுடைய ஒப்புதல்
என்று சொன்னால் தமிழ்நாட்டு மக்களுடைய ஒப்புதல் என்று
பொருள்—அந்த ஒப்புதல் பெற்றதற்குப் பிறகு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை
யோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோமே தவிர,
ஏதோ முதலமைச்சர் அவர்கள் சொல்லி சட்டத்தைக் கொண்டு
வந்ததாக தவறாக வியாக்கியானம் செய்ய வேண்டாம் என்றும்,
அவருடைய பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்த
முயற்சிக்க வேண்டாம் என்றும்—முயற்சி செய்தாலும் முடியாது,
அது வேறு விவகாரம்—இதை எதிர்க்கின்றவர்களுக்கு நான்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுதான் உண்மை.

ஆனால் இது ஏதோ முதலமைச்சரே செய்துவிட்டதுபோல கருதி,
'நீங்களே அவசரப்பட்டு கொண்டு வந்தீர்கள், நீங்களே அவசரப்
பட்டு ஒரு உத்திரவை போட்டு விட்டு நீங்களே அந்த உத்தரவைத்
திரும்பப் பெற்று இருக்கிறீர்கள்' என்று திரு. சுப்பராயன் அவர்கள்
பேசும்போதுகூட சொன்னார்கள். பெயரை வைப்பதே ஒரு
சர்ச்சையாக இருக்கிறது என்று சொன்னார். திரு. வேணு
கோபால் அவர்கள் பேசும்போது திரு. சுப்பராயன் அவர்கள்
பெயரை வைத்ததை வரவேற்கிறார் என்று சொன்னார். திரு.
வேணுகோபால் தவறாகப் புரிந்து கொண்டார் என்று கருது
கிறேன். அவர் அப்படிச் சொல்லவில்லை, அவர் சொல்லுவது
பெயரை வைத்ததே ஒரு பிரச்சினையாக ஆகிவிட்டு இருக்கிறது
என்று சொன்னார். நாம் மாவட்டத்திற்கு பெயரை வைத்ததை
அவர் குறிப்பிடுகிறார் என்று நான் கருதுகிறேன். அதைத்தான்
அவர் சொல்லியிருக்க வேண்டும். அதைத்தான் சொன்னதாகத்
தலையை ஆட்டுகிறார். பெரியார் பெயரில் மாவட்டம்,
அண்ணாவின் பெயரில் மாவட்டம், பசும்பொன் முத்துராம
லிங்கம் பெயரில் மாவட்டம், இப்படிப் பல பெரியவர்களின்
பெயரில் மாவட்டங்களை வைத்தோமே, அப்படிப் பெயர்
வைப்பதே ஒரு பிரச்சினையாக ஆகி விட்டது என்று சொன்னார்.
நாங்களாவது பரவாயில்லை, சாதாரண கட்சி, மாவட்டத்திற்குப்
பெயர் வைத்தோம். மிகப் பெரிய கட்சி, நகரத்திற்கு பெயரை
வைத்திருக்கிறது. லெனின்கிராடு, ஸ்டாலின்கிராடு என்று
ஆட்களின் பெயரை வைத்து இருக்கிறார்கள். மறந்து விடுகிறார்

கள் சில நேரங்களில். இதைக் கூட கம்யூனிஸ்ட் கட்சிக்கு நாம்
ஞாபகப்படுத்த வேண்டியது (குறுக்கீடு), நான் முடித்து விடு
கிறேன், என்னுடைய கடமையாக இருக்கிறது. மாவட்டங்
களுக்குப் பெயர் வைத்தது இந்த சின்னக்கட்சி, பெரிய கட்சி
நகரத்திற்குப் பெயர் வைத்திருக்கிறது. (கைதட்டல்)

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு குறிப்பிடுகிறார் என்று நான்
கருதுகிறேன். பெயர் வைத்ததை தவறு என்று நான் குறிப்பிட
வில்லை. தமிழ்நாட்டில் இன்றைக்கு நிலவுகின்ற விசேஷ சூழ்
நிலையில், ஒன்றுபடுத்த போராடிய தலைவர்களின் பெயர்களை
வைக்கிறபோது மக்கள் பிளவுபடுகிற வாய்ப்பு இருக்கிறது,
எச்சரிக்கையாகக் கவனிக்கவேண்டும் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன்.

ஆலந்தூர் நகராட்சி பெயரைப் பற்றி அடிக்கடி பேசினார்கள்.
விவரம் தெரிந்து கொண்டுதான் பேசுகிறார்கள். அரசியலுக்
காகப் பேச வேண்டும் என்பதற்காகப் பேசினார்கள் என்று
நான் நினைக்கிறேன். திரு. மோகனரங்கத்தின் பெயரை
இந்தக் கட்டிடத் திறப்பு விழாவின் போது வைக்கவேண்டும்
என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
உண்மை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி,
நான் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த
காரணத்தால் நான்தான் அதை அறிவித்தேன். அது தான்
உண்மை. ஆனால் அப்போதே திரு. மோகனரங்கம் அவர்கள்
முதலமைச்சரிடத்தில் வந்து தனக்கு விருப்பம் இல்லை என்றும்,
ஏற்கனவே ஒரு உத்திரவு இருக்கிறது என்றும் சொல்லி அந்த
உத்திரவுக்கு ஏற்ப அரசாங்கம் திரு. மோகனரங்கத்தின் பெயரை
அந்தக் கட்டிடத்திற்கு வைப்பதற்காக ஜி.ஓ. போடவே
இல்லை. ஆலந்தூர் நகராட்சியில் தி. மு. கழகம் தான்
இருக்கிறது. ஏனோ அதைப் படிக்கக்கூட மறுக்கிறார்கள்.
ஒருவேளை படித்து விட்டு பார்க்காதது போல் திரும்பி
வருகிறார்களோ என்னமோ எனக்குத் தெரியவில்லை.
ரோடில் போகும்போதே அதைப் பார்க்கலாம். ஆலந்தூர்
நகராட்சி என்று இருக்கிறதே தவிர, மோகனரங்கம் நகராட்சி
என்றா அந்தக் கட்டிடத்திற்கு பெயர் இருக்கிறது? இல்லை.
என்னவோ அதை ஒரு பிரச்சினையாக ஆக்கி பேச வேண்டும்
என்று திரும்பத் திரும்ப சொல்கிறார்கள். உத்திரவு போட
வில்லை, 'உத்திரவை ஏன் மாற்றினீர்கள்? என்ன கொள்கை





உங்களுக்கு இருக்கிறது? அப்போது ஒரு உத்திரவு போட்டீர்கள்,
இப்போது ஒரு உத்திரவு போடுகிறீர்கள், என்று கேட்டார்கள்.
உண்மை தான். அப்போது ஒரு உத்திரவு போட்டோம்.
மீண்டும் ஒரு உத்திரவு இப்போது போட்டு இருக்கிறோம்.

அடுத்து பேசும் போது கூடச் சொன்னார்கள், 'கட்டிடங்
களில் வாழ்வது இல்லை, இதயங்களில் தான் எங்கள் தலைவர்
வாழ்கிறார்' என்று அவர் தலைவரைப் பற்றிச் சொல்லும்போது
திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். நான் மறுக்க
வில்லை. ஆனால் எத்தனை இதயங்கள் என்று எதை வைத்து
எண்ணுவது என்பதுதான் என்னுடைய கேள்வி. இதயத்தை
எண்ணுவது என்பது 134 சட்டமன்ற உறுப்பினர்களைத்
தேர்ந்து எடுத்து இருக்கக்கூடிய பெரும்பாலான தொகுதி
மக்களைக் கொண்ட இதயங்களை வைத்து எண்ணுவதா? 22
சட்ட மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்து எடுத்து இருக்கக்
கூடிய அந்த மக்களை வைத்து எண்ணுவதா? எனக்குப் புரிய
வில்லை (கைதட்டல்). ஆகவே, எந்த இதயத்தில் யார் வாழ்
கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதயங்களில் யார்
வேண்டுமானாலும் எப்போதும் வாழலாம். ஆனால் இதயங்
களில் வாழ்வதை வைத்து கணக்கெடுப்பது என்று சொல்லுவது
(குறுக்கீடு) இந்தக் கருத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன்.
இதயங்களில் என்று சொல்லிப் பேசும்போது இன்னும் ஒன்றைக்
கூட சொன்னார்கள். தவறிச் சொல்லிவிட்டார்களோ என்
னமோ எனக்குத் தெரியாது. ஆனால் பதிவாகி இருக்கிறது
என்று நான் கருதுகிறேன். அவர் பேசும்போது சொன்னார்.
கேவலம் கட்டிடங்களில் இருக்கிற பெயரை எடுத்தீர்கள்
என்றார். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவு
செய்து கட்டிடத்தைக் கேவலப்படுத்தாதீர்கள். அதிலிருந்த
பெயர்களை கேவலப்படுத்தாதீர்கள் என்று நான் அவரைக்
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விவரமாக
இங்கே பேசுவதாக நினைத்து பல்வேறு விவகாரங்களை
வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சட்டம் ஆய்விற்கு வந்த நேரத்திலேயே திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பெருந்தன்மையோடு
வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம் என்று சொல்லி முடித்த
பின்னர், விவகாரங்களை வளர்ப்பது விவேகமாகாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதில் என்ன விவேகம்
என்ற கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். நேரமாகிவிட்டது.
பேசி முடித்துவிடுகிறேன். சட்டத்தை வரவேற்பதாகச் சொன்
னால் நான் வரவேற்கிறேன். ஆனால் தீர்மானம் கொடுத்

திருப்பது என்பது இந்தச் சட்டத்தை நிராகரிக்கிறோம் என்ற தீர்மானத்தையே கொடுத்திருக்கிறீர்கள். அதைத்தான் நான் சுட்டிக் காட்டினேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தீர்மானத்தை நிராகரிப்பதாக திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்ததாகச் சொன்னார்கள். அதைச் சரியாகப் படிக்கவேண்டும் என்று மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர் களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நிராகரிக்க வேண்டும் என்று எண்ணிக் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தின் வாசகம் ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரச் சட்டத் தின் மூலமாக இது தேவையில்லை என்ற பொருள்படத்தான் அந்த நிராகரிக்கும் தீர்மானம் கொடுக்கப்பட்டதே அல்லாமல், ஏதோ இந்த ஷரத்துக்களையே, 'the spirit of the legislation' அதையே நாங்கள் எதிர்க்கிறோம் என்று அந்தத் தீர்மானத்தின் வாசகம் இல்லை. This is only a technical objection. அவ்வளவுதானே அல்லாமல் இதிலே ஏதோ நாங்கள் அந்தக் கருத்தையே எதிர்க்கிறோம் என்றும் அதற்காகத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம் என்றும் சொல்லத் தேவையில்லை என்று தெரிவிப்பதோடு, ஏதோ இதயங்களைப் பற்றி மாண்பு மிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். எத்தனை இதயங் களிலே கலைஞர் வீற்றிருக்கிறார், எத்தனை இதயங்களில் எம்.ஜி.ஆர். வீற்றிருக்கிறார் என்ற கணக்கை திரு. ரகுமான் கான் சொல்லவில்லை. மாறாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தான் வம்புக்கு இழுப்பதைப் போல் இப்படித் தேவையற்ற ஒரு பிரச்சினையை உருவாக்குகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நன்றி. அடுத்து, மைய அரசு நுழைவுத் தேர்வு வைத்து, மைய அரசு 15 சதவீதம் எடுத்துக் கொள்கின்ற இடங்கள் பற்றி பேசப்பட்டது. வேறு சில கட்சி நண்பர்களும் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வது என் கடமை என்று கருதுகிறேன். இது இந்த மசோதாவிற்குத் தொடர்பில்லை என்றாலும், இந்த நேரத்தில் சொல்ல வேண்டிய நேரம், சொல்லியாக வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். மைய அரசு, மாநிலங்களில் எவ்வளவு இடங்களை நீங்கள் சேர்க்கிறீர்களோ எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு, அதில் 15 சதவீதம் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்து விட வேண்டும், மேல் பட்டப் படிப்பிற்கு நீங்கள் எவ்வளவு பேரைச் சேர்க்கின்றீர்களோ, அதில் 25 சதவீதம் மத்திய அரசுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அது சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய், அங்கிருந்து சுப்ரீம் கோர்ட் ஃபுல் பெஞ்சிற்குப் போய், சுப்ரீம் கோர்ட் ஃபுல் பெஞ்சில் தீர்ப்பாகிவிட்டது. நாம் ஃபுல் பெஞ்சிற்குப் போய், தீர்ப்பாகி விட்டதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று மறுப்பது





அரசியல் சட்டப்படி முடியாத காரியம். இதை ஒப்புக்கு நாங்கள் எதிர்க்கிறோம் என்று எவரும் கருதத் தேவையில்லை. நாங்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப் பினர்கள், இங்கிருப்பவர்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முதலமைச்சர்கள் கூட இந்தக் கருத்தை, இப்படி மைய அரசு எடுத்துக் கொள்வது பொருத்தமல்ல, தேவையற்ற ஒன்று என்று உத்தரப்பிரதேசம் உட்பட மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் சேர்ந்து இந்தக் கருத்தைத் தெரிவித் திருக்கிறார்கள். நாமும் வலியுறுத்திச் சொல்கிறோம். மத்திய அரசாங்கம் இப்படி எடுத்துக் கொள்வது முறையல்ல, சரியல்ல.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இதில் இன்னொன்றையும் நான் குறிப்பிடுகிறேன். எம்.பி.பி.எஸ். படிப்பிற்காக மத்திய அரசு தமிழக அரசிற்கு எந்த வகையிலேயும் பணம் கொடுப்பதில்லை. மாநில அரசுகள் தான் தங்கள் சொந்த நிதியிலிருந்து செலவு செய்கிறோம். எனவே இதில் 15 சதவீதம் எடுப்பது என்பது தேவையற்றது, பொருத்தமற்றது. இன்றைக்கு அகில இந்திய ரீதியில் நுழைவுத் தேர்வு, பட்டப் படிப்பிற்கென ஏற்கனவே அறிவித்துவிட்டு, தேதிகள் எல்லாம் அறிவித்துவிட்டு, காலாவதிகூட முடிந்து விட்டது என்று சொல்கிறார்கள். உரிய நேரத்தை, கால அவகாசத்தைக் கொடுக்காத காரணத்தால், தமிழ்நாட்டு மாணவர்கள் மட்டுமல்ல, வேறு பல மாநிலங்களிலிருந்துகூட மாணவர்கள் மனு போடமுடியாமல் என்னிடத்தில் வந்த வர்களுக்கு எல்லாம் சமாதானம் சொல்லி மைய அரசிற்குக் கடிதம்கூட எழுதி இருக்கிறோம். இந்த அவையின் சார்பாகவே நான் மைய அரசைக் கேட்டுக்கொள்கிறேன். எடுத்துக்கொள் வதை ஏற்றுக்கொள்வதாகக் கருதத் தேவையில்லை. ஆனால் சட்டம் இருக்கிறவரை எடுத்துக்கொள்ளத்தான் போகி றார்கள். ஆனால் பட்டப் படிப்பு நுழைவுத் தேர்வுக்காக வைத்திருக்கின்ற நாளை, இன்னும் கொஞ்சம் தள்ளிக் கொடுக்க வேண்டும். மற்றையவர்களும் மனு போடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று நாங்கள் கடிதம் எழுதி இருக்கிறோம் மத்திய அரசாங்கத்திற்கு என்பதை இந்த நேரத்தில் தெரிவித் துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

கொள்கை ரீதியாக, திட்டவட்டமாக மத்திய அரசு 15 சத வீதம் எம்.பி.பி.எஸ். படிப்பிலும், 25 சதவீதம் மேல் பட்டப் படிப்பிலும் எடுத்துக் கொள்வதை எதிர்க்கின்றோம். அது தேவையற்ற ஒன்று, நாட்டில் குழப்பத்தை விளைவிக்கக்கூடிய ஒன்று, அது முறையற்றது என்று மத்திய அரசுக்கு வலியுறுத்து கிறோம். நடக்க இருக்கின்ற சுகாதார நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்தக் கருத்தை நான் மீண்டும் தமிழக

[திரு. ப. உ. சண்முகம்] [1987 நவம்பர் 13

அரசின் சார்பில் வலியுறுத்துவேன் என்பதையும் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவக் கல்லூரிகளில் இருக்கின்ற
குறைபாடுகளையெல்லாம் போக்க வேண்டும் என்று மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசும்போது விளக்கமாகச்
சொன்னார்கள். அவர்கள் பேசும்போது கோவையிலே நடை
பெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றியும், நீதிமன்றம் அளித்திருக்
கின்ற ஒரு தீர்ப்பைப் பற்றியும் சொன்னார்கள்.

ஏழு ஆண்டுக்காலம் மயக்கமாக இருக்கிற ஒரு சிறுவனைப்
பற்றி குறிப்பிட்டார்கள். அந்த சிறுவனுக்கும், அந்த குடும்பத்
திற்கும் அரசின்சார்பில் என்னுடைய அனுதாபத்தைத்தெரிவித்துக்
கொள்கிறேன். இப்படி நடந்துவிட்டதற்காக வருத்தப்படுகிறேன்.
அவர் பயிற்சி பெற்ற மயக்குநர் இல்லை, பயிற்சி பெறாத
மயக்குநரை நீங்கள் வைத்தீர்கள் என்று குற்றச்சாட்டு சொல்வது
எந்த அளவிற்குப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குப்
புரியவில்லை. நான் விசாரித்ததில் அவர்தான் தொடர்ந்து 17
ஆண்டுக்காலம் மயக்க மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்
என்றும், வேறு யாருக்கும் இந்த துர்ப்பாக்கியமான சம்பவம்
நிகழவில்லை, அதே ஆள்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்
என்றும் செய்தியைக் கேட்ட பிறகு நான் செயலாளரிடம்
சொல்லி எதற்கும் அவரை அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றச்
சொல்லுங்கள், தொடர்ந்து அவரே கொடுக்க வேண்டாம், நிறுத்
துங்கள் என்று சொன்னேன். ஆனால் ஏழு ஆண்டுக்காலம் அந்த
மருத்துவ மனையில் நடைபெற்ற அறுவை சிகிச்சைக்கு எல்லாம்
அதே அதிகாரிதான் மயக்க மருந்து கொடுத்து வந்திருக்கிறார்கள்.
நல்ல வேளையாக யாருக்கும் அந்த விபத்து ஏற்படவில்லை.
இருப்பினும் எச்சரிக்கையாக இருக்க நடவடிக்கை எடுத்திருக்
கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தனியார் மருத்துவக் கல்லூரிகளைப் பற்றிக்கூட
இங்கே பேசப்பட்டது. மசோதாவிற்கும் இதற்கும் சம்பந்தம்
இல்லை என்றாலும் கூட பேசிவிட்டதற்காக நான் பதில் சொல்ல
வேண்டியிருக்கிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எப்படிப்
பணம் வாங்கிக்கொண்டு சேர்க்கலாம் என்று ஜனதா கட்சி உறுப்
பினர் மிகவும் கோபமாகக் கேட்டார். 2½ லட்சம் ரூபாய் வாங்கு
கிறார்களே, இப்படி வாங்கலாமா என்று கேட்டார். அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டப்பேரவை
உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பேசும்போது கர்நாடகத்தில்
வாங்குகிறார்களே என்று கேட்டதற்கு, நீ, அங்கே போய்
கேட்டுக்கொள், நான் இங்கே கேட்கிறேன் என்று சொன்னார்.
திருவாளர் சண்முகம் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது
சமாதானம் ஒன்றுதான். வருத்தப்படத் தேவையில்லை. ஜனதா
கட்சி உறுப்பினர் ஒருவேளை தமது கட்சி ஆளுகின்ற மாநிலத்
திற்குப் போகின்ற பணம் போகாமல் நின்றுவிட்டதே என்று
வருத்தப்படுகிறாரோ என்னவோ அது தெரியாது. அந்தப் பணம்



1987 நவம்பர் 13] [திரு. ப. உ. சண்முகம்]

இங்கேயே இருப்பதற்கு அவர் மகிழ்ச்சி அடைய வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தனியார் கல்லூரிகளை
ஆரம்பிக்காமல் இருந்திருந்தால் இவ்வளவு பேர்களும் இந்தப்
பணத்தை எடுத்துக் கொண்டு போய் கர்நாடகத்திலே கொடுத்து
விட்டு சேர்ந்திருப்பார்கள். சேராமல் இருக்கப் போவதில்லை.
ஆனால் இப்படி தனியார் மருத்துவக் கல்லூரிகளினால் நமக்கு
என்ன லாபம், அரசுக்கு என்ன லாபம், பொது மக்களுக்கு
என்ன லாபம் என்று கேட்பார்களானால், கோவையிலே இருக்
கின்ற கல்லூரியிலும், சென்னையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற
இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியிலும் 35 இடம், 35 இடம்
என்று அரசாங்கமே ஒதுக்குகிறது. அதற்கு கேப்பிடேஷன் ஃபீஸ்
வாங்கக்கூடாது என்று சொல்லி உத்திரவு போட்டு அவர்கள்
வாங்குவதில்லை அந்த இடங்களைப் பொறுத்தமட்டில். அண்ணா
மலைப் பல்கலைக் கழகத்திற்கு இந்த 35 இடம் ஒதுக்குவதில்
சங்கடம் ஏற்பட்டுள்ளதற்குக் காரணம், அவர்கள் உச்ச நீதி
மன்றத்திற்குச் சென்று தடை வாங்கியிருக்கிற காரணத்தால்,
நாம் 35 மாணவர்களை அனுப்ப இயலவில்லை. அதையும்
நாம் எதிர்த்து வழக்கு நடத்திக் கொண்டிருக்கிறோம். விரைவிலே
அதற்கு முடிவு தெரியும் என்று கருதுகிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ரமணி பேசும்போது இன்
னொரு கருத்தைத் தெரிவித்தார்கள். பாரதியார் பல்கலைக்
கழகத்தில் செய்து இருக்கின்ற ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.
அங்கே 25 மாணவர்களை அதிகமாகச் சேர்த்திருக்கிறார்களே
என்று சொன்னார்கள். இதுகுறித்து நான் ஆச்சரியப்படுகிறேன்.
அரசாங்கத்திற்குத் தெரியாமல் பல்கலைக் கழகத்தில் இருக்கின்ற
துணை வேந்தர் எப்படிச் சேர்த்தார், அனுமதித்தார் என்று
எனக்குத் தெரியவில்லை. நான் அவருக்குக் கொடுக்கின்ற
உத்திரவாதம், இதைப்பற்றி நிச்சயமாக பல்கலைக் கழகத்தி
லிருந்து விளக்கம் கேட்போம், மேற்கொண்டு அரசு நடவடிக்கை
எடுக்கும். அரசினுடைய அனுமதி இல்லாமல் இப்படிச் செய்
திருப்பது முறையல்ல என்பதுதான் இந்த அரசினுடைய அழுத்த
மான கருத்தாகும். மாறுபட்ட கருத்து கிடையாது. நிச்சய
மாக விசாரிப்போம் என்று இந்த நேரத்தில் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட ஒருவர் இறந்து
விட்டதாகச் சொன்னார். செங்கல்பட்டு மருத்துவமனையில்
மயக்கம் கொடுப்பவர் இல்லாத காரணத்தால் இரண்டு மாத
காலம் அறுவை சிகிச்சை நடைபெறாமல் இருந்தது என்று
சொன்னார்கள். அதைப்பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமும்
கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அப்போது அதைப்பற்றி
விளக்கம் சொல்ல இருக்கிறேன். அப்படி குடும்பக் கட்டுப்பாடு
அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் இறந்ததாக இப்போது
தான் கேள்விப்படுகிறேன். விசாரிக்கச் சொல்கிறேன். அப்படித்

தவறு நடந்திருக்குமேயானால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
அதற்குக் காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள்
என்று உறுதி அளிக்கிறேன். நிச்சயமாக நம்பலாம் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வேணுகோபால் அவர்கள் பேசும்போது, 'ஸ்கேன்'-ஐப்
பற்றிக் குறிப்பிட்டார்கள். 'ஃபுல் பாடி ஸ்கேன்' மருத்துவ
மனையில் இல்லை என்று சொன்னார்கள். தலை வரையில்
பார்ப்பதுதான் பொது மருத்துவமனையில் இப்போது இருக்
கிறது. முழு உடம்பையும் பார்க்கின்ற ஸ்கேன் ஒன்று வந்தது.
அதை முதலமைச்சர் அவர்கள் மதுரை ராஜாஜி மருத்துவ
மனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஒன்று வாங்க
இருக்கிறோம். இன்னும் 3 மாத காலத்திற்குள்ளாக அதை
அரசாங்க மருத்துவமனையில் நிறுவ இருக்கிறோம். எந்த
மருத்துவமனையில் நிறுவுவது என்பதைப் பற்றி முதலமைச்சர்
அவர்களுக்குக் கோப்பு அனுப்பி இருக்கிறோம். அவர் ஒரு
ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று. விரைவிலே அது நிறுவப்
படும். அப்போது அது ஏழைகளுக்கு எளிதாகக் கிடைக்கும்
என்ற உத்திரவாதத்தை, திரு. வேணுகோபால் அவர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, இயந்திரங்கள் எல்லாம் பழுது
பட்டுப் போகின்றன என்று சொன்னார்கள். அதற்கும், பொது
விவாதத்தின்போது பதிலளிக்க வேண்டியதாகி விட்டது என்றா
லும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது, அப்படிப் பழுது
படுகின்ற இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்காக இரண்டு
பொறியியல் வல்லுநர்களுடைய குழு அமைக்கவேண்டும் என்று
முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். விரை
விலே அவர்களுக்குப் பயிற்சியைக் கொடுத்து, அந்த முயற்சியில்
ஈடுபடுவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, நல்லதொரு காரியத்தில் ஈடுபட்டு இந்த மசோ
தாவை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். தமிழ் நாட்டு வரலாற்
றில் இந்த மசோதா மூலம் இடம் பெறுகிறார் என்று நான்
சொல்லவில்லை. தமிழ்நாட்டு வரலாற்றில் அழிக்க முடியாத
ஒரு இடத்தைப் பெற்றிருக்கின்றவர் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் ஆவார்கள். (குறுக்கீடு) நான் முடித்ததற்குப் பிறகு
பேசுங்கள். இந்த மசோதாவினால், நான் சொல்லவில்லை,
அமைச்சராக ஆக்கிவிட்டார் என்று வெளியிலே எழுதுவார்கள்,
பேசுவார்கள். சண்முகத்தை அமைச்சராக ஆக்கிவிட்டார்,
ஆகையால் சண்முகம் பேசுகிறான் என்று சொல்வார்கள். யார்
எழுதுவார்கள் என்று எனக்குத் தெரியும், யார் பேசுவார்கள்
என்று எனக்குத் தெரியும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு நான்
சொல்லுகின்ற பதில், என்னைப் பற்றி என்ன கொள்கையை
அவர்கள் வைத்து என்னிடத்தில் பேசினார்கள் என்று அவர்களை
திரும்பப் பார்த்துக் கொள்ளவேண்டியதுதான்.





நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்து முதலமைச்சர் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த மசோதாவின் மூலம் தமிழ்நாட்டு வரலாற்றில் இடம் பெறவில்லை. இது நாங்கள் அவருக்காகக் கொடுக்கின்ற, வைக்கின்ற ஒரு காணிக்கையே தவிர, அவருக்கு ஏதோ இதனால் மணிமகுடம் சூட்டிக் கொண்டதாகக் கருதிவிடத் தேவையில்லை. நான் கேட்கிறேன் — இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, உலகமே போற்றிப் புகழத்தக்க சத்துணவு கொடுத்ததை விடவா சிறந்ததொரு காரியம் வரலாற்றில் சேர்ப்பதற்கு வேறு இருக்கிறது? மகத்தான காரியத்தை சாதித்த புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர், சத்துணவின் மூலமும் நிச்சயம் இந்திய வரலாற்றில், தமிழகத்தின் வரலாற்றில் அழிக்கமுடியாத இடத்தைப் பெற்றிருக்கிறது. ஏழை மாணவர்களுக்கு இலவசச் சீருடையும், ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்களையும் கொடுத்து, அவர்களைப் படிக்க வைக்கும் பெருமை அவருக்குத்தான் உண்டு.

அரசியலில் அரும்பாடுபட்டு, உழைத்துத் தேய்ந்து போனவர்கள், வரலாற்றிலும் அவர்கள் பெயர்— மக்களுக்கு மறதி அதிகம் இருக்கிற காரணத்தால்— மறந்து போய்விடக் கூடாதே என்பதற்காக நிரந்தரமாக சில பெயர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக, மாவட்டங்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் அப்பெயர்களைச் சூட்டிய அவர் வரலாற்றில் இடம் பெறுவார்.

இதற்காகப் பல்கலைக்கழகம் மூலம் இடம் பெறவேண்டிய அவசியத்தில் இல்லாதவர். இன்னமும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்த் தாய்க்குக் காணிக்கை அளிப்பதுபோல், தமிழுக்கென்று தனித்து ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கினாரே, அது போதும், வரலாறு காலந்தோறும், தமிழ் உள்ளதோறும், அவரைப் பேசும், பாடும், பெண்களுக்கென்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கினாரே அது போதும், பெண் சமுதாயம் இருக்கின்ற வரையில் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை வாழ்த்திக் கொண்டு இருப்பார்கள்.

இவ்வளவும் செய்து முடித்த முதலமைச்சர் அவர்களுக்கு இந்தப் பல்கலைக் கழகத்தில் பெயரை வைப்பதன்மூலம், ஏதோ நாங்கள் புகழைத் தேடி வைத்துவிட்டோம் என்று கருதவேண்டாம். வேண்டுமென்றால் இன்று சிலர் அவரைத் தாக்கிப் பேசுவதற்கு நாங்கள் காரணமாக இருந்து விட்டோமே என்று வருத்தப்படுகிறோமே தவிர, இந்தப் பெயரை வைத்ததில் நாங்கள் பெருமைப்படுகிறோம். மகிழ்ச்சி அடைகிறோம். நாங்கள் மட்டுமல்ல, நாங்கள் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, தமிழ் மண்ணே இன்றைய தினம் இந்தப் பெயரை வைப்பதற்காகப் பூரிக்கிறது, பாராட்டுகிறது, வாழ்த்துகிறது

என்று சொல்லி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தலைவர் அவர்களே, பெருமைக்குரிய இந்தச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர் களையும் நான் வேண்டிக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1–10.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. ரகுமான்கான் அவர்கள் தம்முடைய இருக்கையில் இல்லாததால் அவருடைய தீர்மானம் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

பேரவை முன்னுள்ள கேள்வி : " 1987 ஆம் ஆண்டு தமிழ் நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1987) நிறைவேற்றப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:





" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ".

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு இயக்கூர்திகள் வகைப்படுத்துகின்ற சட்டத்தை ஆய்வு செய்கின்ற இந்த நேரத்தில், நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில எண்ணங்களை இங்கே தெரிவித்திட விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் 1939 ஆம் ஆண்டு மத்திய சட்டத்திலுள்ள நான்காவது பிரிவு, நான்காவது-ஏ பிரிவிலே அடங்கிய 68-ஆம் பிரிவு, 68-பி பிரிவு, 68-சி பிரிவு, 68-டி பிரிவு ஆகியவற்றிலுள்ள கருத்துகளுக்கு மாறுபட்டதாக சில கருத்துக்களை உள்ள டக்கிய இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் சில விவரங் களை மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த சட்ட ஷரத்துக்களைப் படிக்கின்றபோது, இந்தச் சட்டத்தின் மூலமாக சிறிய பேருந்து உரிமையாளர் களுக்கும், புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கும் ஊக்கம் அளிக்கின்ற வகையிலும், பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலும் இந்தச் சட்டம் அமைக்கப்பட்டதாக காரண நோக் கத்திலே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை இப்போது கொண்டு வருவதற்கான நோக்கம்பற்றி காரண விளக்கத்தைப் படித்துப் பார்த்தால், சிவில் அப்பீல் 1752/86 என்கின்ற வழக்கில், மதுரை—குமுளி என்கின்ற பேருந்து வழித் தடத்தில் தனியார் யாரும் அனுமதிச் சீட்டு வாங்க இயலாது, முடியாது என்று இந்திய நாட்டினுடைய உச்ச நீதி மன்றம் தன்னுடைய தீர்ப்பில் தெரிவித்துவிட்ட காரணத்தினாலும், சிறிய பேருந்து உரிமையாளர்களுக்கும், புதிதாக இந்தத் தொழிலை நடத்துபவர்களுக்கும் தொழில் பாதுகாப்பு தருகின்ற அடிப் படையில் இந்தச் சட்டத்தை உருவாக்கித் தந்திருப்பதாக, தமிழ் நாடு அரசு காரண காரிய விளக்கத்தின் மூலமாக தெரிவிக்கிறது.

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புவது 5 பேருந்துகளை உடையவர்கள், 5 பேருந்துகளுக்குக் குறைவாக உடையவர்கள் ' ஸ்மால் ஆப்பரேட்டர்ஸ் ' என்கின்ற சிறிய பேருந்து உடைமையாளர்கள் என்கின்ற இலக்கணத்தின் கீழே வருகிறார்கள். அதேபோன்று புதிதாகத் தொழில் தொடங்கு பவர்கள் வருகிறார்கள், இப்போது தமிழ் நாட்டிலேயுள்ள அனைத்துப் பேருந்து உரிமையாளர்களும் தங்களிடம் உள்ள பேருந்துகளையெல்லாம் அவர்களுடைய குடும்பத்தில் அல்லது

*12–11–1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு 5, 5 பேருந்துகளாக எழுதி வைத்து எல்லோருமே இந்தச் சிறிய பேருந்து உடைமையாளர்கள் என்கின்ற இலக்கணத்தின் கீழே வரவேண்டும் என்கின்ற நடவடிக்கை இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த அரசு சிறிய பேருந்து உடைமையாளர்களுக்கு உதவி செய்யும் என்று எழுத்து அளவில் தெரிவித்தாலும் நடைமுறையிலே அது வழக்கம்போல் இந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் இந்த உதவி கிட்டும் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, புதிதாகத் தொழிலைத் தொடங்குபவர்களுக்கு உதவி செய்யப்படும் அல்லது புதிய வழித்தடங்களுக்கான அனுமதி சீட்டு வழங்கப்படும் என்று தெரிவிக்கிறது இந்தச சட்டம். புதிதாக யார் வழித் தடங்களுக்கு அனுமதிச் சீட்டு கோருவார்கள் ? ஏற்கனவே பேருந்து உடைமையாளர்களாக உள்ளவர்கள், புதிதாக அவர்களிலேயே ஒருவரை அழைத்து இந்தப் பேருந்துத் தடத்திற்கான அனுமதியைப் பெறுவதற்குத் தான் முயற்சிப்பார்கள். எனவே ஒட்டுமொத்தமாக இந்தச் சட்டத்தின் மூலமாகப் பயன்பெறப் போகிறவர்கள் யார் என்றால் ஏற்கெனவே இந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிற பேருந்து உரிமையாளர்களே அல்லாமல் வேறு அல்ல. ஆனால் மக்களை ஏமாற்றுவதற்காக இது சிறிய பேருந்து உரிமையாளர்களுக்கும், புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கும் உற்சாகம் ஊட்டி, பாதுகாக்கத் தக்க அடிப்படையில் தேசியமயமாக்கும் கொள்கைக்கு அதாவது நாட்டுடமையாக்கும் கொள்கைக்கு மாறாகக்கூட அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்கிற வகையில் வெளிப்படையாக ஒரு கருத்து தெரிந்தாலும் உண்மையிலேயே இது தொடர்ந்து ஏற்கனவே இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் லாபமாக முடியும் என்பதை நான் வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாட்டுடமையாக்குகிற திட்டத்தை எந்த அளவுக்கு இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது ? பேரறிஞர் அண்ணா அவர்கள் '' சயன்டிபிக் சோஷலிசம் '' அறிவியல் தேசிய உடமை என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் அவர் சொன்ன தேசிய உடமை என்ற கொள்கையை இந்த அரசு எந்த அளவுக்குச் செயல்படுத்துகிறது என்பதை அருள்கூர்ந்து இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் கட்சி மாச்சரியங்களை மறந்து எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். அண்ணா அவர்கள் நாட்டுடமைக் கொள்கை என்பது திராவிட இயக்கங்களின் கொள்கை என்று எடுத்துக் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே என்ன சொல்லப்படுகிறது ? மதுரையிலிருந்து குமுளி வரையான வழித்தடம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வழித்தடம். அதைப் போலவே டிராப்ட் ஸ்கீம் அப்ருவ்டு ஸ்கீம்—வரைவுத் திட்டம்



ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம் அறிவிக்கை வழித் தடங்கள் ஆகிய திட்டங்களுக்குட்பட்ட வழித் தடங்களில் தனியார் யாரும் அனுமதி பெற முடியாது என்ற கொள்கையை இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு சொல்லியிருக்கிறது. அதன் காரணமாக மதுரையிலிருந்து குமுளி வரையான வழித்தடத்தில் தனியார் யாரும் அனுமதி சீட்டு பெறமுடியாது என்று—நம்முடைய நாட்டுடமைக் கொள்கையை—டைரெக்டிவ் பிரின்சிபிள்ஸ் என்று இந்திய அரசியல் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு தீர்ப்பு அளித்திருக்கிறது இந்திய உச்ச நீதிமன்றம். நாட்டுடமைக் கொள்கையை ஏற்றுக்கொண்ட தமிழகத்தில்தான் நாம் இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதாவது இந்திய உச்ச நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாட்டுடமையாக்கும் திட்டத்திற்கு விரோதமாகத் தனி நபர்கள் '' நோட்டிபைடு ஏரியா '' என்று சொல்லக்கூடிய—அறிவிக்கப்பட்ட வழித்தடங்களில் விண்ணப்பித்து, வழித் தடங்களுக்கான அனுமதியைப் பெறலாம் என்ற ஒரு சட்டத்தை நாம் இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றால் இந்த அரசு நாட்டுடமையாக்குகிற கொள்கைக்கு எந்த அளவுக்கு விரோதமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது? காரண காரிய விளக்கத்தை நான் பார்த்தேன். இதற்குச் சொல்லப்படுகிற காரணம் என்ன? சிறிய பேருந்து உடமையாளர்களுக்கு வழங்கப்படுகிற அனுமதிகள் இந்திய உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் காரணமாக நிறுத்தி வைக்கப்படுமானால் அதன் காரணமாக இந்த வழித்தடங்களில் பொது மக்களும், பயணிகளும் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் பயணம் செய்ய முடியாத அவதிக்குள்ளாவார்கள். இன்னும் ஒரு காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான 13 போக்குவரத்துக் கழகங்களால் அந்தப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க முடியாது. ஆக இந்த இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

நான் இந்த அரசைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டு இந்திய உச்ச நீதி மன்றம், தமிழ்நாடு ஏற்கெனவே பின்பற்றி வந்த நாட்டுடமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டு, தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்புக்குப் பின்னால், 3 ஆண்டுகளுக்குப் பின்னால், இன்றைக்குத் தனியாருக்குச் சலுகை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நாட்டுடமைத் திட்டத்திற்கு ஆதரவான தீர்ப்பையே உடைக்கும் அடிப்படையில் ஒரு சட்டத்தை இங்கே ஆய்வு செய்கிறோம் என்றால் இந்த அரசாங்கம் அண்ணா அவர்கள் எடுத்துத் தெரிவித்த நாட்டுடமைக் கொள்கையிலிருந்து எந்த அளவுக்கு வேறுபட்டுச் செல்லுகிறது என்பதை நாட்டில் உள்ள அனைவரும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டுகிறேன்.

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1987 நவம்பர் 13

(பிற்பகல் 1-20)

அதுமட்டுமல்ல 13 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. இவற்றின் மூலமாக ஏன் அரசாங்கம் இந்தப் பயணிகளுக்கு பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க முடியாது? நான் இன்னும் விளக்கமாகக் கேட்க விரும்புகிறேன். இப்படி பாதிக்கப்பட்ட வழித்தடங்கள் எவ்வளவு? இப்படி பாதிக்கப்பட்ட வழித்தடங்களால் எவ்வளவு பேருந்துகள் அரசாங்கத்திற்குத் தேவைப்படுகின்றன? அப்படித் தேவைப்படுகிற பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு? அப்படித் தேவைப்படுகிற பேருந்துகளை லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கின்ற 13 போக்குவரத்துக் கழகங்களால் ஈடுகட்ட முடியாதா? இவை எல்லாம் நாட்டு மக்களுக்குத் தெரியாது என்று கருதி, மக்கள் அவதிக்குள்ளாகிவிடுவார்கள். எனவே, தனியாருக்கு மீண்டும் தருகிறோம் என்று சொல்லுவது பொருத்தமான காரண காரிய விளக்கமல்ல என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய தேசியமயக் கொள்கையில் தமிழ்நாடு அரசு புதிய விளக்கத்தைச் சொல்லியிருக்கிறது. End to End---ஆரம்பத்திலேயிருந்து இறுதி வரையுள்ள வழித்தடங்கள் மட்டும் நாட்டுடமையாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் கொடுத்த எடுத்துக்காட்டு மதுரை—குமுளி. உங்கள் இலக்கணப்படி எதை நாட்டுடமையாக்கலாம் என்று கருதுகிறீர்கள்? உங்களுடைய விளக்கப்படி மதுரை-குமுளியை ஒட்டுமொத்தமாக நாட்டுடமையாக்கலாம் என்று கருதுகிறீர்கள். இன்னுமொரு சிறு பேருந்து உடமையாளர் மதுரையிலிருந்து குமுளிக்குச் செல்லுவதற்கு முன்னால், இரண்டு கிலோ மீட்டருக்கு முன்னால் இருக்கக் கூடிய லோயர் Camp க்கு மதுரையிலிருந்து லோயர் Camp க்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்தால், சட்டப்படி உங்களால் அதை மறுக்க இயலாது. இப்படிப் பல்வேறு பேருந்துகள், சிறிய பேருந்து உடமையாளர்கள் என்ற பெயரால் அனுமதி கேட்டு விண்ணப்பித்து அவர்கள் எல்லாம் நாட்டுடமையாக்கப்பட்ட மதுரை-குமுளி வழித்தடத்தில் விட்டு போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக விடப்படுகிற பேருந்துகளின் வருவாயைக் குறைப்பதற்காக மதுரையிலிருந்து லோயர் Camp வழித்தடத்துக்கு அனுமதி வாங்கி, புதியதாகத் தொழில் தொடங்குகிறோம் என்ற அடிப்படையில் சிறு பேருந்து உரிமையாளர் என்ற சலுகையின் அடிப்படையில் அனுமதி வாங்கி பேருந்துகளை விடுவார்களே



சென்னை-600 008 13653

1987 நவம்பர் 13] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

யானால் நஷ்டம் யாருக்கு என்பதை இந்த அரசாங்கம் யோசித்துப் பார்த்ததா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். நஷ்டம் யாருக்கு என்பதைவிட நாட்டுடமைக் கொள்கைக்கு எந்த அளவிற்கு இந்த அரசு ஆதரவாக நடந்துள்ளது என்பதை எண்ணி பார்க்க வேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலிருந்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படப் போவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அண்ணாவின் வழியில் ஆட்சி நடத்துகிறோம் என்று சொன்னார்கள். நான் இந்த ஆட்சியாளர்களைக் கேட்க விரும்புகிறேன். அண்ணாவின் நாட்டுடமைக் கொள்கையைத் தோற்கடிக்கக்கூடிய இந்தச் சட்டம் எப்படி அண்ணாவின் எண்ணங்களுக்கு ஒப்பான ஒன்று என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருமுறை இந்தச் சட்டத்தை முதலிலேயிருந்து கடைசி வரை பார்த்த நேரத்தில், அதிலே சொல்லப்பட்டுள்ள விவரங்களை ஆராய்ந்த நேரத்தில் இது எங்கேயோ, எப்போதோ கேட்ட குரல் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. அதற்கு இப்போது வடிவம் கொடுக்கிறார்கள். காரண, காரிய விளக்கத்தைப் படித்துப் பார்த்தேன். நீங்கள் சொல்லுகிற காரணம், கறை படிந்த காரணம் என்பதையும், உண்மைகள் ஊமையாக்கப்பட்டிருக்கின்றன இந்தச் சட்டத்தின் மூலமாக என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே இந்தச் சட்டம் நாட்டுடமைக் கொள்கைக்கு விரோதமான சட்டம்; இந்த அரசு நாட்டுடமைக் கொள்கையை அமுல்படுத்துவதற்குத் தயாராக இல்லாத ஓர் அரசு, அண்ணாவின் கொள்கைக்கு விரோதமான அரசு என்று தெரிவித்து விடை பெறுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்காக கொடுக்கப்பட்ட Note on Policy என்ற டிரான்ஸ்போர்ட் இலாக்காவினுடைய நோட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் In 1967 the Government decided that all routes of 75 miles (120 kms.) and above, both ordinary and express Services இதை நேஷனலைஸ் பண்ணுவதற்காக அன்றே முடிவு செய்யப்பட்டது. ஏறத்தாழ ஒரு இருபதாண்டுக் காலம் காங்கிரஸ் ஆட்சி இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த பிறகு காங்கிரஸ் அல்லாத ஒரு ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்டதைத்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 13

தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட ஒரு முற்போக்கான நடவடிக்கை போக்குவரத்துத் துறையை ஸ்டேஜ் பை ஸ்டேஜ் தேசவுடமையாக்குவது என்பது. இந்த நாடு அதை வரவேற்றது. இரண்டாண்டுகளுக்கு முன்னால் சுப்ரீம் கோர்ட்டில் அளித்த தீர்ப்பை (Undermine) செய்கிற வகையில் எந்த முறையில் அமுல்படுத்தாமல் இருக்க வேண்டுமோ அந்த நோக்கத்துடன் ஒரு சட்டத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் இங்கே கொண்டு வந்தபோது தேசவுடமையாக்குவது சம்பந்தமான கருத்துக்களை இந்த அவை விரிவாக விவாதித்தது. இன்று அந்தக் கொள்கையிலிருந்து மாறி இந்த அரசு போகிறதோ என்ற சந்தேகம் இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் ஏற்படுகிறது. இந்த சட்ட திருத்தத்தைப் பொறுத்தளவில் காரண காரிய விளக்கத்திலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. "The policy of the Government is to nationalise the bus services operated by the private operators on end to end route and to allow them to operate on sectors of the route.'

அதாவது 75 கிலோ மீட்டருக்கு மேலே நீளமுள்ள ரூட்டுகளிலே இன்றைக்குப் போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை ஆப்பரேட் பண்ணும் நேரத்தில், இந்தக் கொள்கைப்படி தனியார்களுக்கு இதிலே குறிப்பிட்டுள்ளதுபோல, அதாவது மதுரையிலிருந்து குமுளி வரை என்ட் டு என்ட் என்ற முறையிலே அரசு பேருந்துகளை விட்டுவிட்டு, மதுரை-பெரியார் டாம், மதுரை-கம்பம், மதுரை-தேனி என்ற முறையில் தனியார்களை பேருந்துகள் விட அனுமதித்தால், அது கழகப் பேருந்துகள் நஷ்டத்தில் ஓடும் நிலைமையை ஏற்படுத்தும் என்பது எங்களுடைய கருத்து. உதாரணத்திற்கு சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி என்ரூட்டுகளிலே சின்னச் சின்ன வழித் தடங்கள் என்ற முறையிலே பேருந்துகளை விட அனுமதித்தால், நடைமுறையில் என்ன ஏற்படுகிறது என்றால் ஆர்.டி.ஓ. ஆபீசில் தனியார் பஸ் உரிமையாளர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, கார்ப்பரேஷன் பேருந்துகளுக்கு முன்னால் தங்களுடைய பேருந்துகளை ஓட்டுகிறார்கள். நானே அதனைக் கண்டேன். பல பேருந்து நிலையங்களிலே என் கண்ணாலே பார்த்திருக்கிறேன். கழகப் பேருந்துகளுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தி, அவர்களுடைய பேருந்து கிளம்ப வேண்டிய நேரம் கழிந்ததற்குப் பிறகும்கூட, அந்த வண்டிகளில் சாக்கு மூட்டைகளை அடுக்குவது போல பிரயாணிகளை அடுக்கிக் கொண்டு செல்லும் நிலைமை இருக்கிறது.



1987 நவம்பர் 13] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இன்றைக்குத் தமிழக அரசினுடைய போக்குவரத்துக் கழகங்கள் ஓட்டக்கூடிய பேருந்துகளை மக்கள் விரும்புகிறார்கள். காரணம், அவை ஓரளவுக்கு சுமாரான வசதிகளைச் செய்து கொடுக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இப்போது அதிலிருந்தும்கூட கீழே போகும் நிலைமை வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருவேளை இந்தச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்றபடி அதிலேகூட கொள்கை மாறுபாடு ஏற்பட்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. போக்குவரத்து கழகங்களின் பேருந்துகளை இலாபத்தில் ஓட்டுவதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய நேரத்தில், அதை நஷ்டத்தில் ஓட்டக்கூடிய நிலையை உருவாக்கி, போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் ஓட்டுகின்றன என்று சொல்லி, தனியாருக்கு விட்டுவிடக்கூடிய நிலைக்கு இந்த அரசு செல்கிறதோ என்ற ஐயப்பாடு எங்களுக்கு ஏற்படுகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்பு மின் உற்பத்தி பற்றி விவாதிக்கும்போது, மின் உற்பத்தி செய்வதைத் தனியார்களுக்கு விட்டு விடலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் பொதுத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை இந்த அரசு எதிர்க்கிறது அல்லது அந்த நோக்கத்தை இந்த அரசு எந்த அளவுக்குப் பலகீனப்படுத்தி தனியார் துறைக்குப் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு செல்கிறது என்ற ஐயப்பாட்டை அன்றைக்கே எழுப்பினோம். இன்றைக்கு இந்த சட்டத் திருத்தத்தின் மூலம் அந்தச் சந்தேகம் மேலும் வளர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது). சட்ட முன்வடிவின் மீது பேசும்போது அது சம்பந்தமான விவரங்களைச் சொல்ல அனுமதிக்கப்பட வேண்டும். இது கொள்கைப் பிரச்சினை. எப்படி அமல்படுத்தப்படுவது என்று சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லுங்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இதன் காரணமாக ஏற்படுகிற நிலைமையைத்தான் சொல்கிறேன். அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் சிறிய ரப்பர் உற்பத்தியாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுடைய பொருள்களை அங்கேயிருந்து கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களுக்கு அனுப்புவதற்கு தூத்துக்குடி துறைமுகத்திற்குச் செல்ல வேண்டும்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அவையின் அனுமதியோடு, அவையின் அலுவல நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்** : அப்படி அனுப்பப்படவேண்டும். நான் குலசேகரத்தில் இருந்து தூத்துக்குடிக்கு நேரடியாக திருச்செந்தூர் வழியாக பேருந்துவிட வேண்டும் என்று கேட்டேன். நேசமணி போக்குவரத்துக் கழகத்தினுடைய நிர்வாகம் அதற்கு ஒத்துக் கொண்டார்கள். அந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் என்ன சொல்கிறதென்றால் அது விடமுடியாது என்று. அதை விட்டால் திருநெல்வேலி செக்டாரில் உள்ள தனியார் முதலாளிகளுக்குப் பாதிப்பு ஏற்படும். அவர்கள் மந்திரிக்குப் புகார்கள் கொடுப்பார்கள். ஆகவே முடியாது. நான் அமைச்சர் அவர்களுக்கு நேரடியாக எழுதினேன். ஒரு வேளை என்னுடைய தொகுதியிலே பேருந்து விடுவதாக இருந்தால் அதை விடவேண்டும் என்பதற்கு முடிவு எடுக்கவேண்டும். அதைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. ஆனால் என்ன காரணம் சொல்லப்படுகிறது....

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பில்லிலே சம்பந்தம் இல்லையானாலும் இதிலே நான் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டால் பேருந்துகள் விடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக உங்களுடைய பகுதியினைப் பொறுத்தவரையில், அங்கே தனியார் போக்குவரத்து கிடையாது. கே. டி. சி. நிர்வாகம் நிச்சயமாக அப்படிச் சொல்வதற்கு வாய்ப்பே கிடையாது. தனியார் துறையிலேயிருந்து யார் என்னிடம் புகார் செய்தாலும், பொது மக்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்ய வேண்டும் என்று செய்துக் கொண்டிருக்கின்றோம். இதிலே ஏதோ அரசியல் நோக்கத்தோடோ அல்லது தனியாருக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடோ இந்தப் பேருந்து விட வேண்டாமென்று நிறுத்தி வைக்கப்படவோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த சங்கடங்கள் இருப்பதால்தான் இப்படிப்பட்ட ஒரு சட்டமேகூட கொண்டுவரவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக்கூட பின்னால் விளக்குகிறபோது சொல்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தில் நான் விவாதம் பண்ணப்போகவில்லை. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால் ஒரு வருட காலமாக இந்தக் கோரிக்கை அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. எனக்குச் சொல்லப்பட்ட காரணம் தனியார் போக்குவரத்துப் பிரிவுக்கு பாதிப்பு ஏற்படும் என்று புகார்கள் கொடுப்பார்கள் என்பதுதான் நடைமுறையிலே என்ன பார்க்கிறோம் என்றால், பல இடங்



களிலே தனியார் துறைகளுடைய பேருந்துகளை அரசுப் பேருந்துகளுக்கு முன்னாலே விட்டுவிடுகின்றார்கள். இப்படிப்பட்ட சட்டங்கள் இல்லாமல் இருந்தும்கூட, இன்றைக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய முறையில் போக்குவரத்து ஊழியர்களுக்கும் தனியார் துறை ஊழியர்களுக்கும் சண்டை ஏற்படுகின்ற நிலைகூட வந்திருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியும்.

நெல்லை மாவட்டத்திலே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஆகவே இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வருவது என்பது இன்றைக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களுடைய வளர்ச்சியைக் கடுமையாக பாதிப்பதற்கு காரணமாகும். நேஷனலைசேஷன் என்று சொல்லக்கூடிய நேரத்தில் இதை ஏற்றுக் கொள்கிறோம் என்றால், இன்றைக்கு தனியார் துறை போக்குவரத்து துறையில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்குச் சரியான ஊதியம் கொடுக்கவில்லை. அவர்கள் கொத்தடிமைகளைப் போல நடத்தப்படுகின்றார்கள். அதிலேயிருந்து அவர்களுக்கு விமோசனம் ஏற்படுகின்ற நிலையிலேதான் செயல்கள் இருக்க வேண்டும். இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்களை அரசு நடத்தக்கூடிய நேரத்தில், அவர்களுக்கு ஓரளவுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பில்லில் பேசுங்கள். ஊதியத்தைப் பற்றியும் பஸ் விடுவது பற்றியும் பேசினால் நேரம் ஆகிவிடும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்** : இன்றைக்கு ஊழியர்கள் விரும்புவது, இந்தப் பின்னணியிலே, அதாவது அவர்களைப் பொறுத்த அளவிலே, நாம் எந்த நோக்கத்தோடு இன்றைக்கு 'டிரக்ட்டிவ் பிரின்சிபல்ஸ் ஆப் கான்ஸ்ட்டியூஷன்' என்ற அடிப்படையிலே, எந்த நோக்கத்தோடு விஷயங்கள் இந்த நாட்டிலே உருவாக்கப்பட வேண்டும் என்று சொல்கிறோமோ அந்த நிலையிலே உருவாக்கப்பட வேண்டும். ஆனால் இந்த சட்டம் அதற்கு எதிரான முறையிலே, இன்றைக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களுடைய வளர்ச்சியை முடமாக்கக்கூடிய முறையிலே அமைகிறது. அதனால் ஆபத்து உண்டு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த நேரத்திலே இன்னொன்றையும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அதாவது இன்றைக்கு தனியார் போக்குவரத்தைப் பொறுத்த அளவிலே அவர்கள் அதிகமான ஓவர்லோட் ஏற்றுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்தச் சட்டங்களை நாம் உருவாக்கி, தனியார் துறை பேருந்துகளை ஓட்டுவதற்கான நிலையை உருவாக்குகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட பாதிப்புகள் மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்படும். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றைக்கு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலேகூட, அந்த முறையிலே உள்ள ஏற்பாடுகள் குறைந்து வருகிறது. விபத்து ஏற்பட்டால் தொழிலாளிகளைப்

பொறுத்தவரையில் என்ன செய்யப்படுகிறது என்றால் அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிறது. நீ காசை வாங்கிக்கொண்டு சென்றுவிடு என்று சொல்கிறார்கள். ஆகவே அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய முறையிலே உள்ள சட்டமாக இது அமைகிறது. இது பொதுத் துறையிலே அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற அந்த கொள்கையைக் கூட விட்டுவிடக் கூடிய அளவுக்கு அமைகிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நான் ஆட்சேபிக்கிறேன்.

*திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற இயக்கூர்திகள், தனிவகை முறைகள், சட்டமுன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலில் இந்தச் சட்டத்தினுடைய ஜனன நோக்கத்தைப் பார்த்தாலேயே ஆழமான சந்தேகமான உணர்வு ஏற்படுகிறது. சிவில் அப்பீலில் உச்ச நீதிமன்றம் பிரைவேட் ஆப்பரேட்டர்களுக்கு எதிராகத் தீர்ப்பளித்தது, மேற் கொண்டு அந்தத் தீர்ப்பால் பாதிக்கப்பட்டிருக்கிற பிரைவேட் ஆப்பரேட்டர்கள பேருந்துகளை ஓட்டாமல் நிறுத்திவிடலாம். அதனால் பொது மக்கள் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்கிற பரந்த எண்ணத்திலே இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலோட்டமாகப் பார்த்தால் ஆழ்ந்த அக்கறையையும், பரிவுணர்ச்சியையும் பொதுமக்கள் மீது கொண்டு இச்சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரியும். ஆனால் ‘ நெட் ரிசல்ட் ’ என்னவென்றால் கருணை பொதுமக்கள் மீது, அனுகூலமோ பிரைவேட் ஆப்பரேட்டர்களுக்கு. சட்டம் கொண்டு வருவதன் நோக்கமோ பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக. ஆனால் சட்டத்தின் அனுகூலம் போய் சேர்வதோ தனியார் பஸ் முதலாளிகளுக்கு, ஆக எவ்வளவு நயம்பட உரைக்கிற தேர்ச்சி இந்த அரசுக்கு இருக்கிறது என்பது புரிகிறது. சொல்வது பொது மக்களுக்காக என்று, ஆனால் அனுகூலத்தைத் தனியார் பஸ் முதலாளிகளுக்கு கொடுக்கிறீர்கள். இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் பஸ் விடுவதை நிறுத்திவிட்டால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளை விடலாம் அல்லவா ? அதற்கு ரொம்ப கஷ்டப்பட்டு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால்’ குறுகியகால அவகாசத்தில் பல பேருந்துகளை அதாவது அதிக எண்ணிக்கையில் பேருந்துகளை விட முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆக, அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தை ஒத்துக்கொள்கிறார்கள். இந்தத் தீர்ப்பின் எதிரொலியாக, தனியார் பஸ் முதலாளிகள் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பேருந்துகளை ஓட்டாமல் விட்டுவிட்டால் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளை விடலாம் என்பதை கொள்கை ரீதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படி விடலாம் என்றாலும் தங்கள் நோக்கத்திற்கு இடையூறாக இருப்பது இந்த கால அவகாசம்தான். ஒரு இடைக்கால ஏற்பாடாக இதனைக் கொண்டு வந்திருக்கிற நீங்கள், எந்த கால அவகாசத்திற்குள் தனியார் பஸ் விடுவதை நிறுத்தினால் அரசு பஸ்ஸை விட முடியும் என்பதையும் இங்கே சொல்ல வேண்டும். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பால் பாதிக்கப்பட்டிருக்கிற பஸ் ஆப்பரேட்டர்களைப் பாதுகாக்க அரசு தன்னுடைய அதிகாரத்தை இங்கே பயன்படுத்துகிறது. இதன்மூலம் பயன் பெறுவது பஸ் ஆப்பரேட்டர்கள்தான். இங்கே ஒரு விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். தனியார் பஸ் கம்பெனிகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் பொதுமக்கள் அல்லவா? நான் பலமுறை இதுபற்றி சொல்லிவிட்டேன். இங்கே எதிர்க்கட்சியில் இருக்கின்ற பலரும் பல முறை சொல்லிவிட்டார்கள். தனியார் பஸ் கம்பெனிகளில் நீங்கள் போட்டிருக்கிற சட்ட உரிமைகளைக் கூட தொழிலாளர்களுக்காக அமுல்படுத்துவதில்லை. தனியார் பஸ் முதலாளிகள் தொழிலாளர்களை நவீன கொத்தடிமைகளைப் போல நடத்துகிறார்கள். அதைத் தவிர்க்க மோட்டார் சட்டத்திலே ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும். தனியார் பஸ் முதலாளிகள் பஸ் பெர்மிட்டைப் புதுப்பிக்கிறபோது, வழங்கும்போது எவ்வளவு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்று வரையறுத்து வைத்திருக்கிறார்களா? அவ்வளவு தொழிலாளர்களுக்கும் உரிய மஸ்டர் ரோல்-ஐ பராமரிக்கிறார்களா? என்றுகேட்டு அதை உறுதி செய்த பிறகே புதுப்பிக்க வேண்டும். இப்போது எந்தத் தொழிலாளர்கள் தனியார் பஸ் முதலாளிகளால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்காக வேண்டி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலிப்பார்களா? கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். தனியார் பஸ் முதலாளிகளுக்காக கொண்டுவரவில்லை. பொதுமக்களின் நலனுக்காகத்தான் இச் சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லியிருப்பதால் தான் நான் இதனை கூறுகிறேன்.

(பிற்பகல் 1-40)

அதுபோல தனியார் பஸ் முதலாளிகள் சுலபமாக நேம் சேஞ்ச் பண்ணிக்கொள்கிறார்கள். அவ்வாறு செய்யும்போது ஆர்.டி.ஓ. ஆபீசில் அதை ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் அந்தமாதிரி பஸ் சர்வீஸ்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்த தொழிலாளர்களுக்கு ‘பிரேக் ஆப் சர்வீஸ்’ ஏற்பட்டு, அவர்கள் நீண்ட காலமாகப் பணிபுரிந்து பெற்ற சட்ட அனுகூலங்களை எல்லாம் இழக்கிற அபாயம் தமிழ்நாட்டில் நீடித்துக் கொண்டேயிருக்கிறது. நேம் ட்ரான்ஸ்ஃபர் பண்ணப்படுகிற போது அந்தத் தொழிலாளருடைய நோ அப்ஜெக்ஷன் இருந்தால்தான் ட்ரான்ஸ்ஃபர் பண்ண முடியும் என்ற முறையில் அமைச்சரவர்கள் சட்டத் திருத்தம் கொண்டுவருவார்களா? என்று கேட்க விரும்புகிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1987 நவம்பர் 13

இறுதியாக ஒரு விஷயம். பொதுவாக நாடு முழுவதும் பொதுத் துறையை எதிர்த்து இடைவிடாது, தொடர்ச்சியான தாக்குதலைப் பலதரப் பட்டவர்கள் தொடுத்து வந்திருக்கிறார்கள். மக்கள் முன்னால் பொதுத் துறை தனியார் துறையைக் காட்டிலும் கீழானது; நிர்வாகத் துறையும் பொருளாதாரத் துறையிலும் எடுபடாத ஒன்று என்று காட்டி, பொதுத் துறையை நிர்வகிக்கின்ற அதிகாரிகளையே கைக்குள்ளே போட்டுக் கொண்டு அந்தப் பொதுத் துறையை கறையான் மரக்கட்டையை அரிப்பது போல பொதுத்துறையை அரிக்கின்ற கறையான்களாகப் பல அதிகாரிகள் இருந்துகொண்டு, பொதுத் துறையை அவமானப்படுத்தி, செல்லுபடியாகாததாகக் காட்டுவதற்கு மிகப் பெரும் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அந்த முயற்சியிலே, அந்த எரிக்கிற முயற்சியிலே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் தனது பங்காக நான்கு சருகுகளைப் போட்டு எரிய வைக்கிறார்கள். இந்த முறை சரியல்ல. இந்த முறைக்கு நீங்கள் அங்கம் வகிக்கிற கட்சிக்கும் சரி, தேசிய உடமைக் கோரிக்கைக்கும் சரி, பொருத்தம் அல்ல. ஆகவே, பொதுத்துறையை ஊக்குவிக்க வேண்டும்.

ஆனால் பொதுத்துறையை ஊக்குவிக்கின்ற ஒரு வெப்பனாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கிடைத்தவுடன், அந்த வெப்பனால் பஸ் முதலாளிகள் பாதித்துவிடாதபடி ஒரு சட்ட முன் வடிவைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் கருணைப் பார்வை யார் பக்கம்? தனியார் பஸ் முதலாளிகளிடமா அல்லது பொதுமக்களிடமா? ஏன் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறீர்கள்? இது உண்மை அல்ல. எனவே, தேசிய சொத்தான பொதுத் துறையைப் பலவீனப்படுத்த இந்தப் போக்குவரத்துத் துறை நிச்சயம் காரியம் ஆற்றக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டம் கட்டமாக தேசிய உடமையாக்குவோம் என்று நீங்கள் சொல்லிவிட்டு, கட்டம் கட்டமாக பொதுத் துறையை கொல்லுகிறீர்களே, இது என்ன நியாயம்? கட்டம் கட்டமாக தேசிய உடமையாக்குவதற்குப் பதிலாக, ஸ்டேஜ்பை ஸ்டேஜாக நாட்டுடைமை ஆக்குவதற்குரிய திட்டங்களைத் தீட்டுவதற்குப் பதிலாக, கத்தியைத் தீட்டி பொதுத் துறையின் கழுத்தை அறுக்கிறீர்களே. இது நியாயம் அல்ல. இந்த முறையை நீங்கள் தயவுசெய்து கைவிடுங்கள். இந்த முறை பொது மக்களையும் தேசியக் கொள்கையையும் பாதிக்கும். இந்தப் பாதிப்பை தயவுசெய்து உங்கள் காலத்தில் அரங்கேறாமல் தடுக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் பல்வேறு விளக்கங்களை எல்லாம் சொல்லக்கூடும். அதற்குப் பின்னாலே எங்களுக்கு விளக்கம் சொல்ல அல்லது பதில் சொல்ல வாய்ப்பு இல்லை. இந்த சட்ட முன் வடிவை நிறைவேற்றுகிற அதேநேரத்தில் நீங்கள் மேலும் தனியார்த்



1987 நவம்பர் 13] [திரு. கே. சுப்பராயன்]

துறையை வளர்க்கத் தயாராகாதீர்கள். நீங்கள் செய்வதை நியாயப்படுத்துவதற்கு ஆதாரம் தேடுகிறீர்கள். இதை மேலும் வேகப்படுத்துவதற்கு ஏதாவது ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். அதுதான் சரியானது. அது அல்லாமல் நாட்டுடைமையை விட்டுவிட்டு தனியார் துறைக்கு விட என்ன காரணம் என்று நீங்கள் சொன்னால் நாட்டுடைமை என்கிற உங்கள் நோக்கத்தில் மாசு படிந்துவிடும். எப்போது, யார் அதை உங்களுக்கு தயாரித்துக் கொடுத்திருந்தாலும் தேசியமயமாக்கும் கொள்கைக்கு எதிர்வாதத்தை வைக்க வேண்டாம் என்று சொல்லி, நாட்டுடைமையாக்கும் வேகத்திலே சீரானமுறையில் சென்றாலும் பரவாயில்லை, தடம் புரளாமல் செல்லுங்கள் என்று கூறி, முடித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு இந்த சபை முன்னால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே சொல்லுகின்ற காரணம், மதுரைக்கும் குமுளிக்கும் பேருந்து விடுவதிலே அரசுக்கும் தனியார் போக்குவரத்து நிறுவனத்திற்கும் வழக்கு நடந்து, உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு நமது அரசுக்கு சார்பாக, அனுகூலமாக வந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அரசுக்கு அனுகூலமாக வந்தத் தீர்ப்பை இந்த அரசு மேலிட்டு நடவடிக்கை மூலமாக இதை விரிவுபடுத்த, அதாவது நாட்டுடைமையாக்கும் திட்டத்தை விரிவுபடுத்த முயற்சி எடுக்காமல் உச்சநீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பினாலே தனியார் நிர்வாகம் பாதிக்கும் என்றும் அவர்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால் பொது மக்களுக்கு இடைப்பட்ட இடங்களில் பேருந்து கிடைக்காது என்ற காரணத்தாலும் நீங்கள் சட்டத் திருத்தம் கொண்டுவந்திருப்பதாகச் சொல்கிறீர்கள்.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கு போட்டது யார்? அரசா அல்லது தனியார் பேருந்து நிறுவனமா என்பது இதிலே தெளிவாக இல்லாவிட்டாலும், யார் வழக்கு போட்டாலும் சரி பரவாயில்லை. அரசினுடைய கொள்கைக்கு ஏற்ப இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. இந்தத்தீர்ப்பை அமல் டடுத்த வேண்டிய நீங்கள் நாட்டுடைமையாக்கப்டோகிறோம் என்று சொல்கின்ற நீங்கள் ஏன் உடனே இதைப் பார்த்துப் டயப்டடவேண்டும். நீங்கள் தான் 13 டோக்குவரத்துக் கழகங்களை வைத்திருக்கிறீர்களே, ஆயிரக்கணக்கான டேருந்துகள் சென்றுகொண்டு இருக்கின்றனவே, குறுகிய கால அவகாசத்திலே, குறுகிய கால அறிவிப்பிலே பஸ்களை விட முடியாது என்று சொல்கிறீர்கள். பரவாயில்லை. ஆனால்

தனியார்கள் 5, 5 பேருந்துகள்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டம் வைத்திருக்கிறீர்கள். ஆனால், 40 பேருந்து, 50 பேருந்து என்று ஒரே இடத்திலேயே ஒரே காம்பவுண்டுக்குள்ளேயே வைத்துக்கொள்வதற்கு அனுமதி இருக்கிறது. அதற்கு சட்டங்கள் எப்படி இடம் தருகின்றன என்பது தெரியவில்லை. இப்படி எல்லாம் கொடுத்திருக்கிற நீங்கள், உங்களால் பேருந்துகளை விட முடியாவிட்டால், குறுகிய கால அறிவிப்பிலே அவர்களிடத்திலே சொல்லி இரண்டு, மூன்று நாட்களுக்கு பேருந்துகளை விடுங்கள் என்று சொல்லலாம் அல்லவா? ஒரு குறுகிய கால அறிவிப்பிலே அவ்வாறு செய்யலாம் அல்லவா? அதை விடுத்து பேருந்துகளை விடவே முடியாது என்பது மாதிரி சொல்லி, அவ்வாறு பேருந்தை விட முடியாத காரணத்தால் அவர்களுக்கு நாங்கள் சலுகை கொடுக்கிறோம், அனுமதி கொடுக்கிறோம் என்று சொன்னால் அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒன்று, எங்களால் நாட்டுடைமையாக்க முடியாது. அதைச் செயல்படுத்த முடியாது என்று சொல்லி அனைத்து தடங்களிலும் தனியார்கள் பேருந்துகளை விடுவதற்கு வாய்ப்பு கொடுங்கள். அப்படி நாட்டுடைமையாக்கும் கொள்கையைச் செயல்படுத்த முடியவில்லை என்று ஏற்றுக் கொள்ளுங்கள். அதை விடுத்து உச்சநீதிமன்றம் அரசுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கி இருக்கும்போது அதைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள் என்பதுதான் எங்கள் கேள்வி.

ஒன்றை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். குமுளி, மதுரை போன்ற வழித்தடங்களிலும், பல வழித் தடங்களிலும் உள்ள நிலைமைகளைப் பற்றிச் சொல்லும்போது ஒரு இடத்திலிருந்து மறு முனை வரையில் நாம் பேருந்தை விட வேண்டும்; இடைப்பட்ட இடங்களைப் பொறுத்தவரையில் அவற்றைத் தனியாருக்குக் கொடுப்பதில் தவறில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்தக் கொள்கை எந்த அளவுக்கு நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதற்கான திட்டத்தை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அப்படி இருக்கும்போது உங்களுக்குத் தெரியாதா? பேருந்துகளை வைத்து நடத்துகிற முதலாளி எத்தனை பேருந்துகள் வைத்து நடத்தி வருகிறார் என்று உங்களுக்குத் தெரியாதா? எத்தனை பெயரிலே எத்தனை பேருந்துகளை வைத்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? 5 பேருந்துகளுக்கு மேல் அவர்களிடத்திலே இருந்தால் அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே? உங்களுக்குத் தெரியும். எந்தப் பேருந்தை நடத்துகிறவர் எத்தனை பேருந்துகள் வைத்திருக்கிறார் என்ற கணக்கு இருக்கிறது. அதை வைத்து 5 பேருந்துகளுக்கு மேல் கூடாது என்று சொல்லி மீதி பேருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே? எடுத்து இந்த வழித்தடங்களிலே விட வேண்டியதுதானே. ஒன்று நாட்டுடைமையாக்கும் திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்த வேண்டும். முடியாவிட்டால் தனியார் பேருந்துகளை விடுவதற்கு வழி விடுங்கள் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.





திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக சட்ட முன்வடிவு 42/87-லே ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். பாலிசி நோட்டிலே தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. நேஷனலைஸ் பண்ணுவதுதான் அரசினுடைய கொள்கை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது அதற்கிணங்கத்தானே உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்திருக்கிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவு தேவையா? இதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய கருத்து. தேசியமயமாக்குவதுதான் எங்களுடைய கொள்கை என்பதை வரவேற்கிறோம். அரசினுடைய கொள்கை பற்றி பாலிசி நோட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதே அளவில் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினையொட்டி நீங்கள் இந்த மசோதவைக்கொண்டு வந்திருப்பது வரவேற்கக்கூடியதல்ல. அரசினுடைய கொள்கைக்கு எதிரானது இந்த மசோதா என்பதுதான் எங்களுடைய கருத்து.

(பிற்பகல் 1-50)

இதனுடைய ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலே ஸ்மால் ஆப்பரேஷனை ஊக்குவிக்க வேண்டுமென்றும், 13 கார்ப்பரேஷன்களாலேயே வண்டிகளை விட முடியாது என்று சொல்வதும் சரியானதல்ல. நாங்கள் என்ன சொன்னாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களைக் கன்வின்ஸ் பண்ணக்கூடிய வகையில் நன்றாகப் பதில் சொல்வார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏதோ அரசாங்கம் பேருந்துகளை நேஷனலைஸ் செய்திருக்கின்ற காரணத்தால் மக்கள் எல்லாம் வசதியாக இருக்கிறார்கள்; அதைப்போல தொழிலாளர்களையும் ஓரளவுக்கு நன்றாகப்பார்க்கிறார்கள்; தனியார்கள் தான் கொத்தடிமைகளாகப்பார்க்கிறார்கள். 5 ரூபாய், 10 ரூபாய் தான் அவர்கள் கண்டக்டர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னாலும் கூட தற்போது கொஞ்சம், கொஞ்சமாக அரசு கழகங்களும் சரியான முறையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எம்.டி.க்கள் எல்லாம் தற்போது முதலாளிகளாகவே மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தவரையில் நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் எங்களால் தெரிந்துகொள்ள முடிகிறது. நான் ட்ரேட் யூனியன் தலைவராக இருந்தேன். அப்போது அங்கே பல கோரிக்கைகளைச் சொல்லியும் அவற்றைக் கேட்க அவர்கள் தயாராக இல்லை. என்னவென்று சொன்னால் இந்த அரசினுடைய 11 கழகங்களிலே பதிவு சம்பளம் கொடுக்கப்படுகிறது. 25 ஆண்டுகளாக வேலை செய்கிற ஊழியர்களுக்கு நேசமணி கார்ப்பரேஷனிலே புரொமோஷன் இடையாது. ஆனால் கட்டபொம்மன் டிரான்ஸ்போர்ட்டிலே 10, 15 ஆண்டுகள் பணி புரிந்தாலே புரொமோஷன், [illegible]



[illegible]

[திரு. மா. சுந்தரதாஸ்] [1987 நவம்பர் 13

கிடைக்கிறது. இதன் நியாயத்திற்கு இணங்க எல்லா கார்ப்பொரேஷனிலேயும், இந்த அளவு 10 ஆண்டு 12 ஆண்டு காலம் ஊழியம் செய்கிற ஊழியர்களுக்கு புரொமோஷன் கொடுக்கிற வகையிலே கூட இப்போது ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்கலாம். ஆனால் தனிப்பட்ட முறையிலே நேசமணி கார்ப்பொரேஷனிலே 25 ஆண்டு காலம் வரை ஊழியம் புரிந்தால் அவனுக்கு புரொமோஷன் இல்லை. அவன் சாகும் வரை கண்டக்டராகவே சாக வேண்டும், டிரைவராகவே சாகவேண்டும்.

ஆனால் நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே 10, 12 ஆண்டுகள் ஊழியம் புரிந்தாலும் புரொமோஷன் கிடைக்கிறது. அதை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நிச்சயமாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே ஏன் தனியாருக்கு வக்காலத்துவாங்குகிற முறையிலே இந்த கழகம் நடந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே பூனம்பொழி டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷன் என்று தனியாருக்குச்சொந்தமான போக்குவரத்து இருந்தது. ஆனால் இப்போது அதை தனியார்களே ஓட்டுவது இல்லை. எல்லாமே அரசு நடத்துகிறது. ஆனாலும்கூட லாபத்தைக் காட்ட முடியவில்லை.

அடுத்து மக்களுக்கு தேவைப்படுகிற சில பிரச்சினைகளை வளர்ச்சி மன்றக் கூட்டத்திலோ அல்லது டிரான்ஸ்போர்ட் கமிட்டியிலோ, எம்.பி.,எம்.எல்.ஏக்கள் தீர்மானத்திலே எழுதி கொடுத்தாலும் கூட செய்வது இல்லை. அமைச்சரிடத்திலே கூட நேரிடையாகவே எழுதி கொடுத்திருந்தேன். கலெக்டர் கூட நேரிடையாக வந்து பார்த்து, தேவை என்று சொன்னாலும், தலைநகரத்திலேயிருந்து தாலுக் ஹெட் குவார்ட்டர்ஸுக்கு பஸ் ஆப்பரேட் பண்ணவேண்டும் என்று சொல்லியும் அந்த அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸுக்கு எங்களால் ஆப்பரேட் பண்ண முடியாது. சந்தை எங்கே கூடுகிறதோ அந்த இடங்களில்தான் நாங்கள் ஆப்பரேட் பண்ண முடியும் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்கு கலெக்டருக்கு மேலே உள்ளவர்களைப் போல அவர்கள் பேசுகிறார்கள். நான் அமைச்சரிடத்திலும் நேரிடையாகச் சொன்னேன். அவர், நீங்கள் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். கேட்டால், கலெக்டர் சொன்ன உடனேயே, எம்.பி.,எம். எல்.ஏ.-க்கள் சொன்ன உடனேயே, நாங்கள் கேட்க வேண்டுமா என்று திருப்பிக்கேட்கிறார்கள். அந்த அளவுக்குத்தான் நாங்கள் எல்லாம் இருக்கிறோம். ஒரு பஸ் ஓடுவதற்காக கேபினெட் தீர்மானம் போட்டுக் கொடுக்க முடியுமா? மாவட்ட அளவிலே இருக்கிற அதிகாரிகளைத்தான் நாங்கள் கேட்க முடியும். அதைக்



1987 நவம்பர் 13] [திரு. மா. சுந்தரதாஸ்]

கூட அமைச்சரிடம் சொன்னால் நன்றாகவா இருக்கும்? ஒரு மாநிலத்திலே 13 கழகங்களின் தலைமையை ஏற்று நடத்துகிற ஒரு அமைச்சரிடத்திலே சென்று, இங்கே ஒரு பஸ்ஸை ஓட்டுங்கள் என்றுகேட்பது நன்றாகவா இருக்கும்? டிரான்ஸ்போர்ட் கமிட்டியிலோ அல்லது மாவட்ட வளர்ச்சி மன்றத்திலோ எம்.பி., எம்.எல்.ஏ.-க்கள் தீர்மானமாக ஒன்றைக்கொண்டு வந்தால் அதைக் கேட்க வேண்டும். கேட்பதில்லை. பதிலாக மக்களிடத்திலே ஒரு மோசமான நிலைமையை உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். என்னவென்றால், அரசு கழகங்கள் சரியாக இயங்கவில்லை, அதைத் தனியாருக்கே கொடுத்து விட வேண்டும் என்று மக்களே ஒரு போராட்டத்தை உருவாக்குகிற நிலைமையிலே இந்த கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நான் சொல்வது எல்லாம் பில்லுக்கு சம்பந்தம் இல்லை என்றாலும் கூட, அமைச்சர் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மேலும் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலோ டிரான்ஸ்போர்ட் கமிட்டியிலோ கொண்டு வரப்படும் தீர்மானங்களுக்கு நிச்சயமாக மரியாதை கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஆணை இடுவாரா?என்று கேட்க விரும்புகிறேன். ஆணையிடுவார் என்றும் நம்புகிறேன.

மேலும் இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அளவுக்குக் கொண்டு வரத் தேவையில்லை. அரசு கழகங்கள் 13 இருக்கின்றன. அதை 20 ஆக்க முடியும். இப்போது 25 பஸ்கள் வைத்திருக்கும் பிரைவேட் ஆப்பரேட்டர்ஸ் கூட, மகன், மகள் மேல் காட்டி, அந்தக் கணக்கிற்கு கொண்டு வந்து விட முடியும். 5 பஸ்கள் தான் வைத்திருப்பதாக கணக்கும் வைப்பார்கள். ஆகவே இது தேவையில்லாத ஒரு காரியம். கொத்தடிமை முறையை ஒழித்துக் கொண்டிருக்கும் இந்த நாட்டிலே, 5 பஸ்கள் என்று கொடுத்தாலும் கூட, நிச்சயமாக அந்த ஆப்பரேட்டர்கள் கண்டக்டர்களுக்குச்சம்பளம் சரியாகத் தர மாட்டார்கள். அதற்கு நார்ம்ஸ் வேறு இல்லை. எந்த அளவுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று தெரியாது. இந்த 10 ரூ. சம்பளத்தையே இன்று வா, நாளை வா என்று சொல்லுகிற வகையில் ஊதியம் கொடுக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய ஆணைப்படி அவர்கள் சம்பளம் கொடுப்பதில்லை. நிச்சயமாக இந்த மாதிரி ஸ்மால் பஸ் ஆப்பரேட்டர்களை ஊக்குவிக்கின்ற போதுகூட, பெரிய ஆப்பரேட்டர்கள் தான் பயன் அடைகிறார்கள். தேவையில்லாத காரணத்தால் உச்ச நீதி மன்றம் சொல்லுகிற ஆணைப்படி நேஷனலைசேஷன் பாலிசியை ஊக்குவிக்க வேண்டும். இந்த மசோதாவை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1987 நவம்பர் 13

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றிய பல்வேறு கருத்துக்களை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ அவர்கள் சொல்லிய பல்வேறு கருத்துக்களிலேயே நான் சொல்ல வேண்டிய பதிலும் அமைந்திருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதலில் தேசியமயக் கொள்கையைப் பற்றி உங்களுடைய தெளிவான எண்ணம் என்ன என்பதைப் பற்றி எல்லோருமே மொத்தமாகக் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் அந்தக் கொள்கையிலே எந்தவிதமான மாற்றத்தையும் ஒத்துக்கொள்ளவில்லை. தேசியமயம் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதையும், தொடர்ந்து அது இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களும், மற்றும் இங்கே பேசிய அத்தனை பேர்களும், திரு. சுப்பராயன் முதற்கொண்டு எல்லோருமே, இந்த அரசு ஏதோ தேசியமயக் கொள்கையிலே பின் வாங்கிப் போய் விட்டது அல்லது ஏதோ தனியாருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு மட்டுமே இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்ற கருத்தை அவர்களுக்கு இருக்கிற திறமையின் காரணமாக அழுத்தந்திருத்தமாகச் சொல்லி அதை இந்த நாட்டு மக்கள் நம்ப வேண்டும் என்ற இந்த அரசாங்கத்தின் மீது ஒரு குறையைச் சொல்லும் முயற்சியை அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

ஆனால் உண்மையான நிலைமையை உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன். திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசுகிறபோது கூட அரசாங்கத்திற்குச் சாதகமாகத் தானே உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்திருக்கிறது, அதைப் பயன்படுத்த வேண்டியது தானே என்று கருத்து தெரிவித்தார்கள். அதைப் பயன்படுத்தக் கூடாது என்பது அரசாங்கத்தினுடைய நோக்கமல்ல. ஆனால் அதற்குத் தகுந்த நேரம் இப்போது அல்ல என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்போது வந்திருக்கிற இந்தத் தீர்ப்பின்படி அந்த ஒரு பேருந்து மட்டும் பாதிக்கப்படும் என்றால் இந்த அரசாங்கத்திற்கு அதைப்பற்றிக் கவலையில்லை. அதற்காகப் பணத்தை ஒதுக்கி அந்தப் பேருந்துக்குப் பதிலாக ஒரு பேருந்தை அரசின் சார்பாகப்போடுவது என்பதில் சிரமம் கிடையாது. அதையொட்டி அதையே அடிப்படையாக வைத்து பல்லாயிரக்கணக்கான பேருந்துகள் இன்றைக்கு தனியார் துறையில் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. உடனே உங்களுக்கு ஏன்ன



1987 நவம்பர் 13] [திரு. சு. முத்துசாமி]

தோன்றுகிறது ? தனியார் துறையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்த அரசாங்கம் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. இன்றைக்கு ஆயிரக்கணக்கான பேருந்துகள் தனியார்களிடத்திலிருந்து அரசாங்கம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை உடனடியாக ஏற்படுமானால், படிப்படியாக ஏற்பட்டால் பிரச்சினை இல்லை — ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்திற்குள் ஏற்படுகிறபோது அரசாங்கம் முழுமையாக இதற்கு பணத்தை ஒதுக்க முடியாது என்ற சூழ்நிலை ஏற்படும் என்பதை இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே அதை முறைப்படுத்துவதற்கு, அதை ஒரு காலக்கட்டத்தில் படிப்படியாக எடுக்க வேண்டுமென்ற அந்த நோக்கத்தோடுதான், இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்து, நாம் கொஞ்சம் முறைப்படுத்தி, அதைப் படிப்படியாக எடுத்துக்கொள்வதற்கு ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகிறோமே தவிர நிரந்தரமாக விட்டுவிடுவதற்காக இல்லையென்பதை முதலில் ஒட்டுமொத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்று நீங்கள் சொல்லலாம், அரசாங்கம் முயற்சியெடுத்தால் செய்ய முடியாதா என்று சிலபேர் கேட்கலாம். ஆனால் ஒவ்வொரு பிரச்சினையையும் நீங்கள் தனித்தனியாகப் பேசுகிறபோது அந்தப் பிரச்சினைக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். குடிதண்ணீர் பிரச்சினையைப்பற்றி பேசுகிறபோது குடிதண்ணீர் பிரச்சினைக்கு முக்கியத்துவம்கொடுத்து அரசாங்கம் நினைத்தால் 50 கோடி ரூபாய் ஒதுக்கி உடனேசெய்யக் கூடாதா என்று கேட்கிறீர்கள். ரோடு வசதி, பால வசதி என்று கேட்கிறபோது அரசாங்கம் நினைத்தால் ஒரே ஆண்டில் செய்து விட முடியாதா என்று கேட்கிறீர்கள். பஸ்ஸை கேட்கிறபோது அரசாங்கம் நினைத்தால் கேட்கிற கோரிக்கைகள் எல்லாம் ஒரே ஆண்டில் முடித்து விட முடியாதா என்று இப்படி கேட்கிறீர்கள். இதையெல்லாம் மொத்தமாகக் கணக்குப்போடுகிறபோது தாங்க முடியாத அளவிற்கு அரசாங்கம் பணச்சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதை நீங்கள் எல்லோரும் நிச்சயமாக புரிந்திருப்பீர்கள் என்றே நான் கருதுகிறேன். எனவே இந்தச் சூழ்நிலையில்தான் படிப்படியாக இதைச் செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்தவகையில் இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் கொஞ்சம் வேகமாக இந்த அரசாங்கம் ஏதோ கறைபட்டு விட்டதைப் போலப் பேசினார்கள். அப்படிக் கறைபட்டு விட்டதாகக் கணக்கு எடுத்தால் 1972-லிருந்து கணக்கு எடுக்கவேண்டியிருக்கும். இந்த அரசாங்கம் வந்து இதைச் செய்யவில்லை. 1972-ல் செய்தபோது இந்தச் சட்டம் உச்சநீதி மன்றத்தில் தடைசெய்து

நிறுத்தப்பட்டு விட்டாலும் கூட, உச்சநீதிமன்றத்தில் ஒரு முடிவு உங்களுக்கு கிடைக்கவில்லையென்றாலும் கூட, வேறு மறைமுகமாக தேசியமயமாக்குவதற்குப் பல்வேறு வகைகள், வழிமுறைகள் இருந்தன. அன்றைக்கு ஏன் செய்யவில்லை? அன்றைக்குக் கறைபடிந்த விட்டது, அதனால் செய்யவில்லை என்று நான் சொன்னால் சரியாக இருக்குமா என்று நீங்களே முடிவு எடுத்துக்கொள்ளுங்கள். அன்றைக்குக் கூட நீங்கள் என்ன முடிவு எடுத்தீர்கள்? படிப்படியாகச் செய்ய வேண்டும். உங்களுக்கு மட்டும் பிரச்சினை இருக்கிறது, இந்த அரசுக்குப் பிரச்சினை இல்லையா? நீங்கள் செய்கிறபோது படிப்படியாகச் செய்யவேண்டும் என்று ஏன் முடிவு செய்தீர்கள்? இன்னும் அத்தியாவசிய முன்னணியில் செய்யவேண்டிய பல்வேறு பிரச்சினைகள் காத்துக் கொண்டிருந்தன. அதே நிலைதான் இந்த அரசாங்கத்திற்கும், இன்னொன்றையும் சொல்கிறேன். 1977 ஆம் ஆண்டு நாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறபோது அரசாங்கத்தினுடைய பேருந்துகள் தேசியமயமாக்கப்பட்டது 52 சதம் தான். இன்றைக்கு 68.6 சதவீதமாக அது உயர்ந்திருக்கிறது. இந்த அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவில்லை என்று சொல்கிறீர்களா? நாங்கள் பின்பற்றுகிற வழிமுறைகள் வேறு, நீங்கள் பின்பற்றிய வழிமுறைகள் வேறு. நீங்கள் ஒருபக்கம் பேருந்துகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தீர்கள், இன்னொரு பக்கம் எடுத்துக்கொண்டே இருந்தீர்கள். அங்கே தான் டிஸ்கிரிமினேஷன் வருகிறது. தேவைப்பட்டவர்களுக்குக் கொடுத்தீர்கள்; தேவையில்லாதவர்களுக்கு எடுத்தீர்கள். இந்த அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை. புதியதாக எங்கெங்கே கொடுக்க வேண்டுமோ அங்கேயெல்லாம் இப்போது தனியார்களுக்குக் கொடுக்காமல், அரசின் சார்பாகப் பேருந்துகளை நாங்கள் விட்டுக்கொண்டு வருகிறோம். இந்தக் காரணத்தால் தான் 52 சதவீதம் என்பது 68.6 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. எனவே இந்தக் கொள்கையில் நாங்கள் விட்டுக் கொடுக்கவில்லை.

இன்னொன்று, ஒரு ஆண்டுக்கு 2,400 பேருந்துகளை போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக நாங்கள் வாங்குகிறோம். இதிலே ஏறத்தாழ 1,400 பேருந்துகள் புதிய வழித்தடங்களில்தான் ஓட்டப்படுகின்றன. மிச்சம் இருக்கிற ஆயிரம் பேருந்துகள் பழைய பேருந்துகளை மாற்றுவதற்கு நாங்கள் பயன்படுத்துகிறோம். இந்த 2,400 பேருந்துகளுக்கு மேலும் வாங்கக்கூடிய சக்தி போக்குவரத்துக் கழகங்களுக்கு இருக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா? தயவுசெய்து சொல்லுங்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில்தான் உடனே செய்யமுடியாத சூழ்நிலையில் படிப்படியாகச் செய்யவேண்டுமென்று நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். நான் ஒரு பேருந்தைக் கேட்டேன், விடவில்லை என்று. அவர்கள் அரசியலில் இருக்கிற காரணத்தால், அரசியல்





நோக்கமாக அவருக்குப் படுகிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது. உண்மை நோக்கம் அப்படியில்லை. எல்லா இடங்களிலிருந்தும் பேருந்துகளைக் கேட்டு எங்களுக்குக் கோரிக்கைகள் வருகின்றன. படிப்படியாகப் போய் அலசிப் பார்க்கிறார்கள். ஆய்வு செய்கிறார்கள். எங்கே பேருந்து முதலில் தேவையோ அங்கே முதலில் விடுகிறார்கள். அதற்கு அடுத்து படிப்படியாக ஒவ்வொரு பேருந்தாக விட்டுக்கொண்டு வருகிறார்கள். சில நேரங்களில் 1,400-ஐ தொட்டு விட்டால், இந்த ஆண்டில் விட முடியாது என்று விடுவதில்லை. (குறுக்கீடு). சொல்கிறேன்.

(பிற்பகல் 2-00)

எனக்குக் கூட பலவிதமான பதில்களைச் சொல்கிறார்கள். இதையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் பொருத்தமாக இருக்காது. என்ன உண்மை நிலைமை என்பதைத் தெரிந்து சொல்லவேண்டும். எனவே இந்த நிலைமையில் அரசாங்கம் 1,400 பேருந்துகளை ஒரு ஆண்டுக்கு விடுகிறது. அடுத்த ஆண்டுக்கு மற்றவற்றை எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கிறது. வேண்டுமானால், 5, 6 ஆண்டுக்காலத்திற்கு புதிய பேருந்துகளை போக்குவரத்துக் கழகத்தினுடைய சார்பாக நீங்கள் விடவேண்டாம் என்று ஒரு முடிவைச் சொல்லுங்கள். இந்த 5 ஆயிரம் தனியார் பேருந்துகளை இன்றைக்கே நாங்கள் தேசியமயமாக்கிவிடுகிறோம். காரணம் எங்களுடைய கெப்பாசிடி 1 ஆண்டுக்கு 1400 பேருந்துகள். 1,400 பேருந்துகளை விட்டால்போதும் என்று நீங்கள் நினைக்கவில்லை. 5 ஆயிரம் பேருந்துகளை ஒரு ஆண்டுக்கு விடுகிற அளவிற்கு கோரிக்கை வருகிறது. பணம் இல்லாத காரணத்தால்தான், போக்குவரத்துக் கழகங்கள் இதற்குமேலே பேருந்துகளை வாங்க முடியாத காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுடைய கோரிக்கை கொஞ்சம் தள்ளிப் போயிருக்கலாம். எனவே இப்படிப்பட்ட கோரிக்கைகளையெல்லாம் உடனே நிறைவேற்ற வேண்டும். இது தேசியமயமாக்கப்படுவதைவிட, அத்தியாவசியமான சூழ்நிலை என்ற காரணத்தால்—தேசியமயமாக்கப்பட்ட அந்தப் பேருந்துகளை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கிக் கொள்வதை விட, பொது மக்கள் எங்கெல்லாம் புதிதாகப் பேருந்துகளைக் கேட்கிறார்களோ, அங்கெல்லாம் பேருந்துகளை விடவேண்டும் என்பது தான் அந்த மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்ற காரணத்தால்தான் இதை முடித்துவிட்டு, அதற்கு வரலாம் என்று தள்ளி வைக்கிறாமே தவிர, வேறு எந்த உள்நோக்கமும் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதை, அண்ணா சொல்லித் தந்த கொள்கையை இந்த அரசு நிச்சயமாக விட்டுவிடுவதற்கு தயாராக இல்லை என்பதை நான் உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1987 நவம்பர் 13

இன்னொரு உதாரணத்தைச் சொன்னால், நிச்சயமாக அவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். 1967-லேயிருந்து 1977 வரை, 2,085 பேருந்துகள் தனியாருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. வழித்தடங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அன்றைக்கு என்ன சொல்லப்பட்டது. தேசியமயம் என்று சொன்னோம். ஒரு பக்கம் தேசியமயம் என்று சொல்லிக்கொண்டு, ஒருபக்கம் 2,085 பேருந்துகளை தனியாருக்குக் கொடுத்திருந்தால் எப்படி தேசியமயக் கொள்கை வெற்றி அடையும். ஒரு பக்கம் தொழிலிலே அவனை இழுத்துவிட்டு விட்டு, அதற்குப் பின்னாலே பழி வாங்குவதைப் போல நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

ஆனால் இன்றைக்கு 1977-லேயிருந்து 1987 வரை, 762 பேருந்துகளுக்கு மட்டும்தான் தனியார் துறையிலே நாங்கள் அனுமதி கொடுத்திருக்கிறோம். இதை ஏன் கொடுத்தீர்கள் என்று கூட சிலபேர்கள் கேட்கலாம். இதுவும் கூட நீதிமன்றத்திலேயிருந்து டைரக்சன் வந்ததன் காரணமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் வந்தது. எனவே தேசியமயக் கொள்கையிலே பிராக்டிகலாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏறத்தாழ 11,850 பேருந்துகள் அரசுக்குச் சொந்தமாக இருக்கின்றன. நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறபோது 4,000 சில்லரை பேருந்துகள்தான் இருந்தன. இவ்வளவு பேருந்துகள் இந்த அரசினுடைய காலத்திலே விடப்பட்டிருக்கின்றன. எனவே அத்தியாவசியம் என்பது எங்கெல்லாம் பேருந்துகள் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு முதலிலே யாராவது ஒருவர் வண்டியைக் கொடுக்க வேண்டும். அந்த நடவடிக்கையிலேதான் அந்த உணர்வோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

நான் ஏற்கனவே சொன்னதைப்போல, ஒரே ஒரு உரிமையாளர் மட்டும் அல்லது ஒரே ஒரு பேருந்துமட்டும் பாதிக்கப்படும் என்று இருந்தால், நிச்சயமாக இந்தச் சட்டத்திற்கு அவசியமே இல்லை. இதைத் தொடர்ந்து, படிப்படியாக ஒரு ஆண்டு அல்லது இரண்டாண்டுக் காலத்திற்குள்ளே பல ஆயிரம் பேருந்துகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டியதிருக்கும், நஷ்டயீடு கொடுக்க வேண்டியதிருக்கும் என்று ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால்தான், இந்தச் சூழ்நிலை வந்திருக்கிற காரணத்தால்தான், தற்காலிகமாக இதை தள்ளிப் போடுவதற்கும், அதற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர்களும், பொதுமக்களும் கேட்கின்ற கோரிக்கையை ஓரளவிற்கு நிறைவேற்றிவிட்டு, அதற்குப் பின்னாலே நமக்கு இருக்கிற வசதியை வைத்துக்கொண்டு, படிப்படியாக மற்ற பேருந்துகளை தேசிய



1987 நவம்பர் 13] [திரு. சு. முத்துசாமி]

மயமாக்கலாம் என்ற அந்த முடிவை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேருந்துகளுக்குச் செலவழிப்பது மட்டுமல்ல, பல்வேறு பிரச்சினைகள் இந்த நாட்டை எதிர்நோக்கியிருப்பதை நீங்கள் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறீர்கள். அரசாங்கத்திலே இதற்கு நிதியில்லை என்பது தெரிந்தும் நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். எனவே அப்படியிருக்கிறபோது, இதற்குப் பணத்தை ஒதுக்குவது சாத்தியம்தானா என்பதைத் தயவு செய்து நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் மிகக் கடுமையாக இங்கே பேசினார்கள். அதைப்போல உறுப்பினர் திருபொன் முத்துராமலிங்கம் அவர்களும் இந்த அரசாங்கம் இந்தக் கொள்கையைவிட்டு விட்டு எங்கேயோ நழுவிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு இருக்கின்ற நாவன்மை காரணமாக, பொதுமக்களுக்கு இதைச் சொல்ல வேண்டும் என்று கருதிச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம், 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ஆம் தேதி இதே மன்றத்தில் ஒரு விவாதம் நடந்தது. அப்போது உங்களுடைய கட்சியினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் இங்கே இருந்தார்கள். அந்த விவாதத்திலே திரு. அம்பிகாபதி அவர்களுக்கும், இவர்களுக்கும் ஒரு கடுமையான மோதல் ஏற்பட்டது அந்த நேரத்தில் திரு. அம்பிகாபதி அவர்கள் சொன்னார்கள், உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இருக்கிற அதே இடத்திலிருந்து, அதே கட்சியிலிருந்த அம்பிகாபதி அவர்கள் பேசினார்கள். இந்த தேசியமயக் கொள்கையிலே ஒரு மாற்றம் தேவைதான் என்று அவர்கள் இங்கே பேசினார்கள். மதுராந்தகம் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசினார்கள். அதுமட்டுமல்ல, அங்கே திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் தி.மு.க.வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ஆசைத்தம்பி அவர்கள், கமலநாதன் அவர்கள் கையெழுத்திட்டு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மனுவே கொடுக்கப்பட்டது. அதைப்பற்றித்தான் விவாதமே வந்தது. அந்த விவாதத்திலே முடிவாக மனு கொடுக்கப்பட்டிருக்கிறது, அது தேதி மட்டும் தெரியவில்லை என்று முடித்து வைக்கப்பட்டது. எனவே, அன்றைக்கு அந்தக் கொள்கை எங்கே போனது என்று எனக்குத் தெரியவில்லை. ஏன் அப்படி கொடுக்க வேண்டும். இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் இப்படி ஒரு முடிவு எடுக்கிறது என்று சொன்னால் இன்றைக்கு எங்களிடத்திலே போதிய பணவசதி இல்லை, வேறு அத்தியாவசியப் பணிகளுக்குச் செலவழிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது, எனவே அந்தக் கொள்கையை கொஞ்சம் தள்ளி வைத்து அதற்குப் பிறகு

செய்கிறோம் என்று சொல்கிறோம். ஆனால் எதிர்க்கட்சியாக இருக்கின்ற ஒரு கட்சி இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர்கள் கொண்டு வந்த அந்தக் கொள்கைக்கு மாறா கையெழுத்து இட்டுக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அன்றைக்கு என்ன ஏற்பட்டது என்பதைப் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அது போன விஷயம். இருந்தாலும் பரவாயில்லை.

அது மட்டும் அல்ல, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே பேசினார்கள். திரு உமாநாத் அவர்கள் அதற்கு இங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இன்றைக்குப் பேசுவார் என்று எதிர்பார்த்து திரு. உமாநாத் அவர்கள் அன்றைக்குப் பேசினார்களோ என்னமோ எனக்குத் தெரியாது. 1983-ஆம் ஆண்டு 16 ஆம் தேதி உமாநாத் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். விவாதம் நடந்தது. பேசினார்கள். பேசுகிறபோது அவர் சொன்னார், நாங்கள் மேற்குவங்கத்திலே இந்த கொள்கையை அறிவித்து இருக்கிறோம் நாங்கள் வந்த உடனேயே தேசியமயம் செய்வோம் என்றார்கள். எடுக்கவும் இல்லை. செய்யவும் இல்லை. அதற்குக் காரணம் பல்வேறு பிரச்சினைகள் எங்களை எதிர் நோக்கி இருக்கிறது, எனவே அதைச் செய்து கொண்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதே காரணம் தமிழகத்திற்கும் பொருந்தும் என்பதை நிச்சயமாக திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். எனவே அவர் ஏற்றுக் கொண்டு அதற்குத் தலையை அசைத்து இருக்கிறார்கள். எனவே அந்த உணர்வோடு இதைச் செய்கிறோமே ஒழிய இந்தக் கொள்கையை நாங்கள் விட்டு விடவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து திரு. சுப்பராயன் அவர்கள் நார்மஸ் பற்றி எல்லாம் சொன்னார்கள். தனியார் துறையில் எத்தனை பேரை வைத்துக் கொள்ள வேண்டும்? எப்படி வேலை வாங்க வேண்டும்? சம்பளம் என்ன? இதை எல்லாம் நிர்ணயிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்த உரிமைகளை கவனிப்பதற்கு தனியாக ஒரு துறை இருக்கிறது. எனவே அந்தத் துறையின் மூலமாகத்தான் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம். அதற்காகவே அந்தத் துறை இருக்கிறது. எனவே ஒவ்வொரு துறையும் அதனதன் வேலையைக் கவனித்தால் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே அந்தத் துறையினுடைய மானியம் வருகிறபோது அதிலே பேசி அதற்கான நடவடிககை எடுத்தாலே எனக்கும் கூட மகிழ்ச்சியாக இருக்கும். காரணம் எனக்கு இப்போது பல்வேறு பிரச்சினைகள் அதனால் ஏற்



படுகின்றன. எனவே அது தவிர்க்கப்படும். அடுத்த மானியக் கோரிக்கையில் அதைப் பற்றி அவர்கள் விரிவாக அந்தத் துறையிலே பேச வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். உங்களுடைய கொள்கை என்ன? முடியும், முடியாது என்று சொல்லி விடுங்கள் என்று அவர்கள் கேட்டார்கள். ஒரு வேளை பக்கத்தில் உள்ள கர்நாடக மாநிலத்திலே முடியாது என்று அறிவித்து விட்டுதான், விட்டு விட்டார்களோ என்னவோ எனக்குப் புரியாது. இருந்தாலும் நான் இப்போது சொன்னதிலிருந்து அவருக்கு பதில் கிடைத்து இருக்கும் என்று கருதுகிறேன். எனவே முடியாது என்பது அல்ல; முடியும். நீங்கள் கொடுக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை, கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இது கொஞ்சம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இதை உடனடியாகச் செய்து விட்டால் நீங்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளை முடியாது என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை நீங்கள் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன். திரு. சுந்தரதாஸ் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். சமீபத்திலே மத்திய அரசு என்ன கொள்கையை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை அநேகமாக விட்டு விட்டு அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன் ; உங்களுடைய கொள்கை இதற்கு சாதகமாக அல்ல; தனியாரிடத்திலே சிலவற்றைக் கொடுத்து விடுவது தான் நல்லது என்று கூட அவர்கள் கருதுகின்ற வகையிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விட வேண்டாம். அதைப் பற்றி அதிகம் விவாதம் இப்போது தேவையில்லை. ஆனால் ஒன்றை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்போது தேசியமயம் ஆக்கப்படுவதைப் பற்றி திரு. சுப்பராயன் அவர்கள் ஒரு கருத்தை லேசாகக் கோடிட்டார்கள். அப்படித்தான் அவர் எப்போதும் ரெக்கார்டு செய்து விடுவார். அவர் கோடிட்டுக் காட்டுகிறபோது திருப்பிக் கொடுப்பது போல என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அரசு தன்னிடத்திலே இருக்கின்ற எந்தப் பேருந்தையும் தனியாருக்குத் திருப்பிக் கொடுக்காது. அரசு தன்னிடத்திலேதான் வைத்துக் கொண்டிருக்கிறது. இருக்கின்ற அந்தப் பேருந்துகள் நாம் நம்முடைய நிலையை சரி செய்து கொள்ளும் வரையில், நம்முடைய நிதி நிலைமையை சரியாக வைத்துக் கொள்ளுகின்ற அந்தச் சூழ்நிலை ஏற்படுகின்ற வரையில் அவர்களே அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அப்போது தான் மக்களுக்கு இடையூறு இருக்காது என்ற அந்தக் காரணத்திற்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்து இருக்கிறோமே ஒழிய வேறு உள் நோக்கம் அல்ல. எனவே உங்களை ஏதோ சமாதானப்படுத்தி விட வேண்டும் என்பதற்காக இந்தக் கருத்துக்களை நான் சொன்னதாக நீங்கள் கருதி விட வேண்டாம். உண்மையாக இருந்தக் கருத்தைத்தான் நான்

[திரு. சு. முத்துசாமி] [1987 நவம்பர் 13

இங்கே சொல்லியிருக்கிறேன். எனவே உண்மையான ஒரு நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட்டு இருக்கும் என்ற உணர்வில் இந்த சட்டத்தை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ நாங்கள் லாவகமாகப் பேசியதாகச் சொல்லிக் கொண்டு அவர் லாவகமாகப் பேசினார்கள். அதிலே 2 விஷயங்களை நான் சம்பந்தப்பட்டவரை குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒன்று, தொழிலாளர்கள் தனியார் துறையில் சட்ட ரீதியாக உரிமைகளை அனுபவிக்க முடியாத ஒரு துர்ப்பாக்கியம் நிலவுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு என்ன ஆலோசனை என்று நான் சொன்னேன். நான் சொன்ன ஆலோசனை எந்த விதமான சட்ட ரீதியான தடைகளும் இல்லாமல் திருத்தங்களைக் கொண்டு வர வாய்ப்பு இருந்தும் மனம் இல்லை என்பதைத்தான் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்று நான்குறிப்பிடுகிறேன்.

அடுத்து, இன்னும் ஒன்று, இது 1987 ஆம் ஆண்டு. 1977-ஆம் ஆண்டில் இந்தப் பேரவையில் அன்றைக்குக் கம்யூனிஸ்டு கட்சியில் இருந்த திரு. அம்பிகாபதி அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதனால்தான் திரு. அம்பிகாபதி உங்கள் கட்சியில் இப்போது இருந்துக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 2—10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தொழிலாளிகளைப் பொறுத்த வரையில் எங்களுக்கு அக்கறை இல்லாமல் இல்லை. அதைத்தான் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். போக்குவரத்துக் கழகத்திலே இப்போது நல்ல சம்பளம் கிடைக்கிறது என்று மனதாரப் பாராட்டினார்கள். இன்றைக்காவது பாராட்டினார்களே என்பதற்காக நன்றி. எனவே தனியார் துறையில் இருப்பவர்களுக்கும் கிடைக்க வேண்டும். உதாரணமாக, போக்குவரத்துத் துறை இருக்கிறது. சிவில் சப்ளைஸ் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு துறையும் அதற்காக சட்டத்தை இயற்றிக் கொண்டிருந்தால், சரியாக இருக்காது. ஒரு 'யூனிஃபார்மிடியும்' இருக்காது. எனவே அதற்காகத்தான் இந்தத் துறையே தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. எனவே தனியார் துறையில் இருக்கின்ற அல்லது அரசு சார்பில் எல்லாத் துறைகளிலேயும் இருக்கின்ற தொழிலாளிகளுக்கு ஒட்டு மொத்தமாகச் சேர வேண்டிய நன்மைகளைப் பெற்றுத் தர வேண்டிய துறையாக இந்தத் துறை இருந்து கொண்டிருக்கிறது. எனவே ஒட்டு மொத்தமாக நன்மைகளை இந்தத் துறையே செய்ய வேண்டியிருக்கிறது.



1987 நவம்பர் 13] [திரு. சு. முத்துசாமி]

இன்னொன்றை திரு. அம்பிகாபதி பற்றிச் சொன்னீர்கள். ஒரு வேளை அந்த இடத்தில் அமர்ந்திருக்கின்ற காரணத்தால் உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு ஆசை வந்திருக்கிறதோ என்று எனக்குத் தெரியாது.

திரு. கே. சுப்பராயன் : இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அவர் மறுத்து விட்டால் அதிலே எனக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. அவர் மறுக்கிறபோது நான் வேண்டாம் என்று சொல்வதற்குத் தயாராக இல்லை. உங்களுடைய உணர்வு அதுவாக இப்போது பிரதிபலித்து விட்டீர்கள். நன்றி. உங்களுடைய உணர்வினை வெளிக் காட்டியதற்கு நன்றி. அதைப் பற்றி நான் சொல்லவில்லை. இன்னொரு உறுப்பினருடைய உணர்வைப் புண்படுத்துகிற போது நாம் அதைப் பற்றி யோசிக்க வேண்டும். (குறுக்கீடு). எனக்கு இது யதார்த்தமாகத் தெரிந்திருக்கலாம். இப்போது யதார்த்தமில்லை என்று நீங்கள் சொல்லியதற்குப் பிறகு நான் அதை இல்லை என்று எடுத்துக் கொள்ளலாம். அது வேறு விஷயம்.

ஆனால் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு உங்களுடைய கட்சியின் தலைவர் இங்கேதான் இருந்தார். திரு. அழகர்சாமி அவர்களும் இன்றைக்கு உங்கள் கட்சியில் இருக்கிறார். அவர் அதை அன்றைக்கு மறுத்துச் சொல்லவில்லை. அதற்குப் பின்னாலும் சட்டமன்றத்திலே இப்படி நம்முடைய கொள்கைக்கு முரணாக திரு. அம்பிகாபதி பேசிவிட்டார் என்பதற்காக உங்களுடைய கட்சியில் எந்தவிதமான எதிர்ப்புத் தீர்மானமோ, அல்லது கருத்துக்களோ சொல்லப்படவில்லை என்ற காரணத்தால்தான், அந்தக் கருத்து உங்களுடைய கட்சியினுடைய கருத்தாக இருக்குமென்று நான் ஏற்றுக் கொண்டேன். உங்களுடைய கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் இப்படி ஒவ்வொரு கருத்து இருக்குமென்று நான் நம்ப முடியாது இல்லையா ?

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் கொள்கை நிலைக்கு எதிராக தாங்கள் அங்கம் வகிக்கின்ற இடங்களிலே பேசியவர்களை உரிய வடிவத்திலே எங்கள் கட்சி தண்டித்தது. ஆனால் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் எங்கள் கட்சியில் ஒவ்வொருவருக்கும் ஒரு கொள்கை நிலை அல்ல. **

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 நவம்பர் 13

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சரவர்
கள் 1983-லே நடந்த விவாதத்தை இங்கே எடுத்துச் சொன்
னார்கள். நான் அன்றைக்கே சொன்னேன். நேஷனலைலேஷன்
என்பது உங்களுடைய டிக்ளேர்டு பாலிசி. அதிலே ஒரு நட்
பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் 'எண்ட்-
டு-எண்ட் ரூட்டிலே' இன்றைக்குத் தனியார் பஸ் ஓட்டு
வதற்கு அனுமதி வழங்கக் கூடிய முறையிலே உள்ள அந்த
ஏற்பாடு நிச்சயமாக நேஷனலைசேஷன் பாலிசிக்கு
முரணில்லையா என்பது என்னுடைய கேள்வி ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கனவே நான்
சொன்னபடி அந்தக் கொள்கைக்கு எதிரான கொள்கையல்ல.
அந்தக் கொள்கையைச் சிறப்பாகச் செய்து விட வேண்டுமென்
பதற்கு இப்போது சரிசெய்து கொள்கிறோம். எனவே அதற்காகத்
தான் இந்த சட்ட முன்வடிவு. எதிரானது அல்ல. எனவே
அந்தச் சூழ்நிலையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு சுப்பராயன்
அவர்கள் சொன்ன வார்த்தைகள் **
என்பது நீக்கப் பெறுகிறது. (குறுக்கீடு) அமைச்சர் மிகத்
தெளிவாகக் கேட்டார். இங்கே சட்டமன்றத்தில் பேசப்பட்ட
கருத்துக்கு மாநிலக் குழுவோ அல்லது கட்சியோ அல்லது வேறு
ஸ்தாபனமோ அது தவறு என்று அறிக்கை விட்டீர்களா என்று.
(குறுக்கீடு) அது அவருடைய தனிப்பட்ட கருத்து. அப்படி
அறிக்கை விட்டிருந்தால், பதில் சொல்லுங்கள். அதற்காகப்
போய் அது * *
என்று சொல்வது சரியல்ல.

திரு. கே. சுப்பராயன் : டெபுட்டி ஸ்பீக்கர் சார், இது
நியாயமல்ல.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அதிலே ஒரேயொரு கருத்து.
நான் சொல்லும்போது அதை அவர் சரியாகக் கவனிக்கவில்லை
என்றே கருதுகிறேன். மீண்டும் சொல்கிறேன். அதிலே
இருக்கின்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து
இருக்குமென்று நான் நம்பவில்லை என்று சொன்னேன். அதை
நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா ? நான் நம்பவில்லை.
எனவே அப்படித்தான் நான் சொன்னேனே தவிர, நான்
நம்புகிறேன் என்று சொல்லவில்லை. ஆனால் நீங்கள் குற்றச்
சாட்டு சொல்கிறபோது * * *
என்று சொன்னீர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.



1987 நவம்பர் 13]

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் பதிலுரைக்கின்றபோது திராவிட முன்னேற்றக் கழகம் படிப்
படியாக இந்த நாட்டுடைமையாக்கும் திட்டத்தை நிறைவேற்றும்
என்று தெரிவித்தார்கள். அதன்படிதான் நாங்களும் நடக்கி
றோம் என்று தெரிவித்தார்கள். நன்றி. ஆனால் ஒரு வாய்ப்பு
இருந்தும், நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருந்தும் நீதி மன்றம் தனி
உடமையாளர்களுக்கு எதிராகத் தீர்ப்பளித்திருந்தும் அந்த
வாய்ப்பைப் பயன்படுத்த முடியாது என்று சொல்லி, தனியா
ருக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற ஒரு சட்டத்தை இங்கே கொண்டு
வருவார்களானால், இது நாட்டுடைமைக் கொள்கைக்கு முரணான
சட்டம் என்பதைத்தான் நான் இந்த மன்றத்திலே எடுத்து வைக்க
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்
களே, நான் சொன்னதிலே அவர், அவருக்கு வேண்டிய பகுதியை
மட்டும் எடுத்துக் கொண்டார் என்று கருதுகிறேன். படிப்படி
யாக நீங்கள் நேஷனலைஸ் செய்ய வேண்டுமென்று உங்களுடைய
கொள்கையை ஒரிஜினலாகக் கொண்டு வந்தது என்னவோ
உண்மை. ஆனால் அதைச் செய்யவில்லை. அந்த நோக்கம்
இல்லாமல் போய்விட்டது என்பதுதான் என்னுடைய கருத்து.
நீங்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்ட வண்டி
களைத் தேசியமயமாக்க வேண்டுமென்று நினைத்தது ஒரு பக்கம்.
இன்னொரு பக்கம் உங்களுடைய காலத்திலே பேருந்துகள்
கொடுக்க வேண்டுமென்று 2,085 பேருந்துகள் புதிய வழித்தடங்
களில் கொடுத்திருக்கிறீர்கள். இது எப்படி தேசீயமயமாகும்
என்றுதான் கேட்டேன். அல்லது நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்
டும். இன்றைய சூழ்நிலையிலே நம்முடைய அரசாங்கத்தினால் இவ்
வளவு பேருந்துகளை விடுவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே,
தனியாருக்குக் கொடுக்கின்றோம், பின்னாலே எடுத்துக்கொள்ள
லாம் என்ற அந்த வாதத்தை நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்.
அந்த வாதம் எங்களுக்கும் பொருந்தும் அல்லவா ? அதைத்தான்
நான் சொல்கிறேன். இன்றைக்கும் கூட நாங்கள் படிப்படியாக
செய்கிறோம் என்று சொல்லுகின்றபோது, அன்றைக்கு நீங்கள்
ஒரு ஆண்டுக்கு விட்ட பேருந்துகள் ஏறத்தாழ 300—ஓ, 400—ஓ;
ஆனால் இன்றைக்கு இந்த அரசாங்கம் 1,400 பேருந்துகளை ஒரு
ஆண்டுக்கு விடுகிறது. அதை நீங்கள் நினைத்துப் பார்க்க
வேண்டும். இன்றைக்கு நாங்கள் கிராமங்களுக்குப் போகின்ற
போது உள்ள உணர்வைக் சொல்கிறேன். கிராமத்திலே இருக்
கின்ற மக்கள் எப்படியாவது ஒரு பஸ் காலையிலேயும், மாலையி
லேயும் எங்கள் ஊருக்கு வந்தால் போதும் என்று
திண்டாடுகின்ற அளவுக்கு கிராமங்கள் எத்தனையோ
இருக்கின்றன. அது திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சிக் காலத்தில் இல்லை என்று அர்த்தமா ? தேசீயமயம் செய்
கிறோம் என்று இந்தமக்களை ஏமாற்றிவிடக்கூடாது. அதனுடைய
அடிப்படையிலே, இந்த மக்களுக்கு என்ன நன்மை ? நாள்
தோறும் அவர்களுக்கு எது தேவையோ அதைச் செய்துவிட்டு

[திரு. சு. முத்துசாமி] [1987 நவம்பர் 13

அதற்குப் பின்னால் இந்தக் கொள்கையை நிறைவேற்றுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினால்தான் நாங்கள் இதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைமுன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 3,

(i) In sub-clause (1), for the expessson 'on such portion of the route covered by the draft scheme or the approved scheme, as may be specified, the following shall be substituted :

On the entire route covered by the draft scheme or approved scheme, or on such portion of the route covered by the draft scheme or approved scheme, as may be specified,

(ii) in sub-clause (2), for the expression on any portion of the following shall be substituted :

On the entire route or any portion of the route.

(iii) in sub-clause (3), for the expression such portion of the route, the following shall be substituted ;
the entire route or portion of the route,



1987 நவம்பர் 13]

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clase 4, for the expression on any portion of the route, the following expression shall be substituted :

On the entire route or any portion of the route

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5 மற்றும் 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 7.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 7 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause 7, for the expression the provisions of Section 3 as if the said sections 3' the following expression shall be substituted ;

'the provisions of this Act' as if this Act'."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

[1987 நவம்பர் 13

பிரிவு 7, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 8, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 42/1987) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 2-20)

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை அவைக்கு அளிக்கும் நாள் :

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

'' 1981-82 மற்றும் 1982-83-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1987-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16-ஆம் நாள் திங்கட்கிழமை-ஐக் குறித்துள்ளார்கள் ''.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16—11—1987 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1987 நவம்பர் 13]

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

93. வருமானங்கள் திரட்டுதல் மற்றும் செலவினங்களை மேற்கொள்ளுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 29—6—87-ம் நாளிட்ட 716-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து—சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.[

94. 1960-ஆம் ஆண்டு மதிப்பீடு, வரிவிதிப்பு மற்றும் நன்கொடைச் செலவுகள் பிடித்தம் செய்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 6—7—1987-ஆம் நாளிட்ட 750-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.[1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

95. கீழ்மங்கலம் மற்றும் கிருஷ்ணகிரி அங்காடிப் பகுதிகளிலுள்ள சில கிராமங்களை ராயகோட்டை அங்காடியின் அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 3—6—1987-ஆம் நாளிட்ட 1052-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

96. 1982-83-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை, [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சடடத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

97. 1983-84-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

98. 1984-85-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்),

[1987 நவம்பர் 13

99. 1984-85-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

100. 1985-86-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

15. 1987-88-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

16. 1987-88-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

17. 1987-88-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
136538
D
Y211,31 N87
N87.45-2